# இஸ்லாம்

# சமாதானமும் மனிதநேயமும்

மௌலவி எஸ். எச். ஆதம்பாவா M.A.

கலமுஷ் - ஷர்க் வெளியீடு 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாம்

## சமாதானமும் மனிதநேயமும்

மௌலவி எஸ். எச். ஆதம்பாவா M. A.

கலமுஷ் - ஷர்க் வெளியீடு 2
2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title : **ISLAM : SAMATHANAMUM MANITHANEYAMUM**
(Islam : Peace & Humanism)

Author : **MOULAVI S. H. ATHAMBAWA**
B. A. Hons (SL), B. A. Lit (KSA), M. A. (SL)

First Eduition : **2003 DECEMBER (1500 Copies)**

Copyright© : **AUTHOR**

Publishers : **KALAMUSH-SHARQ PUBLICATION BUREAU**
**72, AL-HILAL ROAD,**
**SAINTHAMARUTHU - 11.**
**067-2221965**

Printers : **STAR OFFSET PRINTERS**
**SAINTHAMARUTHU 067-2229414**

Price : **120/=**

ISBN : **955 - 8999 - 00 - 8**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

**சமாதானத்தை நேசிக்கும்**
**சகல இதயங்களுக்கும்**
**இந்நூல் சமர்ப்பணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | அணிந்துரை | v |
| 02. | முன்னுரை | vii |
| 03. | இஸ்லாம் உலகளாவிய மார்க்கம் | 01 |
| 04. | மனித இனம் : மனிதனின் மாண்பு | 12 |
| 05. | மனிதர்கள் ஓரினம் | 14 |
| 06. | நிற, மொழி பேதங்கள் இஸ்லாத்தில் கிடையாது | 17 |
| 07. | தனக்குக் கீழ் உள்ளவர்களுடன் நேயமாக | 27 |
| 08. | மிருகங்கள்மீது கருணையாக | 32 |
| 09. | தொழிலாளர்களுடன் அன்பாக | 38 |
| 10. | பெண்களுடன் அன்பாக | 44 |
| 11. | மனித சேவையும் மார்க்க சேவையே | 47 |
| 12. | மனித நேய மாநபி | 50 |
| 13. | இஸ்லாமும் நீதியும் | 53 |
| 14. | அநியாயம் செய்தல் | 68 |
| 15. | இஸ்லாமும் ஜிஹாதும் | 77 |
| 16. | போரிலும் பக்குவம் | 88 |
| 17. | குழப்பங்களும் பயங்கரவாதமும் | 91 |
| 18. | பிறசமயத்தவர்களுடன் ஒப்பந்தங்கள் | 96 |
| 19. | பிறசமயங்களுடன் இணக்கமாக | 101 |
| 20. | கட்டாய மதமாற்றம் இஸ்லாம் ஏற்காது | 110 |
| 21. | நடுநிலை சமுதாயம் | 113 |
| 22. | இறுதியாக | 116 |
| 23. | துணை நின்றவை | 118 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகரகம கபூரிய்யா அறபுக்கல்லூரி அதிபரும்
அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா சபையின் முன்னாள் தலைவருமான
மௌலவி எம்.எம்.ஏ. முபாறக் B.A. (மதனி) அவர்கள் வழங்கிய

## அணிந்துரை

அருளாளனும் அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே புகழனைத்தும் உரித்தாவதாக! அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் சாந்திக்கு வழிகாட்டிய இறுதித்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது சொரியட்டுமாக.

சாந்தியின்
சமாதானத்தின்
ஜீவகாருண்யத்தின்
நீதியின்
பெண்ணுரிமையின்
பொதுப் பணியின்
மனித நேயத்தின் - மார்க்கம் இஸ்லாம் ஒன்றே!

அநியாயத்தை
பயங்கரவாதத்தை
மதமாற்றத்தை முற்றிலும் தடுக்கும் மார்க்கமே இஸ்லாம்
பிறரோடு அன்னியோன்னியமாக வாழவேண்டும்
அறப்போரிலும் அவதானம் வேண்டும்
அல்லாஹ்வின் போதனைப்படியே திகழவேண்டும்
அதுவே நடுநிலையான சமூகத்தின் அடையாளம்
என்று கூறும் - மார்க்கம் இஸ்லாம் ஒன்றே!

இந்தக் கருத்துக்களை குர்ஆன், ஹதீஸ் வரலாறு முதலியன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் நிறுவி 'இஸ்லாம் சமாதானமும் மனித நேயமும்' என்று தனது நூலுக்கு நாமமிட்டுள்ளார் சகோதரர் மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா (மதனி M.A.) அவர்கள்.

கல்முனை அல்-ஹாமியாவின் அதிபராகவும் கிழக்கிலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவராகவும் இருந்து பணியாற்றும் அவர் அறிமுகமில்லா ஒருவரல்ல. ஏற்கனவே பல நூற்கள் எழுதிய அவரின் இஸ்லாம் : சமாதானமும் மனிதநேயமும் என்ற இந்நூல் மூலம் முஸ்லிம்களும், முஸ்லிமல்லாத தமிழ்மொழி பேசும் எவரும் புனித இஸ்லாத்தைப் பற்றி அறியவும் அது ஒரு சிறப்பான தனித்துவமான மார்க்கம் என்பதை விளங்கிக் கொள்ளவும் உதவும் என்பது எனது நம்பிக்கையாகும்.

பிராணிவதை நடைபெறுகிறது, கட்டாய மதமாற்றம் நிகழ்கிறது, புனிதப் போரின் பெயரால் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுகிறது என்ற எந்தக் குற்றச்சாட்டு களுக்கும் இஸ்லாம் காரணமல்ல. அது உலகோர் யாவராலும் ஏற்று நடக்க முடியுமான மானிடருக்குப் பொதுவான உலகளாவிய மார்க்கம் என்பதை ஆசிரியர் நிரூபித்துள்ளார். அன்னாரின் இந்நூல் மூலம் யாவரும் பயன்பெற அல்லாஹ் அருள்புரிவானாக ஆமீன்.

இவ்வண்ணம்
இஸ்லாமிய ஊழியன்
**எம். எம். அஹ்மத் முபாறக்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எல்லாப்புகழும் ஏகவல்ல அல்லாஹ்வுக்கே! சலவாத்தும் சலாமும் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் கிளையார்கள், தோழர்கள் மீதும் உரித்தாகுக!

'இஸ்லாம்' அதன் பெயரைப் போன்றே உலகெங்கும் சமாதானத்தைப் பரப்பும் மார்க்கமாக மனித உரிமைகளை வழங்கி, மனித நேயத்தை வளர்க்கும் ஒரு வேலைத்திட்டமாக அகிலம் நீதி நியாயத்துடன் நிரம்பி வழியவேண்டும் என எதிர்பார்க்கும் ஒரு வழிமுறையாகவுள்ளது.

ஆனால், அது துரதிஷ்டமாக பிழையாக விளங்கப்பட்ட மார்க்கமாகக் காணப்படுகின்றது. அதன் போதனைகள், அகிம்ஷைகள் பற்றி அறியாதவர்களால் அது பயங்கர வாதத்தைத் தூண்டும் மார்க்கமாக பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

எனவேதான் இஸ்லாம் மனிதநேயத்தை - மனித உரிமைகளைப் பற்றிக் கூறுகின்ற விடயங்களையும் நீதி, நியாயத்தை உலகில் நிலைநிறுத்தி சமாதான பூமியாக அதனைப்பார்க்க அது காட்டும் ஆர்வத்தையும் விளக்க அவாக்கொண்டதன் பேறுபேறே இந்நூல்.

இதன்முதல் பகுதியில் இஸ்லாம் மனிதநேயத்தை எவ்வாறு வலியுறுத்துகிறது என்பதை பல்வேறு தலைப்புக்களிலும் நீதி, நியாயத்தையிட்டு அதன் நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தியுள்ளேன்.

இரண்டாம் பகுதியில் உலக சமாதானத்தை அது எவ்வாறு வலியுறுத்துகிறது, பயங்கரவாதத்தை அது எவ்வாறு கண்டிக்கின்றது போன்ற விடயங்களைத் தெளிவுபடுத்தி இஸ்லாம் சமாதானத்தையும் மனிதநேயத்தையும் வலியுறுத்தும் மார்க்கம் என்பதை இயன்றவரை நிறுவ முயன்றுள்ளேன். எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதத்துக்கு ஆதாரமாக பெரும்பாலும் அல்-குர்ஆனின் வசனங்களை கையாண்டுள்ளேன். ஏனெனில், ஒரு முஸ்லிம் குர்ஆனின் போதனைக்குக் கட்டுப்பட்டவன். இஸ்லாத்தின் மூலாதாரங்களில் முதன்மையானதும் அல்-குர்ஆனேயாகும்.

இந்நூலை வாசிக்கும் வாசகர்கள் இஸ்லாம் நீதி, நியாய, மனிதநேய, சமாதான மார்க்கமா அல்லது குழப்பங்களையும் பயங்கரவாதங்களையும் உருவாக்கி உலகைப் பிணக்காடாகப் பார்க்க விரும்புகின்ற மார்க்கமா என்பதை மதிப்பீடு செய்து கொள்ள முடியும்.

இன்று எங்கு பார்த்தாலும் ஏதோ ஒருவகையில் அமைதி யின்மை காணப்படுவது துரதிஷ்டமாகும். இதன் காரணங்கள், பின்னணிகள் கண்டறியப்படாமல் வீணாக அவர்கள் சார்ந்த சமயங்களைக் குற்றம் சுமத்திக்கொண்டிருப்பது கூடாது.

மனித உரிமைகளை வழங்கும் விடயத்தில் இஸ்லாம் என்றும் முன்னிலையில் திகழ்ந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப்பிரகடனத்தை 1948 டிசம்பர் மாதமே வெளியிட்டது. சுதந்திரம், சமத்துவம் சொத்துரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டென்றும் அதனைக் கண்ணியப்படுத்துதல் அனைவரினதும் கடமையென்றும் அது பிரகடனப்படுத்தியது.

ஆனால், மனித உரிமைப் பிரகடனத்தை வெளியிட்ட ஐ.நா.சபை மனித உரிமையைத் துச்சமாக மதித்து அதனைக் களங்கப் படுத்துவோருடன் கைகோர்த்து நிற்பதும், பலஸ்தீன மண்ணில் யூத அரசை நிறுவி பலஸ்தீன மக்களின் நில உரிமை, வாழ்வுரிமையைப் பறித்து அவர்களை நடுத்தெருவில் விட்டிருப்பதும் தற்போது ஆப்கானிலும், ஈராக்கிலும் அமெரிக்கா வினால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள மனித உரிமை மீறல்களை யிட்டு மாற்றாந்தாய் மனப்பான்மையைக் கொண்டிருப்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிக்கத்தக்கது. இதன் மூலம் மனித உரிமைப் பிரகடனத்தை கேலிக்குரியதாக்கியுள்ளது ஐ. நா. சபை.

ஆனால் இஸ்லாமோ 1400 ஆண்டுகளுக்குமுன் மனித உரிமைப் பிரகடனத்தை வெளியிட்ட முறையும் வெளியிட்ட இடமும் தினமும் மனித உரிமை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

உலக முஸ்லிம்கள் 'ஹஜ்' வணக்கத்திற்காக மக்காவில் ஒன்று கூடும் சந்தர்ப்பத்தில் அதன் புனித இடம் ஒன்றில் வைத்து "இந்த மாதம், தினம், இடம் எவ்வளவு சங்கை வாய்ந்ததோ அதேபோல் மனிதனின் இரத்தமும் (உயிரும்) சொத்தும் மானமும் கண்ணியமானது" என்ற பிரகடனத்தை நபி (ஸல்) அவர்கள் வெளியிட்டார்கள்.

அதாவது புனித மக்காவின் கௌரவத்தைப்போன்று புனிதமிக்க ஹஜ்ஜுமாதத்தின், ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தின் கௌரவங்களைப்போன்று மனித உயிர், மனிதனின் உடமைகள், சொத்துக்கள், அவனது மானம் என்பனவும் புண்ணியமானது என்று பிரகடனப்படுத்தப்பட்ட வரலாற்றை மனித உரிமை வரலாற்றில் காட்ட முடியுமா?

அடிமைகளைச் சொத்தாகக் கருதிய ஒரு சமுதாய அமைப்பை அடிமைகளற்ற சமுதாயமாக மாற்ற இஸ்லாம் 1400 ஆண்டுகட்கு முன் கையாண்ட வழிமுறை காரணமாக அடிமைகளற்ற உலகைக் காணமுடிகின்றது. குற்றம் செய்த ஒருவர் குற்ற விடுதலை பெறுவதற்காக அடிமைகளை உரிமையிடும் முறையை இஸ்லாம் அறிமுகம் செய்ததை மனித உரிமை ஆர்வலர்கள் மறந்துவிட முடியாது.

எனவே இஸ்லாம், மனிதனின் உரிமைகளை வழங்கி அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவத்தை உயர்த்திய மார்க்கமே தவிர, உலகம் பிணக்காடா வதைக் கண்டு மகிழ்வுறும் சமயமல்ல. இந்த உண்மைகளை இந்நூலை வாசிக்கும் வாசகர்கள் அறிந்து கொள்வர்.

சமாதானத்தை நேசிக்கும் இஸ்லாத்தின் நிலையை இந்நூல் மூலம் எடுத்துக்கூற வாய்ப்பளித்த வல்ல அல்லாஹுத்த ஆலாவுக்கே எல்லாப்புகழும். புனித றமழான் (2003) விடுமுறையைப் பயன்படுத்தி, எனது உள்ளத்தில் இருந்த வேட்கையை இந்நூல் மூலம் வெளிக்கொணர்ந்துள்ளேன். ஏற்கனவே என்னால் எழுதப்பட்ட நான்கு நூல்களுக்கும் வாசகர்கள் வழங்கிய ஆதரவுபோல் இந்நூலுக்கும் வழங்குவர் என்பது திண்ணம்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய மகரகம கபூரிய்யா அறுபுக்கல்லூரி அதிபர் அஷ்-ஷேக் எம்.எம்.ஏ. முபாறக் அவர்கட்கும் இப்புத்தகத்தை நேர்த்தியாக அச்சிட்டது முதல் அட்டைப் படத்தையும் வடிவமைத்துத் தந்த சாய்ந்தமருது ஸ்டார் ஒப்செற் நிறுவனத்தின் உரிமையாளர் அல்-ஹாஜ் எம்.ஐ. ஹதியத்துள்ளாஹ் இஸ்மாயில் அவர்கட்கும் அவரது நிறுவன ஊழியர்கள் அனைவருக்கும் இந்நூலுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கும் அனைத்து வாசகர்கட்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எனது இம்முயற்சியை புனித தீனுக்குரிய சேவையாக ஏற்று எல்லாம் வல்ல அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக!

**மௌலவி. எஸ்.எச். ஆதம்பாவா**
72, அல்-ஹிலால் வீதி,
சாய்ந்தமருது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாம் உலகளாவிய மார்க்கம்

## இஸ்லாம்

இது ஓர் அறபுச்சொல். சாந்தி, சமாதானம் என்பது இதன் பொருள், 'ஸலாம்' என்ற சொல்லில் இருந்து பிறந்தது. அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களிலும் இது (ஸலாம்) ஒன்று.

ஒரு முஸ்லிம் தன்னைச் சந்திக்கும் ஒருவருக்குச் செலுத்தும் காணிக்கையாக, வந்தனமாக இவ்வார்த்தையே பயன்படுத்தப் படுகிறது. அவ்வாறே பயன்படுத்த வேண்டும் என்று இஸ்லாம் பணிக்கிறது.

சுவர்க்கத்தில் வாழ்வோர் தம்மிடையேயும், அவர்கட்கு வானவர்களும் செலுத்தும் காணிக்கையும் இவ்வார்த்தையேதான். சுவனத்தில் விசுவாசிகள் பிரவேசிக்கும்போதும் வானவர்கள் இதனைக் கூறியே வரவேற்பர் என்கிறது அல்-குர்ஆன்.

தனக்கு அறிமுகமானவராயினும் இல்லாதவராயினும் இவ்வார்த் தையை உபயோகித்து "ஸலாம்" கூறுமாறு பணிக்கின்றார்கள் நபிதூதர் அவர்கள்.

ஒரு கூட்டத்தைச் சந்திக்கும்போது, ஒரு வீட்டினுள் நுழையும் போது, அதனுள் ஆட்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இவ்வார்த்தையைக் கூறுமாறு அது வேண்டுகிறது.

"அஸ்ஸலாமு அலைக்கும்"
உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!
ஒருவரைச் சந்திக்கும்போது இவ்வார்த்தையை - பிரார்த்தனையை கூறிய பின்னர்தான் பேச்சை ஆரம்பிக்க வேண்டுமென அது கட்டளையிடுகிறது. அறிமுகமானவராயினும் இல்லாவிட்டாலும் இவ்வார்த்தையைக்கூறி சமாதானத்தைப் பரப்புங்கள் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளை மூலம் உலகமே சமாதான பூமியாகத்திகழ வேண்டும் என அது எதிர்பார்க்கிறது.

வந்தனம் கூறப்பயன்படும் வசனத்துக்கு 'சமாதானம் உங்கள் மீது உண்டாவதாக' எனப் பொருள் இருப்பது ஓர் அழகு. அவ்வாறு பிரார்த்தனைக்குப் பயன்படும் வார்த்தையில் இருந்து இம் மார்க்கத்தின் பெயர் வந்திருப்பது மற்றோர் அழகாகும்.

## வரைவிலக்கணம்

'இஸ்லாம்' என்ற சொல்லுக்கு மேற்கண்டவாறு அகராதிப் பொருள் இருப்பினும் 'அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று அவன் விலக்கியவற்றைத் தவிர்த்து அவனுக்கு முற்றிலும் அடிமைப் பட்டிருத்தலையே இஸ்லாம் மார்க்கம்' என வரையறுக்கப்படுகிறது.

இம்மார்க்கம்தான் அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என அல்-குர்ஆன் கூறுகிறது.

إِنَّ ٱلدِّينَ عِندَ ٱللَّهِ ٱلْإِسْلَـٰمُ

*நிச்சயமாக அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம்தான்*

(அல்-குர்ஆன் 3:19)

وَمَن يَبْتَغِ غَيْرَ ٱلْإِسْلَـٰمِ دِينًا فَلَن يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِى ٱلْـَٔاخِرَةِ مِنَ ٱلْخَـٰسِرِينَ

*எவர் இஸ்லாம் அல்லாததை மார்க்கமாக எடுத்துக் கொள்கிறாரோ நிச்சயமாக அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அவர் இறுதி நாளில் மிகவும் நஷ்டமடைந்தவராவர்.*

(அல்-குர்ஆன் 3:85)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அல்-குர்ஆன் இஸ்லாத்தின் மீதான இறை அங்கீகாரத் தைப் பறைசாற்றுகிறது.

## இஸ்லாத்தின் தோற்றம்

நபி முஹம்மது (ஸல்) அவர்கள் போதித்தது மாத்திரம் இஸ்லாம் அல்ல. உலகில் இறை தூதர்களாக அனுப்பப்பட்ட, நூஹ் முதல் இப்றாஹீம், மூசா, ஈசா உட்பட அனைவரும் இப்புனித இஸ்லாத்தையே போதித்ததாக அல்-குர்ஆன் வலியுறுத்துகிறது.

مِّلَّةَ أَبِيكُمْ إِبْرَاهِيمَ هُوَ سَمَّاكُمُ الْمُسْلِمِينَ

*இது உங்கள் பிதாவாகிய இப்றாஹீமுடைய மார்க்கமாகும். அவர்தான் இதற்கு முன்னர் உங்களுக்கு முஸ்லிம்கள் எனப் பெயரிட்டவர்.* (அல்-குர்ஆன் 22:78)

مَا كَانَ إِبْرَاهِيمُ يَهُودِيًّا وَلَا نَصْرَانِيًّا وَلَٰكِن كَانَ حَنِيفًا مُّسْلِمًا وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِينَ

*இப்றாஹீம் யூதராகவோ, கிறிஸ்தவராகவோ, இணைவைத்து வணங்குவோராகவோ இருக்கவில்லை. அவர் முஸ்லிமாகவே இருந்தார்.* (அல்-குர்ஆன் 3:67)

இவ்வாறு நபி முஹம்மத் (ஸல்) அவர்கட்கு எவ்வளவோ காலத்துக்கு முந்திய இப்றாஹீம் (அலை) அவர்கள் பற்றி அல்-குர்ஆன் பிரஸ்தாபிக்கிறது. இந்த இப்றாஹீம் நபியின் இரு புதல்வர்களில் ஒருவரான இஸ்ஹாக் (அலை) அவர்களிலிருந்தே இஸ்ரவேலர்கள் - யூதர்கள் உருவானார்கள் என்பதும் மற்றவரான இஸ்மாயீல் (அலை) அவர்களிலிருந்துதான் அறபிகள் உருவானார் கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நபி இப்றாஹீம் அவர்களும் அவர்களின் புதல்வர் இஸ்மாயீல் அவர்களும் புனித க∴பாவின் அடித்தளங்களை கட்டி உயர்த்திய பின், பின்வருமாறு பிரார்த்தித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

رَبَّنَا وَٱجْعَلْنَا مُسْلِمَيْنِ لَكَ وَمِن ذُرِّيَّتِنَآ أُمَّةً مُّسْلِمَةً لَّكَ

*"எங்கள் இறைவனே! எங்களிருவரையும் உனக்கு (முற்றிலும்) கீழ்ப்படிகிற(முஸ்லிமான)வர்களாகவும், எங்களுடைய சந்ததியிலிருந்து ஒரு கூட்டத்தினரை உனக்குக் கீழ்ப் படிகிறவர்களாகவும் ஆக்கிவைப்பாயாக"* (அல்-குர்ஆன் 2:128)

முஸ்லிம் என்ற வார்த்தை அதைவிடப் பழமையானது என்பது பின்வரும் அல்-குர்ஆன் வசனம் மூலம் தெளிவாகின்றது. அல்லாஹ்வின் தூதர்களில் முதல்வரான நபி நூஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

وَأُمِرْتُ أَنْ أَكُونَ مِنَ ٱلْمُسْلِمِينَ

*முஸ்லிம்களில் ஒருவனாக இருக்குமாறு நான் ஏவப்பட்டுள்ளேன்.*

(அல்-குர்ஆன் 10:72)

நபி யூசுப் (அலை) அவர்கள் பின்வருமாறு பிரார்த்தனை புரிகின்றார்கள்;

تَوَفَّنِى مُسْلِمًا وَأَلْحِقْنِى بِٱلصَّٰلِحِينَ

*என்னை முஸ்லிமானவனாகவே மரணிக்கச் செய்வாயாக! நல்லோர்களுடன் என்னையும் சேர்த்துக் கொள்வாயாக!*

(அல்-குர்ஆன் 12:101)

மூஸா நபிக்கு எதிரியாக இருந்தவன் பிர்அவ்ன் எனும் அரசன். அவனும் அவனது படையினரும் மூஸாவையும் அவரது தோழர்களையும் துரத்தியபோது கடல் குறுக்கிடவே கடலைப் பிளக்கச் செய்து மூஸாவும் தோழர்களும் தப்பிவிட, அதே கடலினுள் சென்ற பிர்அவ்ன் அக்கடலினுள் மூழ்கடிக்கப்பட்டான். அவ்வாறு மூழ்கடிக்கப்பட்டவேளை அவன் கூறிய வார்த்தையை அல்-குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

قَالَ ءَامَنتُ أَنَّهُۥ لَآ إِلَٰهَ إِلَّا ٱلَّذِىٓ ءَامَنَتۡ بِهِۦ بَنُوٓاْ إِسۡرَٰٓءِيلَ وَأَنَا۠ مِنَ ٱلۡمُسۡلِمِينَ

*"இஸ்ரவேலர்கள் (மூஸாவின் ஆட்கள்) விசுவாசித்திருக்கும் இறைவனை நானும் விசுவாசிக்கிறேன். அவனைத் தவிர வேறு நாயன் இல்லை. நான் அவனுக்கு முற்றிலும் வழிபடும் முஸ்லிமாக இருக்கிறேன்" எனக் கூறினான்.* (அல்-குர்ஆன் 10:90)

மேற்காணும் அல்-குர்ஆனின் வசனங்கள் மூலம் முந்தைய நபிமார்கள் போதித்த மார்க்கம் இஸ்லாம்! அதனைப் பின் பற்றியோர் முஸ்லிம்கள் ஆவார்கள். இந்த இஸ்லாத்தைப் போதிப்பதற்காகவே பல்வேறு தூதர்கள் அனுப்பப்பட்டார்கள். அத்தொடரிலேயே நபி முஹம்மது (ஸல்) அவர்களும் நபியாக அருளப்பட்டு முந்தைய நபிமார்களின் மார்க்கத்தை தொடர்ந்து போதித்தார்கள் என்பன தெளிவாகின்றன.

நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்,
"எனக்கும் எனக்கு முந்திய நபிமார்கட்கும் உதாரணம் ஒரு மனிதனின் உதாரணத்தைப் போன்றது. அவன் வீடொன்றைக் கட்டி அதனை அழகு படுத்தினான். ஒரு மூலையில் ஒரு கல் வைக்கும் இடத்தைத் தவிர மற்றெல்லா இடங்களையும் அழகாக்கினான். அவ்வீட்டைச் சுற்றிப் பார்த்த மக்கள் ஆச்சரியம் அடைந்து இந்த இடத்தில் ஒரு கல்லை வைத்திருக்கலாமே என்றனர். நானே அக்கல். நான் இறுதி நபி" (புகாரி, முஸ்லிம்)

## முஸ்லிம்

'இஸ்லாம்' என்ற சமயத்தைப் பின்பற்றுவோர் 'முஸ்லிம்' என அழைக்கப்படுகின்றனர். இதுவும் 'இஸ்லாம்' என்ற தொழிற் பெயரில் இருந்து உருவான வினையாலணையும் பெயர். எனவே 'முஸ்லிம்' என்றால் சாந்தி, சமாதானத்தையுடையவர் என்பது அகராதிப் பொருளாகும்.

பொதுவாக அல்லாஹ்விடம் தன்னை முழுமையாக ஒப்படைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது கட்டளைகளை ஏற்று அவன் விலக்கியவற்றைத் தவிர்த்து நடப்பவர் 'முஸ்லிம்' ஆவார். ஆனால் நபி (ஸல்) அவர்கள் 'முஸ்லிம்' என்றால் யார் என்பதை பின்வருமாறு கூறுகின்றார்கள்,

''எவரது நாவினாலும் கையினாலும் மற்ற முஸ்லிம்கள் நிம்மதி பெறுகின்றனரோ அவரே முஸ்லிம்''. (ஸஹீஹுல் புஹாரி)

முஸ்லிம் என்பவன் சாந்தி, சமாதானத்தையுடையவன். மற்ற முஸ்லிம்களை நிம்மதியாக வாழச்செய்து அவர்களை பிரச்சினைகட்கும், சிக்கல்களுக்கும் ஆளாக்காமல் அன்புடன் பழகுபவன் என்பதே மேற்படி ஹதீஸின் விளக்கமாகும். உண்மையாகவே இஸ்லாம் சாந்தியையும் நீதியையும் சமாதானத்தையும் உலகில் பரப்பி மனித சமுதாயத்தை நிம்மதியாகவும் சுபீட்சமாகவும் வாழ வழிவகுக்கும் ஒரு மார்க்கமாகும்.

## அல்லாஹ்

உலகையும் உலகிலுள்ள அனைத்தையும் படைத்தவனும் பரிபாலிப்பவனும் அல்லாஹ் என்றே முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

وَلَئِن سَأَلْتَهُم مَّنْ خَلَقَهُمْ لَيَقُولُنَّ ٱللَّهُ

*''நபியே நீ அந்த (முஸ்லிம் அல்லாத) மக்களிடம் 'அவர்களைப் படைத்தது யார்' என்று கேட்டால் ''அல்லாஹ்'' என்று கூறுவர்.*

(அல்-குர்ஆன் 43:87)

இவ்வாறு முஸ்லிம் அல்லாத மக்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான். எனவே, அம்மக்களும் அல்லாஹ்; அவர்களைப் படைத்ததாக, உணவளிப்பதாக, மழையைப் பொழியச் செய்வதாக நம்புகின்றனர் என அல்-குர்ஆன் கூறுகிறது.

எனவேதான் முஸ்லிம்கள் ''அல்லாஹ் தங்களுக்கு மட்டும் சொந்தமானவன்'' என்று உரிமை கொண்டாடுவதில்லை. ஏனெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் அனைவருக்கும் பொதுவானவன் என்றே இஸ்லாம் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துள்ளது. அல்-குர்ஆனில் முதலாம் அத்தியாயத்தின் முதல் வசனங்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَـٰنِ ٱلرَّحِيمِ ﴿١﴾ ٱلْحَمْدُ لِلَّهِ رَبِّ ٱلْعَـٰلَمِينَ ﴿٢﴾ ٱلرَّحْمَـٰنِ ٱلرَّحِيمِ

*அருளாளனும் அன்புடையோனுமான அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கின்றேன். றப்புல் ஆலமீன் ஆன (அகிலத்தைப் படைத்துப் பரிபாலிக்கும்) அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் அருளாளன், அன்புடையோன்.*

'அர்-ரஹ்மான்' என்பது அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களில் ஒன்று. அகிலத்தில் நல்லவர், பொல்லாதவர் என்ற வித்தியாச மின்றி அருள்பாலிப்பவன் என்பது அதன் பொருள்.

'றப்புல் ஆலமீன்' என்றால் அகிலத்தில் வாழும் மனிதர்கள், ஜின்கள், மலக்குகள், ஜீவராசிகள் அனைத்தையும் படைத்துப் பரிபாலிக்கும் நாயன் என்பது பொருள்.

எனவே, முஸ்லிம்களின் வேதமான அல்-குர்ஆனின் முதல் வசனங்களே அல்லாஹ் அனைவருக்கும் பொதுவானவன் என்பதை முதலில் அவர்கட்குப் போதிக்கின்றன. எனவே, அவர்கள் அல்லாஹ்வை 'றப்புல் ஆலமீன்' (அகிலத்தார் அனைவரினதும் இறைவன்) என்றே அழைக்கின்றனர். அவர்கள் எப்போதும் அவனை 'றப்புல் முஸ்லிமீன்' முஸ்லீம்களின் இறைவன் என்று அழைப்பதில்லை. அவ்வாறு அழைக்கவும் முடியாது. தொழுகை யில் 'றப்புல் ஆலமீன்' என ஓதவேண்டிய இடத்தில் 'றப்புல் முஸ்லிமீன்' என ஓதினால் அவர்களது தொழுகையும் நிறைவேறாது.

அல்-குர்ஆனை நாம் விரித்தால் அதன் முதலாம் அத்தியாயத்தின் முதல் மூன்று வசனங்களே அல்லாஹ்வை சகல படைப்புகளுக் கும் உரியவனாக்கியதுபோல் அல்-குர்ஆனின் இறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயமான 'அந்-நாஸ்' (114வது அத்தியாயம்) 'மனிதர்கள்' என்ற பெயரைத்தாங்கி அல்லாஹ்வைச் சகல மனிதர்கட்கும் சொந்தமாக ஆக்கியுள்ளது.

قُلْ أَعُوذُ بِرَبِّ ٱلنَّاسِ ۝١ مَلِكِ ٱلنَّاسِ ۝٢ إِلَـٰهِ ٱلنَّاسِ ۝٣ مِن شَرِّ
ٱلْوَسْوَاسِ ٱلْخَنَّاسِ ۝٤ ٱلَّذِى يُوَسْوِسُ فِى صُدُورِ ٱلنَّاسِ ۝٥ مِنَ ٱلْجِنَّةِ
وَٱلنَّاسِ ۝٦

*நபியே நீர் கூறுவீராக, மனிதர்களின் இரட்சகனிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன். அவன் மனிதர்களின் அரசன். அவன் மனிதர்களின் வணக்கத்துக்குரியவன். மனிதர்களின் இருதயங்களில் வீணான சந்தேகங்களை உண்டுபண்ணிவிட்டு மறைந்து கொள்ளும் விஷமிகளின் தீங்கை விட்டும் நான் பாதுகாவல் தேடுகிறேன். (அத்தகைய விஷமிகள்) ஜின்களிலும், மனிதர்களிலும் இருக்கின்றனர்.*

மேற்காணும் அத்தியாயம் முழுவதும் அல்லாஹ்வை சகல மனிதர்களினதும் நாயனாக அந்த அல்லாஹ்வே கூறியிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

அல்லாஹ்தான் இவ்வுலகில் வாழும் அனைத்து மக்களையும் அவர்கள் எந்த இனத்தை, மொழியை, மதத்தை, பிரதேசத்தைச் சேர்ந்தவராயினும் எவ்வித வித்தியாசமுமின்றி எல்லோரையும் படைத்துப் பரிபாலித்து வருகின்றான்; மழையை பொழியச் செய்வதும் உணவளிப்பதும், பாதுகாப்பளிப்பதும் அவனே! அவனே உலகில் அனைத்து நபிமார்களையும் அகிலத்தாருக்கு வழி காட்டியாக அனுப்பினான். அவன்தான் நபி முஹம்மது (ஸல்) அவர்களை இறுதிநபியாக அனுப்பி அவர்களுக்கு அல்-குர்ஆனை வேதமாக அருளினான் என்று முஸ்லிம்கள் நம்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்-குர்ஆன்

நபி முஹம்மது (ஸல்) அவர்கட்கு அல்லாஹ்வால் அருளப்பட்ட வேதநூல் 'அல்-குர்ஆன்' என அழைக்கப்படுகிறது. இது ஒரே தடவையில் அல்லாமல் இருபத்து மூன்று வருடங்கள், காலத்தின் தேவைக்கேற்ப கொஞ்சம் கொஞ்சமாக ஜிப்ரீல் என்ற வானவர் மூலம் அருளப்பட்டது.

இவ்வேதநூல் முஸ்லிம்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல என்றும் பொதுவாக அனைத்து மக்களுக்கும் வழிகாட்டி நூலாக அருளப்பட்டது என்றும் அல்-குர்ஆன் தன்னைப் பற்றிக் கூறுகிறது.

شَهْرُ رَمَضَانَ ٱلَّذِىٓ أُنزِلَ فِيهِ ٱلْقُرْءَانُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنَٰتٍ مِّنَ ٱلْهُدَىٰ وَٱلْفُرْقَانِ

*மனிதர்களுக்கு நேர் வழிகாட்டியாகவும், நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும் நன்மை - தீமையைப் பிரித்தறிவிக்கக் கூடியதாகவுமுள்ள அல்-குர்ஆன் றமழான் மாதத்தில் அருளப்பட்டது.*

(அல்-குர்ஆன் 2:185)

இங்கே முஸ்லிம்களுக்கு வழிகாட்டி என்று கூறாமல் மனிதர் களுக்கு என்று கூறப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.
மேலும் அல்-குர்அன் கூறுகிறது,

إِنْ هُوَ إِلَّا ذِكْرٌ لِّلْعَٰلَمِينَ

*(இக்குர்ஆன்) அகிலத்தார் அனைவருக்கும் நல்லுபதேசமாகவே யன்றி வேறில்லை.* (அல்-குர்ஆன் 38:87)

இங்கும் முஸ்லிம்களுக்கு நல்லுபதேசம் எனக் குறிப்பிடாமல் உலகத்து மாந்தர் அனைவருக்கும் எனக் கூறப்பட்டுள்ளதும் நோக்கத்தக்கதாகும்.

تَبَارَكَ ٱلَّذِى نَزَّلَ ٱلْفُرْقَانَ عَلَىٰ عَبْدِهِۦ لِيَكُونَ لِلْعَٰلَمِينَ نَذِيرًا



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அகிலத்தார் அனைவருக்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக் கூடிய குர்ஆனை தன் அடியார்மீது இறக்கியவன் மிக பாக்கிய முடையவன்.* (அல்-குர்ஆன் 25:1)

இவ்வசனமும் அகிலத்தார் அனைவருக்கும் அல்-குர்ஆன் எச்சரிக்கை செய்யக்கூடியதாக உள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

எனவே, முஸ்லிம்கள் தங்களின் வழிகாட்டி நூலாகக் கொள்கின்ற அல்-குர்ஆன், அவர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் வழிகாட்டியாக - உலகப் பொதுமறையாக அது அருளப்பட்டுள்ளது என்பதை ஏற்க வேண்டியவர்களாகவுள்ளோம்.

மேலும், இக்குர்ஆன் இதற்கு முந்திய வேதங்களை உண்மைப் படுத்துவதாகவும் அவைகளைப் பாதுகாப்பதாகவும் அருளப் பட்டுள்ளது என்பதை அல்-குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

وَأَنزَلْنَآ إِلَيْكَ ٱلْكِتَـٰبَ بِٱلْحَقِّ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ مِنَ ٱلْكِتَـٰبِ

وَمُهَيْمِنًا عَلَيْهِ

*உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தையும் நாம்தான் உம்மீது அருளினோம். இது தனக்கு முன்னுள்ள வேதங்களையும் உண்மையாக்கி வைக்கிறது. அன்றி அவைகளைப் பாதுகாப்ப தாகவுமிருக்கிறது.* (அல்-குர்ஆன் 5:48)

எனவே நபி முஹம்மது அவர்கட்கு அருளப்பட்ட அல்-குர்ஆன்;

அவரது சமூகத்துக்கு மாத்திரம் சொந்தமானதல்ல.

அது உலகின் அனைத்து மாந்தருக்கும் பொதுவானது.

அது அதற்கு முந்திய வேதங்களை உண்மைப்படுத்துகிறது.

அவ்வேதங்களை பாதுகாப்பதாகவும் அது அமைந்துள்ளது.

என்பன மேற்கூறிய வசனங்கள் மூலம் தெளிவாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நபி முஹம்மது (ஸல்) அவர்கள்

அல்-குர்ஆன் எவ்வாறு உலகமாந்தர் அனைவருக்கும் பொதுவான வழிகாட்டியோ அதேபோன்றுதான் நபி முஹம்மது (ஸல்) அவர்களும் அகிலத்து மாந்தர் அனைவருக்கும் பொதுவான ஒரு நபியாக அனுப்பப்பட்டார்கள்.

இதோ! அல்-குர்ஆனைக் கவனியுங்கள்:

وَمَآ أَرْسَلْنَـٰكَ إِلَّا رَحْمَةً لِّلْعَـٰلَمِينَ

*நபியே! அகிலத்தார் அனைவருக்கும் அருட்கொடையாகவேயன்றி உங்களை நாம் நபியாக அனுப்பவில்லை.*

(அல்-அன்பியா 107)

وَمَآ أَرْسَلْنَـٰكَ إِلَّا كَآفَّةً لِّلنَّاسِ بَشِيرًا وَنَذِيرًا وَلَـٰكِنَّ أَكْثَرَ ٱلنَّاسِ لَا يَعْلَمُونَ

*நபியே! உங்களை இவ்வுலகத்தின் சகல மக்களுக்கும் பொதுவாக நற்செய்தி கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராக வும் அனுப்பி வைத்திருக்கின்றோம். எனினும் மனிதரில் பலர் இதனை அறிந்து கொள்ளவில்லை.* (அல்-குர்ஆன் 34:28)

قُلْ يَـٰٓأَيُّهَا ٱلنَّاسُ إِنِّى رَسُولُ ٱللَّهِ إِلَيْكُمْ جَمِيعًا

*(நபியே!) மனிதர்களே உண்மையாகவே உங்கள் யாவருக்கும் நான் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர் என்று கூறுங்கள்.*

(அல்-குர்ஆன் 7:158)

மேற்காணும் அல்-குர்ஆன் வசனங்கள் அனைத்தும் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு மட்டும் சொந்தமானவர்களல்ல. அல்-குர்ஆனைப் போன்று அவர்களும் இன, மத, மொழி வேறுபாடின்றி எல்லா மாந்தர்க்கும் சொந்த மானவர்கள் - பொதுவானவர்கள் என்பதைத் தெளிவாக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித இனம்

## மனிதனின் மாண்பு

மனித இனத்தைப் படைத்த அல்லாஹ் அவ்வினத்தை அவனது சிருஷ்டிகளில் மிகவும் சிறப்புக்குரியதாக ஆக்கினான்.

۞ وَلَقَدْ كَرَّمْنَا بَنِيٓ ءَادَمَ وَحَمَلْنَٰهُمْ فِي ٱلْبَرِّ وَٱلْبَحْرِ وَرَزَقْنَٰهُم
مِّنَ ٱلطَّيِّبَٰتِ وَفَضَّلْنَٰهُمْ عَلَىٰ كَثِيرٍ مِّمَّنْ خَلَقْنَا تَفْضِيلًا

*ஆதமுடைய சந்ததியை (மனிதனை) நிச்சயமாக நாம் கண்ணியமாக்கினோம். கரையில் (வாகனங்கள் மீதும்) கடலில் (கப்பல்கள் மீதும்) நாம்தான் அவர்களைச் சுமந்து செல்லும்படி செய்கின்றோம். நல்ல உணவுகளை நாமே அவர்களுக்கு அளிக்கின்றோம். நாம் சிருஷ்டித்த ஏனைய படைப்புக்களைவிட நாம் அவர்களை மேன்மையாக்கி வைத்துள்ளோம்.*

(அல்-குர்ஆன் 17:70)

மனித இனம் ஏனைய படைப்புக்கள் அனைத்தையும்விட மேன்மைக்குரியது என்பதை மேற்கூறிய அல்-குர்ஆன் வசனம் எடுத்தியம்புகிறது. மற்றொரு அல்-குர்ஆன் வசனத்தைக் கவனிக்கவும்;

هُوَ ٱلَّذِي خَلَقَ لَكُم مَّا فِي ٱلْأَرْضِ جَمِيعًا

*பூமியிலுள்ள யாவற்றையும் அவன் தான் உங்களுக்காகப் படைத்தான்.*

(அல்-குர்ஆன் 2:29)

மேன்மைக்குரிய மனித இனத்துக்காகத்தான் பூமியில் உள்ள அனைத்து பொருட்களும் அல்லாஹ்வால் படைக்கப்பட்டுள்ளது என்பதை மேற்கூறிய வசனம் தெளிவுபடுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இம்மனிதனை பூமியின் பிரதிநிதி (கலீபா) என்ற அந்தஸ்துக்கு அல்லாஹ் உயர்த்தியுள்ளான்.

وَإِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَٰٓئِكَةِ إِنِّى جَاعِلٌ فِى ٱلْأَرْضِ خَلِيفَةً ۖ قَالُوٓا۟ أَتَجْعَلُ فِيهَا مَن يُفْسِدُ فِيهَا وَيَسْفِكُ ٱلدِّمَآءَ وَنَحْنُ نُسَبِّحُ بِحَمْدِكَ وَنُقَدِّسُ لَكَ ۖ قَالَ إِنِّىٓ أَعْلَمُ مَا لَا تَعْلَمُونَ

*(நபியே!) உமது இறைவன் மலக்குகளைநோக்கி "நான் பூமியில் எனது பிரதிநிதியை (ஆதமை) உருவாக்கப்போகின்றேன்" எனக்கூறியபோது அதற்கவர்கள் "பூமியிலே குழப்பம் செய்து இரத்தங்களை சிந்தக் கூடியவரையா ஆக்கப்போகின்றாய்? நாங்களோ உன் புகழைக் கொண்டு உன்னைத்துதிக்கின்றோம். உனது பரிசுத்த தன்மையைப் போற்றுகிறோம்" எனக் கூறினார்கள் அதற்கிறைவன் "நீங்கள் அறியாதவற்றை எல்லாம் நான் நன்கு அறிவேன்" என்றான்.* (அல்-குர்ஆன் 2:30)

இவ்வாறு அல்லாஹ் மலக்குமார்களிடம் கூறியதுபோல் தனது பிரதிநிதியாக பூமியில் மனித இனத்தைச் சிருஷ்டித்து கல்வியை அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து கல்வியின் மூலமாக மனித சமுதாயத்தை வானவர்களைவிட மேன்மைப்படுத்தினான்.

وَعَلَّمَ ءَادَمَ ٱلْأَسْمَآءَ كُلَّهَا ثُمَّ عَرَضَهُمْ عَلَى ٱلْمَلَٰٓئِكَةِ فَقَالَ أَنۢبِـُٔونِى بِأَسْمَآءِ هَٰٓؤُلَآءِ إِن كُنتُمْ صَٰدِقِينَ ﴿٣١﴾ قَالُوا۟ سُبْحَٰنَكَ لَا عِلْمَ لَنَآ إِلَّا مَا عَلَّمْتَنَآ ۖ إِنَّكَ أَنتَ ٱلْعَلِيمُ ٱلْحَكِيمُ ﴿٣٢﴾

*(ஆதமைப்படைத்து) ஆதமுக்கு எல்லாப்பொருட்களின் பெயர் களையும் கற்றுக்கொடுத்து அவற்றை மலக்குகளின் முன்பாக்கி "நீங்கள் உண்மையாளர்களாயிருந்தால் இவற்றின் பெயர்களைக் கூறுங்கள்" எனக்கூறினான். அதற்கவர்கள் "நீ மிகத்தூயவன்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எங்களுக்கு அறிவித்தவற்றைத்தவிர வேறொன்றையும் நாம் அறியோம்; நீயே நன்கறிந்தோனும் ஞானமுடையோனுமாவாய்" எனக் கூறினர்.*

(அல்-குர்ஆன் 2:31-32)

இவ்வாறு அல்லாஹ் கல்வி மூலமாக மனிதசமூகத்தை வானவர்களைவிட மேலாக்கி இம்மனித இனத்துக்குச் சிரம் சாய்க்குமாறு வானவர்களைப் பணித்த வரலாற்றை அல்-குர்ஆன் கூறிக்கொண்டிருக்கிறது. இவ்வாறு அல்லாஹ் மனித இனத்தை மேன்மைக்குரிய சமுதாயமாக உயர்த்தி கௌரவித்துள்ளான்.

## மனிதர்கள் ஓரினம்

மனிதர்கள் ஓரினம் அவர்கட்கிடையில் பேதம் கிடையாது. மனித சமுதாயத்தின் உருவாக்கம் பற்றி அல்-குர்ஆன் பின்வருமாறு விபரிக்கிறது.

يَٰٓأَيُّهَا ٱلنَّاسُ ٱتَّقُواْ رَبَّكُمُ ٱلَّذِى خَلَقَكُم مِّن نَّفْسٍ
وَٰحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَآءً

*மனிதர்களே! உங்கள் அனைவரையும் ஓரே ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்த இறைவனைப் பயந்துகொள்ளுங்கள். அந்த ஆத்மாவிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து அநேக ஆண், பெண்களைப் பரவச்செய்தான்.*

(அல்-குர்ஆன் 4:1)

உலகில் படைக்கப்பட்ட முதல் மனிதர் ஆதம் ஆவார். அவரில் இருந்து அவரது மனைவியைப் படைத்தான். அவர்கள் இருவரிலிருந்துதான் மனித சமுதாயம் பெருகியது என்பன மனித இனத்தின் தோற்றம் பற்றி குர்ஆன் கூறும் வரலாற்றுண்மையாகும். இவ்வுலகில் எந்த மதத்தைப் பின்பற்றுவோராயினும் எந்த இனத்தை, நிறத்தை, மொழியை உடையவராயினும் அவர்கள் அனைவரும் ஆதமின் மக்களே - அதாவது சகோதரர்கள் என்பதே குர்ஆன் தரும் விளக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி கருத்தை பின்வரும் அல்-குர்ஆன் வசனமும் உறுதிப் படுத்துகிறது;

يَـٰٓأَيُّهَا ٱلنَّاسُ إِنَّا خَلَقْنَـٰكُم مِّن ذَكَرٍ وَأُنثَىٰ وَجَعَلْنَـٰكُمْ شُعُوبًا وَقَبَآئِلَ
لِتَعَارَفُوٓا۟ ۚ إِنَّ أَكْرَمَكُمْ عِندَ ٱللَّهِ أَتْقَىٰكُمْ

*மனிதர்களே! ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்துதான் நாம் உங்களை படைத்துள்ளோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாக வும் ஆக்கினோம். உங்களில் எவன் மிகவும் பயபக்தியுடையவனாக இருக்கின்றானோ அவன்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிகக் கண்ணியவான்.* (அல்-குர்ஆன் 49:13)

உலகின் அனைத்து மாந்தர்களும் ஓர் ஆணிலிருந்தும் (ஆதம்) ஒரு பெண்ணிலிருந்தும் (ஹவ்வா) உருவான சந்ததிகளே. மேலும், இவர்கள் பல்வேறு பிரிவினராக-கிளைகளாக படைக்கப்பட்டிருப்பது தங்களுக்குள் பெருமை பாராட்டிக் கொள்வதற்கோ, சண்டைகளை வளர்த்துக் கொள்வதற்கோ அல்ல. மாறாக அறிமுகத்துக்காகவும் பரஸ்பரம் உதவுவதற்காகவும், அன்பு பாராட்டிக் கொள்வதற்காக வுமே! மனிதர்களிடத்தில் மேன்மை ஏற்படுவது பிறப்பினால் அல்ல. அவனது நற்செயல்களும் அல்லாஹ்வைப் பயந்த பக்குவ நிலையுமே மேன்மைக்குரியவனாக்கும் என்பதே மேற்காணும் வசனத்தின் விளக்கமாகும்.

மேலும், அவ்வசனம் வர்க்கபேதங்களையும் நிறப்பெருமைகளையும் தகர்த்தெறிகிறது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்,

''வர்க்க, குலபேதங்களுக்கு (அஸபிய்யா) வாதாடுபவனும் அதற்காக சண்டை பிடிப்பவனும் அதற்காக மரணிப்பவனும் எம்மைச் சேர்ந்தவனல்லன்''

(ஆதாரம் : அபூதாவூத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கூறினார்கள், ''அஸபிய்யா எனப்படும் வர்க்க பேதங்களை வளர்க்கும் கொடியின் கீழ் ஒருவர் கொல்லப்பட்டால் அல்லது இதற்காக உதவினால் அக்கொலை மௌட்டீகக் கொள்கை யாலான கொலையாகும்'' (ஆதாரம் : முஸ்லிம்)

'அஸபிய்யா' எனப்படும் இனவாதத்தை நபி (ஸல்) அவர்கள் கண்டித்தபோது அவர்களிடம் அவர்களது தோழர்கள் "ஒரு மனிதர் அவருடைய கூட்டத்தினருக்கு உண்மையான விடயங்களில் உதவுவதும் 'அஸபிய்யா'வில் சேருமா?'' எனக்கேட்டபோது "இல்லை, அவரது கூட்டத்தினருக்கு உண்மைக்குப் புறம்பான விடயங்களில் உதவுவதே இவ்வகையைச் சார்ந்தது'' எனக் கூறினார்கள்.

பொதுவாக நபி (ஸல்) அவர்கள் குலபேதங்களை வளர்த்து அதன் மூலம் பிரிவினைகள் உண்டாவதை தமது வாழ்நாளில் மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளார்கள். ஒரு நாள் மதீனா வாசியான அன்ஸாரீன்களில் ஒருவருக்கும் மக்காவிலிருந்து மதீனாவில் குடியேறிய முஹாஜிர் ஒருவருக்கும் சண்டை ஏற்பட்டது. அப்பொழுது அந்த இருவரும், தத்தமது கோஷ்டி யினரை "முஹாஜிரீன்களே வாருங்கள்'' "அன்ஸாரீன்களே வாருங்கள்'' என்று அழைத்தனர். தனி இரு நபர்கள் பிடித்த சண்டைக்கு அவர்கள் இருவரும் அவரவர்களின் கூட்டத்தினரை அழைத்தமை நபி (ஸல்) அவர்களுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. மிகவும் கோபம் அடைந்தவர்களாக "நான் உங்கள் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும்போதே (ஜாஹிலியா) மடமைக் கால வாதம் உங்களை விட்டும் நீங்கவில்லையா?'' என கண்டித்தார்கள்.

இவ்வாறு இன முரண்பாடுகளை வளர்க்கும் செயலை இஸ்லாம் மிகவும் கடுமையாகக் கண்டித்து வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிற, மொழி பேதங்கள் இஸ்லாத்தில் கிடையாது

அல்லாஹ் கூறுகிறான்,

وَمِنْ ءَايَـٰتِهِۦ خَلْقُ ٱلسَّمَـٰوَٰتِ وَٱلْأَرْضِ وَٱخْتِلَـٰفُ أَلْسِنَتِكُمْ وَأَلْوَٰنِكُمْ ۚ

إِنَّ فِى ذَٰلِكَ لَـَٔايَـٰتٍ لِّلْعَـٰلِمِينَ

*வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்திருப்பதும் உங்களுடைய மொழிகளும் நிறங்களும் வேறுபட்டிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். இதிலும் அறிவுடையோருக்கு நிச்சயமாக அத்தாட்சிகள் இருக்கின்றன.* (அல்-குர்ஆன் 30:22)

وَمِنَ ٱلنَّاسِ وَٱلدَّوَآبِّ وَٱلْأَنْعَـٰمِ مُخْتَلِفٌ أَلْوَٰنُهُۥ

*மனிதர்களிலும் ஜீவராசிகளிலும் கால் நடைகளிலும் பல்வேறு நிறங்களையுடையவை உள்ளன.* (அல்-குர்ஆன் 35:28)

மனிதனின் நிறங்களும் அவனது மொழிகளும் மாறுபட்டிருப்பது அல்லாஹ்வின் சிறப்பைக் கூறும் அத்தாட்சிகளே தவிர மனிதனை வேறுபடுத்தும் அம்சங்களல்ல.

பிறப்பால், நிறத்தால், மொழியால், இனத்தால் ஒருவன் மேன்மை அடைய முடியாது. அவனது நடத்தையே ஒருவனை மேம்படுத்தும் சாதனம் என்பதை பின்வரும் ஹதீஸ் மூலம் நபி (ஸல்) அவர்கள் விளக்குகிறார்கள்.

“நீங்கள் எல்லோரும் ஆதமின் மக்கள். ஆதமோ மண்ணால் படைக்கப்பட்டவர். ஓர் அறபியல்லாதவரைவிட அறபிக்கு எவ்வித சிறப்பும் கிடையாது. அறபியைவிட அறபியல்லாதவருக்கும் சிறப்புக் கிடையாது. கறுப்பரைவிட வெள்ளையருக்கோ, சிவந்தவரைவிட கறுப்பருக்கோ எவ்வித சிறப்பும் கிடையாது. அல்லாஹ்விடம் சிறப்புக்கும் கண்ணியத்துக்குமுரியவன் அவனைப் பயந்து நடப்பவனே!”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய ஹதீஸ் மொழியைக் கூறி, நிறத்தைக்காட்டி மனிதர்கள் மத்தியில் பேதம் காட்டுபவர்கட்குச் சாட்டையடி கொடுக்கிறது. அறபுமக்கள் அறபுமொழியைப் பேசுபவனையே சிறப்புக்குரியவர்கள் என்று கருதும் மனப்பாங்கையுடையவர்கள். குடும்பம், கோத்திரம் என்று பார்ப்பவர்கள். கறுப்பு நிறத்தையுடையோரை அடிமையாகப் பார்ப்பவர்கள், இவர்களின் இந்த வரட்டு நம்பிக்கையை புகழ்பெற்ற இறுதி ஹஜ்ஜில் ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட தோழர்கள் முன்னிலையில் மேற்கண்டவாறு கூறி அந்நம்பிக்கையைத் தகர்த்தெறிந்தார்கள்.

மேலும் அவர்கள் கூறினார்கள், "சீப்பின் பற்கள் எவ்வாறு சமமாக இருக்கின்றதோ அதேபோல் மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள்"

எனவே மனிதரில் சாதி வேற்றுமை பாராட்டுவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது.

நிறவேற்றுமை பாராட்டுவதை இஸ்லாம் எவ்வளவு தூரம் கண்டிக்கிறது என்பதை பின்வரும் சம்பவம் தெளிவாக்குகிறது.

**பிலால் (ரலி)**

பிலால் (ரலி) அவர்கள் ஒரு கறுப்பு நிற அடிமை. அடிமையாக இருந்தபோது இஸ்லாத்தைத் தழுவியதால் அவரது எஜமான் இவரைக் கொடுமைப்படுத்தினான். இவர் படும் வேதனையை அறிந்த அபூபக்கர் (ரலி) அவர்கள் இவரை வாங்கி விடுதலை செய்தார்கள். இதுபற்றி உமர் (ரலி) அவர்கள் "எங்களின் தலைவரான அபூபக்கர் எங்கள் தலைவரான பிலாலை உரிமையிட்டார்" எனக்கூறினார். அடிமையாகவிருந்த ஒரு நீக்ரோவை 'எங்கள் தலைவர்' என்று இங்கு உமர் அவர்கள் அழைத்தது கவனிக்கத்தக்கதாகும்.

இந்த பிலால் அவர்களைப் பார்த்து, நபித்தோழர்களில் ஒருவரான அபூதர் (ரலி) அவர்கள் ஒருநாள் "கறுப்பியின் மகனே!" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏளனமாகப் பேசிவிட்டார். விடயம் நபியவர்களை எட்ட "உம்மிடம் மடமைக் காலக் குணம் இன்னமும் உள்ளது. கறுத்தப்பெண்ணின் மகனை விட வெள்ளைப்பெண்ணின் மகனுக்கு எவ்வித சிறப்பும் கிடையாது" என்று, நபி (ஸல்) அவர்கள் அபூதர் அவர்களைக் கடிந்து கொண்டார்கள். நபியவர்களின் இந்தக் கண்டனத்தை அபூதர் அவர்களால் தாங்க முடியவில்லை. 'நபி அவர்கள் முன் தான் ஒரு மோசமானவனாக ஆகிவிட்டேனே! எனது அகங்காரம்தானே இதற்குக் காரணம்' என வருந்திய அவர் பிலால் அவர்களை அழைத்து தனது கன்னத்தை தரையிலே வைத்து "உனது காலால் எனது கன்னத்தில் மிதிப்பீராக" என்று கேட்டுக்கொண்டார். இச்சம்பவத்துக்காக அபூதர் தனது வாழ்நாளில் பெரும் கவலைப்பட்டார்கள் என்பதை ஹதீஸ்கள் தெரிவிக்கின்றன.

மற்றொரு ஹதீஸை கவனியுங்கள்;
நிற, மொழிப்பாகுபாட்டை நபியவர்கள் பின்வருமாறு கண்டிக்கிறார்கள். "நான் நல்வழியில் நடக்கும் ஒவ்வொரு வரினதும் சகோதரன். அவன் அபீசீனிய நாட்டு அடிமையாக இருப்பினும் சரியே। கெட்டவர்களை விட்டும் நான் நீங்கி விடுகிறேன். அவன் குறைஷிக்குல தலைவனாக இருப்பினும் சரியே। சல்மான் எமது குடும்பத்தைச் சேர்ந்தவர்"

(ஆதாரம் தபறானி, ஹாக்கிம்)

மேற்கூறிய ஹதீஸில் கறுப்பு நிறத்தையுடைய அபீசீனியர்களும் அறபுமொழியல்லாத பாரசீகமொழி பேசும் சல்மானும் கௌரவிக்கப் பட்டுள்ளதன் மூலம் மொழி, நிற வேறுபாடுகள் பற்றி இஸ்லாத்தின் நிலை நன்கு தெளிவாகின்றது.

குலப்பெருமை அரசோச்சிய ஜாஹிலிய்யாக் கொள்கையிலிருந்து விடுபட்டு இஸ்லாமிய நெறிக்கு உலகம் வந்து கொண்டிருந்த வேளை அடிமைத்தளையை அறுத்தெறிய அது பாடுபட்டது. அடிமையாகவிருந்தவர்களும் பதவிகள் வகிக்கும் தகுதியுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் என அது கண்டது. இதனால்தான் புனிதமிக்க மஸ்ஜிதுந் நபவியில் தொழுகைக்கு அழைக்கும் 'அதான்' பணி அபிசீனியா நாட்டு அடிமையாக இருந்த பிலால் அவர்கட்கு வழங்கப்பட்டது. உமர் (ரலி) அவர்கள் ஆட்சியின்போது படைத்தலைவர்களாகவும் நகரத்தலைவர்களாகவும் விடுதலைபெற்ற அடிமைகள் நியமிக்கப் பட்டார்கள். உமர் (ரலி) அவர்கள் தமது இறுதிக்காலத்தில் தனக்குப்பின் கலீபாப் பதவிக்கு என ஆறுபேர் கொண்ட சபையை நியமித்தார்கள். அப்போது அவர்கள் கூறினார்கள், "அபூஹுதை பாவின் அடிமையாகவிருந்த சாலிம் தற்போது உயிரோடிருந் திருந்தால் நான் அவருக்கே இப்பதவியை வழங்கியிருப்பேன்" இந்த வார்த்தை மூலம் ஓர் அடிமையும் நாடாளும் திறன் உள்ளவன். அவனுக்கும் அந்த அந்தஸ்து உள்ளது என்பதை அன்றைய மக்களுக்கு உணர்த்தினார்கள்.

## மனிதர்கள் சமமானவர்கள்

ஒரு முறை கைசு இப்னு முதாத்தியா என்பவர் ஒரு சபைக்கு வந்தார். அச்சபையிலே பாரசீகரான சல்மானும் ரோம இனத்தைச் சேர்ந்த சுஹைப் அவர்களும் அபீசீனிய பிலாலும் இருந்தனர். அப்போது கைசு அவர்கள் அங்கு அரபி அல்லாத மூவர் இருப்பதைப் பார்த்து "இப்போதுதான் அவ்சு, ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த அறபிகள் இந்த நபிக்கு உதவி செய்ய இருக்கும்போது அறபிகளல்லாத இவர்கள் எதற்காக?" என்று கூறினார். இவ்வார்த்தையினால் ஆத்திரமடைந்த முஆத் பின் ஜபல் அவர்கள் இவரது ஆடையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து நபி அவர்களின் முன் நிறுத்தி இவர் கூறிய வார்த்தையைக் கூறினார். இதனைக் கேட்டு மிகவும் ஆத்திரமடைந்த நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாயலுக்கு வந்து மக்களை அழைத்து "மனிதர்களே! இறைவன் ஒருவன்! எமது தந்தை ஒருவர்! மார்க்கமும் ஒன்றே! அறபு என்பது உங்கள் எவரினதும் தாயுமல்ல தந்தையுமல்ல. அது ஒரு மொழி. அதனை எவர் பேசுகின்றாரோ அவரே அறபி" என்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் அறபிகள் என்ற கர்வத்தை கண்டித்து அறபு மொழியைப் பேசுகின்ற அனைவரும் அறபிகள்தான் என்ற புது விளக்கத்தைக் கொடுத்ததன் மூலம் அறபு மொழிவாதத்திற்கு மரண அடி கொடுத்து சல்மான், சுகைப், பிலால் போன்ற அறபி அல்லாதவர்களையும் அறபிகள்தான் என்று அவர்களின் அந்தஸ்த்தை உயர்த்தினார்கள் காருண்ய நபி (ஸல்) அவர்கள்.

ஒருமுறை கலீபா உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் வாசலில் அவரைச் சந்திப்பதற்காக வேண்டி குறைஷித் தலைவரான அபூசுப்யான் (ரலி) அவர்களும் பிலால் (ரலி) அவர்களும் வந்திருந்தார்கள். அபூசுப்யான் குறைஷிக்குலத் தலைவர். பிலால் ஓர் அடிமையாகவிருந்தவர். எனினும் கலீபா உமர் அவர்களோ அபூசுப்யானை விட பிலாலையே முதல் வருமாறு அழைத்தார்கள். இவ்வாறு அவர் பிலாலை முதலில் அழைத்ததன் மூலம் அபூசுப்யான் மனசஞ்சலத்துக்குள்ளானார்.

அம்றுபின் ஆஸ் அவர்கள் எகிப்தின் அதிபதியாக இருந்த முகவ்கிஸ் அவர்களைச் சந்திப்பதற்கு ஒருதூது கோஷ்டியை அனுப்பினார்கள். அத்தூது கோஷ்டியின் தலைவராக கறுப்புநிற உபாதா பின் ஸாமித் அவர்களை நியமித்திருந்தார்கள். இவரது கறுப்பு நிறத்திற்காக வேண்டி இவரோடு பேச மறுத்த மன்னன் முகவ்கிஸ் வேறு ஒருவரை தலைவராக அனுப்புமாறு கேட்டான். அப்பொழுது அம்ர் அவர்கள் அவனது கோரிக்கையை நிராகரித்து "இவரே அறிவாலும் சிந்தனையாலும் மேலானவர். அவரே எங்களில் நல்லவர்" என்று கூறி எகிப்திய மன்னனின் கோரிக்கையை நிராகரித்தார். இவ்வாறு இஸ்லாம் நிறத்துக்காக மனிதனை ஒதுக்குவதையும் நிறத்தினால் அவனை உயர்த்துவதையும் நிராகரிக்கிறது - கண்டிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமைப் பிரகடனம்

இறுதி ஹஜ்ஜின்போது நபி (ஸல்) அவர்கள் ஒரு பேருரையை நிகழ்த்தினார்கள். இஸ்லாமிய வரலாற்றில் மனித உரிமைப் பிரகடனமாக அது மதிப்பிடப்படுகிறது. அங்கு குழுமியிருந்த ஸஹாபாத் தோழர்களை நோக்கி.

"மனிதர்களே! தற்போது நீங்கள் எந்த மாதத்தில்? எந்த நாளில்? எந்த நகரில்? உள்ளீர்கள் என்பதை அறிவீர்களா?" என்று கேட்டார்கள். அப்போது அவர்கள் "நாங்கள் ஒரு சங்கை மிகுந்த நாளில், சங்கைமிகுந்த ஒரு மாதத்தில், சங்கைமிக்க நகரில் உள்ளோம்" எனக் கூறினார்கள். அப்போது நபி தூதர் அவர்கள் "உங்களின் இரத்தம், உங்களின் உடமை, உங்களின் மானம் இந்த நாளின் சங்கையைப்போன்று, இந்த மாதத்தின் சங்கையைப் போன்று, இந்த நகரத்தின் சங்கையைப்போன்று சங்கையானது; கண்ணியமானது" என்றார்கள். அதாவது ஒரு மனிதனின் உயிரும், உடமையும், அவனது மானமும் கண்ணியப்படுத்தப்பட வேண்டும். அதனை அபகரிக்க, களங்கப்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது என்ற இந்த மனித உரிமைப் பிரகடனத்தை நபி (ஸல்) அவர்கள் 14 நூற்றாண்டுகளுக்கு முன் விடுத்தார்கள்.

இஸ்லாமிய ஆட்சியில் முதலாவது கலீபாவாக அபூபக்கர் (ரலி) அவர்கள் பதவியேற்றவுடன் தமது கன்னிப் பிரசங்கத்தைப் பின்வருமாறு நிகழ்த்தினார்கள்.

"மனிதர்களே உங்களின் பொறுப்புதாரியாக நான் நியமிக்கப் பட்டுள்ளேன். அதற்காக நான் உங்களில் மேலானவன் அல்லன். நான் சரியான பாதையில் சென்றால் எனக்கு உதவியாக இருங்கள்; நான் தவறு செய்தால் என்னைச் சீராக்குங்கள். நான் அல்லாஹ்வுக்கு பொருத்தமான முறையில் நடக்கும் கால மெல்லாம் எனக்கு வழிப்படுங்கள்! நான் அவனுக்கு மாறுசெய்தால் நீங்கள் எனக்குக் கட்டுப்படக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதே கலீபா பதவியேற்று மறுநாள், தான் முன்பு செய்த தொழிலான வியாபாரம் செய்வதற்காக தமது வியாபாரப்பொருட்களை எடுத்துக்கொண்டு சந்தைக்குச் சென்றார்கள். அங்கே இவர்களைக் கண்ட உமர் (ரலி) அவர்களும், அபூ உபைதா அவர்களும் "சமூகத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நீங்கள் சந்தைக்கு வந்து வியாபாரம் செய்தால் பதவியை யார் கவனிப்பது" என்றனர். "அப்படியானால் எனது குடும்பத்தின் செலவுகளை நான் எவ்வாறு சமாளிப்பது?" என கலீபா கேட்டார். "நாங்கள் உங்களுக்கு பொது நிதியிலிருந்து ஒரு சம்பளத்தை ஏற்படுத்துகிறோம்" எனக்கூறி கலீபாவைச் சந்தையிலிருந்து திருப்பியனுப்பினார்கள்)

ஒரு நாள் கலீபா உமர் அவர்கள் பிரசங்கம் நிகழ்த்துகையில் "நான் பிழையான பாதையில் செல்வதாக நீங்கள் அவதானித்தால் என்னைச் சீர்படுத்துங்கள்" என்றார். அப்போது திடீரென ஒருவர் எழுந்து "அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களிடம் தவறை நாங்கள் கண்டுகொண்டால் எங்கள் வாளினால் அதனைச் சீர் செய்வோம்" என்றார். அப்போது உமர் ஆத்திரப்படவில்லை "உமரின் தவறை வாளினால் திருத்த முஹம்மதின் உம்மத்தில் ஆளை உருவாக்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்" என்று கலீபா அவ்விடத்தில் அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள்.

இவ்வாறு இஸ்லாமிய ஆட்சி மனிதனின் பேச்சுச்சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பவற்றுக்கு உரிய கௌரவம் அளித்தே இவ்வுலகில் சிறப்புற்றது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

உமர் (ரலி) அவர்கள் கலீபாவாக இருந்தபோது கூபாவின் கவர்னராக அபூமூஸா அல்அஷ்அரீ (ரலி) அவர்கள் கடமை யாற்றினார்கள். அப்போது அவருக்கு கலீபா "அபூமுஸாவே! நீயும் மனிதர்களில் ஒருவர்தான். ஆனால் உன்னை அவர்களை விட பொறுப்புக்கள் அதிகமானவனாக அல்லாஹ் ஆக்கியுள்ளான். எவர் முஸ்லிம்களின் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறாரோ அவர்மீது ஓர் அடிமைமீது எஜமானனுக்குள்ள பொறுப்பு ஏற்பட்டுவிடுகிறது" என எழுதினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை கலீபா உமர் தமது ஆட்சிக்காலத்தில் தமது கவர்னர்கள், மாகாண அதிபதிகள், பிரதானிகள் போன்றோரை அழைத்து பின்வருமாறு கூறினார்கள். மனிதர்களே! நான் சில உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது பொதுமக்களை அடிப்பதற்கோ அல்லது அவர்களின் பொருட்களை எடுப்பதற்கோ அல்ல. மார்க்கத்தை மற்றவர்கட்கு கற்றுக்கொடுக்கவும் நபி (ஸல்) அவர்களின் நடைமுறை வாழ்க்கையை கற்பிக்கவுமே அவ்வாறு நியமனம் செய்துள்ளேன். அக்கடமையிலிருந்து தவறுபவர்களை எனக்கு முறையீடு செய்யுங்கள். அதற்குரிய தண்டனையை நான் வழங்குவேன்" இவ்வாறு கலீபா உத்தரவிட்ட தன் மூலம் ஆட்சி, அதிகாரம் உள்ளவர்கள் தமக்குக்கீழ் உள்ள மக்களுக்கு அதிகார மமதையில் நினைத்தமாதிரிச் செய்யும் அநியாயத்துக்கு முடிவு கட்டினார்கள்.

## கவர்னரும் தப்பு செய்ய முடியாது

அபூமூஸா அல்-அஷ்அரி (ரலி) அவர்கள் வாழ்வில் நடந்த மற்றொரு சம்பவத்தையும் இங்கு குறிப்பிடலாம். அபூமூஸா அல்-அஷ்அரீ அவர்கள் கூபாவின் கவர்னராக இருந்தபோது நடைபெற்ற யுத்தமொன்றில் ஒருவர் கலந்து கொண்டார். அந்த யுத்தத்தில் ஏராளமான பொருட்கள் கிடைத்தன. உரிய பங்குக்குக் குறைவாக அபூமூஸா அந்நபரிடம் கொடுத்தபோது, அதனை அவர் ஏற்காமல் அதிகம் கேட்கவே, கோபம் கொண்ட கவர்னர் அந்நபருக்கு அடித்தது மாத்திரமன்றி தலைமுடியையும் வழித்துவிட்டார். கவர்னரின் அடாத செயல்கண்டு பயந்துவிடாத இந்நபர் வழிக்கப்பட்ட தமது முடிகளைச் சேகரித்து எடுத்துக் கொண்டு மதீனாவிலுள்ள கலீபா உமரைச் சந்திக்க வந்தார். கலீபாவின் முன்வந்து கலீபாவின் முகத்திலே முடிகளை எறிந்து தனக்கு நடந்த அநியாயத்தை விளக்கினார். உடனே கலீபா அபூமூஸாவுக்கு பின்வருமாறு எழுதினார். "இவருக்கு நீர் சனக்கூட்டத்தின் முன்னிலையில் அடித்திருந்தால் அவ்வாறே அவர் செய்ய நீர் அனுமதிக்கவும். தனிமையில் நீர் அடித்திருந்தால் தனிமையில் அவர் உமக்கு அடிக்க இடமளிக்கவும்" இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலீபா எழுதிய கடிதத்தை அநியாயம் செய்யப்பட்ட இந்நபர் கொண்டு சென்றதும், கவர்னரை மன்னித்துவிடுமாறு பலரும் இவரிடம் வேண்டினர். எனினும் அவர் எவரின் வேண்டுதலுக்காகவும் நான் அவரை மன்னிக்கமாட்டேன். பழிதீர்க்க அனுமதிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். செய்ய வழியின்றி கவர்னரும் தண்டனை வழங்குமாறு கூறி இவரது அடியை எதிர்பார்த்து உட்கார்ந்தார். அப்போது இம்மனிதர் கவர்னரிடம் "இப்போது என்னை விட்டும் உங்களைத் தடுக்க யாராலும் முடியுமா?" என்று கேட்க கவர்னர் "இல்லை" என்றார். "அப்படியானால் இப்போது உன்னை அல்லாஹ்வுக்காக மன்னித்து விட்டேன்" என்றார் அம்மனிதர்.

இவ்வாறு இஸ்லாமிய ஆட்சியில் சாதாரண மனிதர்களின் சுதந்திரத்துக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

அபூமூஸா அல்-அஷ்அரி அவர்கள் மாகாண அதிபதியாகப் பணியாற்றுகையில் அதிக சொத்துக்களைச் சேர்த்து வைத்திருப்ப தாகவும், அரசின் நன்மைகள் மக்களுக்குச் சேருவதில்லை என்றும் ஒரு குற்றச்சாட்டு கலீபாவுக்குக் கிடைத்தது. அப்போது கலீபா உமர் அவர்கள் அபூமூஸாவுக்கு பின்வருமாறு எழுதினார்கள் "தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் உண்பது, உடுப்பது, வாகனத்தை உபயோகிப்பதுபோல் ஏனைய மக்களுக்கும் கிடைக்கவில்லை என்ற செய்தி எனக்கு வந்துள்ளது. அப்துல்லா அவர்களே! செழிப்பான ஓடையில் புல்மேய்ந்து கொழுத்துவிட்ட கால்நடைபோல் நீயிருப்பதை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில் அந்தக் கொழுப்புத்தான் அந்தக் கால்நடையின் மரணத்துக்குக் காரணமாய் அமைந்து விடுகின்றது. ஒவ்வொரு அதிபதியும் அல்லாஹ்விடம் சென்று தனது பணிகளுக்கு விடைசொல்ல வேண்டுமென்பதை அறிந்துகொள். அதிபதி பாதை தவறினால் பிரஜைகளும் தவறிவிடுவர். மனிதர்களில் மிகவும் பேறுகெட்டவர் யாரெனில் எவரது பிரஜைகள் அவரிடமிருந்து நன்மைகள் பெறவில்லையோ அவரேதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கலீபா எச்சரிக்கை செய்து எழுதியனுப்பினார்கள். இதன் மூலம் ஆட்சியில் இருப்பவர்கள் பிரஜைகள் நலனில் கவனமாக இருக்க வேண்டுமென்பதும் மக்கள் தவறாக எடைபோடும் தலைவராக ஆட்சியாளர் அமையக்கூடாது என்பதையும் கலீபா அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.

உமர் (ரலி) அவர்களின் ஆட்சியில் அமீராக இருந்த ஒருவர் தனக்கு ஓர் ஆடம்பர மாளிகையைக் கட்டி அதற்கு ஒரு காவலாளியையும் நியமித்து மக்களுக்கும் அவருக்கும் இடையே இடைவெளியை ஏற்படுத்தியிருப்பதாக ஒரு செய்தி கலீபாவுக்கு கிடைத்தது. உடனே கலீபா உமர் அவர்கள் முஹம்மது பின் மஸ்லமா அவர்களை அழைத்து எண்ணெயும் - விறகும் எடுத்துச் சென்று அந்தக் கோட்டையை எரித்துவிடுமாறு கட்டளையிட்டதுடன் அவரிடம் அமீருக்கு ஒரு கடிதமும் கொடுத்தனுப்பினார்கள். அதில் நீர் ஒரு மாளிகையைக்கட்டி அதனைக் கோட்டையாக ஆக்கி உனக்கும் மனிதர்கட்குமிடையே தடையை ஏற்படுத்தியுள்ளீரென எனக்குச் செய்தி எட்டியுள்ளது. அது உனக்குரிய மாளிகையல்ல. அது கெட்டவர்களின் மாளிகையே! உனது வீட்டிலே பிரஜைகள் வருவதற்குத் தடையாக அவர்களது உரிமைகள் - தேவைகள் மறுக்கக்கூடிய எந்தவொரு காவலாளியையும் நீர் நிறுத்தவேண்டாம் என எழுதியனுப்பினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனக்குக் கீழ் உள்ளவர்களுடன் நேயமாக

இறுதி ஹஜ்ஜின் புகழ்பெற்ற தனது பிரசங்கத்தின்போது தமது பொறுப்பின் கீழ் உள்ள அடிமைகள் பற்றியும் நபி தூதர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். "உங்கள் அடிமைகள் விடயத்தில் உங்களை எச்சரிக்கிறேன். நீங்கள் உண்பதையே அவர்களுக்கும் உண்ணக்கொடுங்கள். நீங்கள் அணிவதையே அவர்களுக்கும் அணியக் கொடுங்கள். அவர்கள் ஏதாவது குற்றம் செய்து அதனை நீங்கள் மன்னிக்க விரும்பாவிட்டால் அவர்களை விற்றுவிடுங்கள். ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் அடியார்களாவர். அவர்களை வதை செய்யாதீர்கள்".

இவ்வாறு அடிமைகள் மிருகங்கள் போல் நடாத்தப்பட்ட ஒரு சமூகத்தில் அவர்களும் மனிதர்கள் என்ற வகையில் உரிமைகள் வழங்குமாறு, அன்பாக நடக்குமாறு கட்டளை பிறப்பித்தார்கள். அடிமைகள் என்ற ஒருபிரிவு இருக்கக் கூடாதென்பதற்காக அதனைப் படிப்படியாக அழித்தொழிப்பதில் இஸ்லாம் வகித்த பங்கு தனியாக ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

ஸஹீஹுல் புஹாரியில் இடம்பெற்றுள்ள கீழ்வரும் ஹதீஸ் அடிமைகளைச் சமமாக நடத்த வேண்டும் என்ற இஸ்லாமியக் கொள்கையைத் தெளிவு படுத்துகின்றது.

மஃரூர் என்பவர் கூறுகிறார்,
"நான் அபூதர் (ரலி) அவர்களை 'றபதா' என்ற இடத்தில் சந்தித்தேன். அப்போது அவர்மீது ஒரு சோடி ஆடையும் அதேபோல் அவருடைய அடிமைமீது ஒரு சோடி ஆடையும் இருப்பதைப் பார்த்தேன். நான் அதைப்பற்றி அவரிடம் கேட்க அவர் கூறினார். "நான் முன்பு ஒருமுறை ஒரு மனிதரை ஏசியதுடன் அவரது தாயையும் குறை கூறிவிட்டேன்! 'நீர் அறியாமைக் காலத்துப் பழக்கம் மாறாத மனிதராகவே இருக்கின்றீர். உங்கள் அடிமைகள் உங்கள் சகோதரர்களாவர். அல்லாஹ்தான் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை உங்கள் அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கின்றான். எனவே ஒருவருடைய சகோதரர் அவரது அதிகாரத்தின் கீழ் இருப்பாரே யானால் அவர், தான் உண்பதிலிருந்து அவருக்குப் புசிக்கக் கொடுக்கட்டும், தாம் உடுப்பதிலிருந்து அவருக்கும் உடுக்கக் கொடுக்கட்டும், அவர்களின் சக்திக்கு மீறிய பணிகளைக் கொடுத்து அவர்களைச் சிரமப்படுத்த வேண்டாம். அவ்வாறு அவர்களை நீங்கள் சிரமமான பணியில் ஈடுபடுத்தினால் நீங்கள் அவர்கட்கு உதவியாக இருங்கள்' என்று கூறினார்கள். இதனால் நான் அணிவதுபோல் எனது அடிமைக்கும் உடையளித்தேன் என்றார்கள்'' (புஹாரி)

நபியவர்களின் மருமகனும் இஸ்லாமிய கலீபாக்களில் ஒருவரு மான அலி பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் தமது அடிமையிடம் பணம் கொடுத்து இரு புதிய ஆடைகள், அவற்றில் ஒன்றை விலை உயர்ந்ததாகவும் மற்றதைச் சாதாரண உடையாகவும் வாங்கிவருமாறு பணித்தார்கள். அவ்வாறு அவர் வாங்கி வந்தபின் விலைகூடிய உடையை அடிமையிடம் கொடுத்து அணியுமாறு வேண்டியதுடன் சாதாரண ஆடையைத் தனக்காக எடுத்துக் கொண்டார்கள். அப்போது அடிமையான இளைஞர் "இல்லை நீங்களே விலை கூடியதை எடுத்துக் கொள்ளுங்கள்'' எனக் கூறியபோது "நீயே வாலிபன்! நீயே விலை கூடிய உடை அணியவேண்டும். நான் எவ்வாறு உடுத்தாலும் சரிதான்'' என்றுகூறி சாதாரண உடையை தனக்காக எடுத்துக் கொண்டார்கள் அலி (ரலி) அவர்கள்.

நபி (ஸல்) அவர்களிடம் பணியாளராகக் கடமையாற்றிய அனஸ்பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

"நபி (ஸல்) அவர்களிடம் இருபது வருடங்கள் நான் பணியாள னாகச் சேவையாற்றியுள்ளேன். அவர்கள் ஒரு நாளாவது 'சீ' என்றோ 'ஏன் இதைச் செய்தாய்' என்றோ, 'ஏன் செய்யவில்லை' என்றோ என்னிடம் கடிந்துகொண்டது கிடையாது''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி தூதர் (ஸல்) அவர்களின் மனைவி உம்மு சல்மா (ரலி) அறிவிக்கிறார். நபிதூதர் அவர்கள் எனது வீட்டில் இருந்தார்கள். அவர்கள் கையில் பல் துலக்கும் (மிஸ்வாக்) குச்சி இருந்தது. அவர்கள் வேலைக்காரப் பெண்ணை அழைத்தார்கள். பல முறை அவளைக் கூப்பிட்டும் அவளைக் காணவில்லை. நபியவர்கள் முகத்தில் கோபக்குறி தெரிந்தது. நான் அப்பெண்ணைத் தேடிப் போனேன். அவள் ஓர் ஆட்டோடு விளையாடிக் கொண்டிருந்தாள். "நபியவர்கள் உன்னைக் கூப்பிட்டார்களே! உனக்குக் கேட்க வில்லையா?" எனக்கேட்டேன்; "இல்லை" என்றாள். பின் அவள் வீடு வந்தாள். அப்போது அவளிடம் நபி (ஸல்) அவர்கள் "உன்னைத் தண்டித்தால் அதற்காகப் பழிக்குப்பழி என்ற பயம் இல்லையென்றிருந்தால் இந்தக் குச்சியினால் உனக்கு அடித்திருப்பேன்" என்றார்கள். (ஆதாரம் - அஹ்மத்)

சுவைத் பின் முக்ரின் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்,
எமது வீட்டில் ஏழுபேர் இருந்தோம். எமக்கு ஊழியம் செய்தவற்காக ஓர் அடிமைச் சிறுமி இருந்தாள். அவளுக்கு எமது இளையவர் ஒருவர் அடித்துவிட்டார். இதை அறிந்த நபி (ஸல்) அவர்கள் அந்தச் சிறுமியை விடுதலை செய்யுமாறு எமக்குக் கட்டளையிட்டார்கள்.

ஒரு பணிப்பெண் செய்யும் தவறுக்கு வீட்டு எஜமான் அடிப்பதற்கு உரிமையில்லை என்பதும் மீறி அடிப்பவர் அல்லாஹ்வால் தண்டிக்கப்படுவார் என்பதையும் இச்சம்பவங்கள் மூலம் நபி (ஸல்) அவர்கள் மனித சமுதாயத்துக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

சாப்பிடும் நேரத்தில் முதலாளி ஓரிடத்திலும் தொழிலாளர்கள் மற்றோர் இடத்திலும் சாப்பிடுவதை இஸ்லாம் கண்டித்திருக்கிறது. 'முஸ்லிம்' எனும் கிரந்தத்தில் பதியப்பட்டுள்ள ஹதீஸ் ஒன்றைக் கவனியுங்கள்.

மக்காவில் உணவு நேரத்தில் ஒரு கோஷ்டியினர் சாப்பிட்டுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பணியாளர்கள் உண்ணாமல் நின்று கொண்டிருக்கிறார்கள். இதை அவதானித்த உமர் (ரலி) அவர்கள் ஆத்திரமுற்று தமது பணியாளர்களைச் சேர்க்காமல் சாப்பிட்டுக் கொண்டிருந்த முதலாளிகளைக் கண்டித்ததுடன் உடனே அவர்களோடு சேர்ந்து அதே சாப்பாட்டுப் பீங்கானில் (சஹனில்) சேர்ந்து சாப்பிடுமாறு பணித்தார்கள்.

அடிமைகளை மிருகங்களைப்போல் வேலை வாங்கி துன்புறுத்திய ஒரு சமூகத்தாரிடம் அடிமையும் மனிதன்தான் அவனுக்கு இரங்குவதும் மனிதப்பண்பு! அவனுக்கு இரங்குவதில் அல்லாஹ்விடம் இரக்கம் - அன்பு பெறலாம் என்பதை நபியவர்கள் வலியுறுத்தினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
''எவர் மனிதர்கள் மீது அன்பு காட்டவில்லையோ அவர்மீது அல்லாஹ் அன்பு காட்டமாட்டான்'' (புகாரி, முஸ்லிம், திர்மிதி)

அபூமுசா அறிவிக்கிறார்,
நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டேன்.
"நீங்கள் அன்பு காட்டி நடக்காதவரை உண்மை விசுவாசியாக மாட்டீர்கள் என அவர்கள் கூற அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் ஆளுக்கு ஆள் அன்பாகத்தானே இருக்கின்றோம் என்றோம். அப்போது அவர்கள் ''நீங்கள் உங்களுக்குள் அன்பாக இருந்துகொள்வதை அல்ல. பொதுவாக மனித இனத்தின்மீதும் அல்லாஹ்வின் படைப்புக் கள்மீதும் நீங்கள் அன்பு காட்டுவதன் மூலமாகத்தான் இந்தப் பேறை அடைவீர்கள்'' (ஆதாரம் - தபறானி)

ஜரீர் (ரலி) அறிவிக்கிறார். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
"மண்ணிலுள்ளோர்மீது யார் இரக்கம், அன்பு செலுத்தவில்லையோ அவர்கள் மீது விண்ணில் உள்ளவன் அன்பு செலுத்த மாட்டான்.
(ஆதாரம் - தபறானி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூமஸ்ஊதுல் பத்ரி அவர்கள் அறிவிக்கிறார்கள்;

"ஒரு நாள் கோபம் பொங்கி எழ எனது அடிமைக்கு நான் சாட்டையால் அடித்துக் கொண்டிருந்தேன். அவ்வேளை 'அபூமஸ்ஊத்' என்று என்னை யாரோ அழைக்கும் சப்தம் கேட்டது. ஆத்திரமேலீட்டினால் அச்சத்தத்தை நான் பொருட்படுத்தவில்லை. அவர் அண்மையில் வந்தார். அப்போது தான் றசூல் (ஸல்) அவர்கள் வருகிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன். அவர்கள் என்னை நோக்கி "அபூமஸ்ஊதே! இந்தப் பையனுக்கு நீ செய்வதைவிட உனக்கு அதிகமாகச் செய்வதற்கு அல்லாஹ் மிகுந்த சக்தியுள்ளவன் என்பதை நீ அறிந்து கொள்" என்றார்கள். எனவே, நான் வருந்தி இதன்பிறகு அடிமைகளை அடிக்கவே மாட்டேன் என்று வாக்குறுதியளித்ததுடன் அந்த விநாடி முதலே அந்த அடிமையை விடுவிப்பதாகவும் அறிவித்தேன். அப்போது நபியவர்கள் "நீ இவ்வாறு செய்திராவிடின் நரகத்தின் வாசல் உனக்காகத் திறக்கப்பட்டிருக்கும்" என்றார்கள்.

(முஸ்லிம், திர்மிதி)

நபித் தோழர் ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து "யாரசூலல்லாஹ்! எனது ஊழியர் செய்யும் குற்றங்களை எந்தளவு நான் மன்னிக்கவேண்டும்" எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள் "ஒரு நாளைக்கு எழுபது தரம்" என்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்,

"உங்கள் கீழுள்ள ஊழியர்கள் நல்லது செய்தால் அதனை வரவேற்றுக்கொள்ளுங்கள். அவர்கள் பிழை செய்தால் அதனை மன்னியுங்கள். அவர்கள் எல்லை மீறி நடக்க ஆரம்பித்தால் விற்றுவிடுங்கள்"

இவ்வாறு தனது பொறுப்பின் கீழ் உள்ளவர்களுடன் அதிகார மமதையுடன் நடக்காமல் அவர்களையும் மனிதர்களாக மதித்து அவர்களின் உரிமைகளை வழங்கி அன்பாக நடப்பதையே இஸ்லாம் வற்புறுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருகங்கள் மீது கருணையாக

மனிதனின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தவை மிருகங்கள். அவனின் வளர்ப்புப் பிராணியாக செல்லப் பிராணியாக ஏறுவாகனமாக, பொருட்களை ஏற்றி இறக்கும் சாதனமாக, உணவாக, சொத்தாக இவ்வாறு பல்வேறு வகைகளில் அவனின் வாழ்க்கையோடு அவை இணைந்துள்ளன.

وَٱلْأَنْعَـٰمَ خَلَقَهَا ۗ لَكُمْ فِيهَا دِفْءٌ وَمَنَـٰفِعُ وَمِنْهَا تَأْكُلُونَ ﴿٥﴾ وَلَكُمْ فِيهَا
جَمَالٌ حِينَ تُرِيحُونَ وَحِينَ تَسْرَحُونَ ﴿٦﴾ وَتَحْمِلُ أَثْقَالَكُمْ إِلَىٰ بَلَدٍ لَّمْ
تَكُونُوا۟ بَـٰلِغِيهِ إِلَّا بِشِقِّ ٱلْأَنفُسِ ۚ إِنَّ رَبَّكُمْ لَرَءُوفٌ رَّحِيمٌ ﴿٧﴾ وَٱلْخَيْلَ
وَٱلْبِغَالَ وَٱلْحَمِيرَ لِتَرْكَبُوهَا وَزِينَةً ۚ وَيَخْلُقُ مَا لَا تَعْلَمُونَ ﴿٨﴾

*கால் நடைகளை அவனே படைத்திருக்கிறான். அவற்றில் உங்களுக்காக (குளிரைத் தடுக்கும்) பொருட்களும் பல பிரயோசனங்களும் உள்ளன. அவற்றில் சிலவற்றை புசிக்கிறீர்கள். நீங்கள் அவற்றை மேய்ச்சலுக்காக காலையில் ஓட்டிச் செல்லும் பொழுதும் மாலையில் ஓட்டிவரும்போதும் அவை உங்களுக்கு அழகாயிருக்கின்றன. மிகக் கஷ்டத்துடனன்றி நீங்கள் செல்ல முடியாத ஊர்களுக்கு அவை உங்களுடைய பளுவான சுமைகளையும் சுமந்து செல்கின்றன. நிச்சயமாக உங்கள் இறைவன் மிக்க இரக்கமுடையோனும் கிருபையுடையோனுமாக இருக்கின்றான். குதிரைகள், கோவேறு கழுதைகள் முதலியவற்றை நீங்கள் ஏறிச் செல்வதற்காகவும், அலங்காரமாகவும் படைத்துள்ளான். நீங்கள் அறியாதவற்றையும் அவன் படைக்கிறான்.*

(அல்-குர்அன் 16:5:8)

இவ்வாறு மிருகங்கள் மனிதனுக்குச் செய்யும் சேவைகளையும் அவற்றால் இவன் அடையும் பயன்களையும் அல்லாஹ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றான். அல்-குர்ஆனிலுள்ள சில அத்தியாயங்கள் கூட மிருகங்களின் பெயர்களைக் கொண்டுள்ளன. அல்-குர்ஆனின் மிகப் பெரிய அத்தியாயத்தின் பெயர் 'அல்-பகறா' (பசுமாடு) என்பதாகும். மேலும் 'அல்-அன்ஆம்' (கால்நடைகள்) 'நஹ்ல்' (தேனீ) 'நம்லு' (எறும்பு) 'அல் - அன்கபூத்' (சிலந்திப் பூச்சி) 'அல் - பீல்' (யானை) போன்று மிருகங்களின் பெயர்களில் அல் - குர்ஆனின் அத்தியாயங்கள் அமைந்துள்ளன.

மனிதனின் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ள மிருகங்களுடன் அவன் அன்பாக - மிருதுவாக நடந்துகொள்ள வேண்டும். அம்மிருகங்களை இவன் கட்டுப்படுத்தி வாழ்வதால் அதன் உணவுத் தேவைகளை இவன் நிறைவுசெய்ய வழி செய்ய வேண்டும். வாய் பேசாத அப்பிராணிகளிடம் வேலை வாங்கிவிட்டு அதன் உணவுகளில் கவனம் செலுத்தாமல் விடுவது மிகக் கொடுமையானதாகும். எனவேதான், மனிதன் மிருகங்கள் விடயத்தில் அன்பாக நடந்துகொள்ளவேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கிறது.

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "அல்லாஹ் மிகவும் இரக்கம் உள்ளவன். அவன் சகல விடயங்களிலும் இரக்கமாக – மென்மையாக நடந்து கொள்வதையே விரும்புகிறான்" (புகாரி - முஸ்லிம்)

ஒரு மனிதன் மற்ற மனிதனுடன் எவ்வளவு தூரம் அன்பாக, கண்ணியமாக நடக்க வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றதோ அதேபோல் இறைவனின் படைப்பான மிருகங்களுடனும் அவன் அன்பு பாராட்டி நடக்க வேண்டுமென்றும் மிருகங்களுக்குச் செய்யும் நன்மைக்கு இவனுக்கு நன்மையும் அவைகளுக்குச் செய்யும் தீமைக்கு இவனுக்கு தண்டனையும் வழங்கப்படும் என்பதையும் இஸ்லாம் எமக்கு எடுத்துக் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிருகங்களுடன் அன்பாக நடப்பதும் வணக்கமாகும்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்;

''ஒரு மனிதன் பாதையால் நடந்து கொண்டிருந்தபோது வெப்பம் கடுமையாக இருந்தது. தாகம் ஏற்படவே அங்கு ஒரு கிணற்றைக் கண்டு அங்கு சென்று நீர் குடித்துவிட்டு வரும்போது அங்கு ஒரு நாய் தாகமேலீட்டினால் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு தனது கடும் தாகத்தை வெளிப்படுத்தி நின்றிருந்தது. அம்மிருகத்தின் தாகத்தை உணர்ந்த அம்மனிதர் கிணற்றடியே சென்று அந்த நாய்க்கு நீர் கொடுக்க எவ்வித பாத்திரமும் கிடைக்காததால் தனது சப்பாத்தினுள் நீரை நிரப்பி அந் நாயின் வாயினுள் ஊற்றினார். நாயின் தாகம் தீர்ந்தது. அம்மனிதனின் அச்செயலுக்காக அல்லாஹ் அவனுக்கு நன்றி கூறினான். அவனின் பாவங்களையும் மன்னித்தான்.''

இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் கூறுவதைக் கேட்ட அவரது தோழர்கள் "இறைதூதர் அவர்களே! மிருகங்களுக்கு நாம் செய்யும் சேவைகளினால் எமக்கு நற்கூலி கிடைக்குமா?" என்று கேட்க,

''ஈரமுள்ள ஈரலுடைய எல்லா வகையான உயிரினத்தாலும் நன்மை கிடைக்கும்'' என்றார்கள். (புகாரி, முஸ்லிம்)

இதே போன்று மற்றொரு ஹதீஸும் 'முஸ்லிம்' எனும் கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு பெண் அவள் நன்னடத்தை உடையவளல்ல. எனினும் அவள் உஷ்ணமான ஒரு நாளில் தாகத்தினால் நாவைத் தொங்கப்போட்டு ஒரு நாய் அவதிப்படுவதைக் கவனித்தாள். அவள் உடனே அந்நாய்க்கு நீர்புகட்டினாள் இதனால் இவளது பாவத்தை அல்லாஹ் மன்னித்து இவளுக்கு சுவர்க்கத்தை வெகுமதியாகக் கொடுத்ததாக நபி தூதர் அவர்கள் கூறினார்கள்.

இவ்வாறு மிருகங்களுக்குக் காட்டிய இரக்கத்திற்காக அல்லாஹ் நன்றி கூறியதாகவும், சுவர்க்கம் கொடுத்ததாகவும் ஹதீஸ்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிப்பதுபோல் அம்மிருகங்களுக்குச் செய்த அநியாயங்களுக்காகவும் தண்டனை வழங்கப்பட்டதாக ஹதீஸ்கள் தெரிவிக்கின்றன.

''ஒரு பூனையைக் கட்டிவைத்து அதற்கு உணவு கொடுக்காமல் பட்டினி போட்டு வேதனை செய்த ஒரு பெண் நரகத்துக்கு அனுப்பப்பட்டாள்'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(புகாரி - முஸ்லிம்)

இப்பெண் தொழுகை, நோன்பு போன்ற இஸ்லாமியக் கடமைகளை ஒழுங்காகச் செய்த பெண் என்றும் இவ்வாறு மிருகங்களை வதை செய்வது பாரிய குற்றச் செயல் என்றும் இமாம் நவவி (ரஹ்) அவர்கள் இந்த ஹதீஸுக்கான விளக்கவுரையில் குறிப்பிடுகின்றார்கள்.

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள், முகத்திலே குறி சுடப்பட்டிருந்த ஒரு கழுதையைக் கண்டார்கள். அப்போது அவர்கள் ''இதற்கு முகத்தில் குறி சுட்டவனை அல்லாஹ் சபிப்பானாக'' என்றார்கள்.
அறிவிப்பவர் - இப்னு அப்பாஸ் (முஸ்லிம்)

இப்னுமஸ் ஊத் (ரலி) அறிவிக்கிறார்கள்,
நபி (ஸல்) அவர்களுடன் நாம் ஒரு பயணம் மேற்கொண்டிருந்தோம். அங்கே எறும்பின் புற்றைக் கண்டு அதனைத் தீயிட்டுக் கொழுத்தினோம். அப்போது அங்கே வந்த நபியவர்கள் இவ்வாறு நெருப்புக் கொடுத்தது யார்? என்று வினவ நாம்தான் என்றோம். நெருப்பினால் வேதனைசெய்யும் தகுதி அல்லாஹ்வுக்கே தவிர வேறு யாருக்குமில்லை என்று எம்மைக் கண்டித்தார்கள்
(அபூதாவூத்)

மிருகங்களை உபயோகிப்பவர்கள் அதில் பயன்பெறுபவர்கள் அதன் நலனிலும் கவனம் செலுத்தவேண்டும் என்றும் அது மிருகம்தான் என்பதற்காக அளவுக்கதிகமாக சுமையேற்றல், வேலை கொடுத்தல் உணவு கொடுக்காமல் விடல் போன்ற விடயங்களை இஸ்லாம் வன்மையாகக் கண்டித்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை உமர் (ரலி) அவர்கள் ஒட்டகத்திலே அளவுக்கதிகமாக பொருட்களை ஏற்றிவந்த ஒரு ஒட்டகையோட்டிக்கு அடித்ததுடன் "அது தாங்க முடியாதவற்றை அதிலே ஏற்றியுள்ளீரா?" என்று கடிந்து கொண்டார்கள்.

இப்னு ஜஃபர் அறிவிக்கின்றார்கள்,
நான் நபி (ஸல்) அவர்களோடு ஒரு நாள் பிரயாணம் மேற்கொண்டிருந்தேன். அவர்கள் அன்ஸாரீன்கள் ஒருவரின் தோட்டத்திற்குள் நுழைந்தார்கள். அப்போது அங்கே ஒரு ஒட்டகம் நின்று கொண்டிருந்தது. நபி அவர்களை கண்டதும் அதன் கண்களில் இருந்து நீர் வடிந்தோடின. அதன் அருகில் நபி அவர்கள் வந்து அதனைத் தடவி இது யாருடைய ஒட்டகம் என்று கேட்டார்கள். அப்போது ஓர் அன்ஸாரிய வாலிபன் இது என்னுடையது நாயகமே என்று கூறினான். அப்போது நபி அவர்கள் "நீ சொந்தக்காரனாக உள்ள இந்த மிருக விடயத்திலே நீர் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளவில்லையா? நீ அதனைப் பசியில் போடுவதாகவும் அதற்கு கடும் வேலை கொடுப்பதாகவும் முறையிடுகிறது" என்றார்கள். (அஹ்மத் அபூதாவூத்)

இவ்வாறு மிருகங்களை பசியில் போடுவதும் அது தாங்காத வேலைகளை அதற்குத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருப்பதும் தவிர்க்கப்படல் வேண்டும் என்பது தெளிவாகிறது.

இப்னுமஸ் ஊத் (ரலி) அறிவிக்கிறார்கள்,
"நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு பயணம் மேற்கொண்டிருந்தோம். அவர்கள் ஒரு தேவைக்காக வெளியே சென்றிருந்தார்கள். அவ்வேளை இரு குஞ்சிகளோடு ஒரு பறவையைக் கண்டோம். அவ்விரு குஞ்சுகளையும் நாம் பிடித்துவிட்டோம். தாய்ப்பறவை வந்து வட்டமிட்டுக் கொண்டு நின்றது. அவ்வேளை நபியவர்கள் அங்கு வந்தார்கள். 'இதன் குஞ்சுகளை அபகரித்தது யார்? உடனே அதன் குஞ்சுகளைக் கொடுத்து விடுங்கள்' என்றார்கள்" (அபூதாவூத்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏறுவாகனம்

மனிதனை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு கொண்டு செல்லும் பணியை முற்காலத்தில் மிருகங்களே செய்துவந்தன. இன்றும் கூட அது பல நாடுகளில் பழக்கத்தில் உள்ளன. இவ்வாறு பயணிகளைச் சுமந்து செல்லும் மிருகங்களுக்கு ஓய்வுகொடுக்க வேண்டியதும், புல் தரைகளில் மேய்ச்சலுக்கு விட வேண்டியதும் இவனது பொறுப்பாகும்.

நபி (ஸல்) கூறினார்கள்;
''செழுமையான பூமியிலே நீங்கள் பயணம் மேற்கொண்டால் உங்கள் ஒட்டகைக்கு பூமியின் பேற்றை பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கொடுங்கள்''

(அறிவிப்பவர் அபூஹுறைறா - புகாரி - முஸ்லிம்)

''ஒரு மிருகத்தில் இரண்டு பேருக்கு மேல் ஏறிப் பயணம் செய்வதை நபியவர்கள் தடுத்தார்கள்'' (தபறானி)

இப்னு அபூசைபா அறிவிக்கிறார்கள், "கோவேறு கழுதையின் மீது மூவர் பயணம் செய்வதை அவர் அவதானித்தார். உடனே அவர்களிடம் உங்களில் ஒருவர் இறங்கவும் ஏனெனில் மூன்றாவது நபரை நபியவர்கள் சபித்துள்ளார்கள்" எனக் கூறினார்.

அலி (ரலி)) அறிவிக்கிறார்கள் ''ஒரு மிருகத்தின் மீது மூவர் ஏறிப்பயணம் செய்வதைக் கண்டால் அவர்களில் ஒருவர் இறக்கும் வரை கல்லால் எறியுங்கள்'' (தபறானி)

மிருகங்களுக்கு மேலே ஏறி நிற்பதையும் மாடு போன்ற ஏறுவாகனமாக பாவிக்க முடியாத மிருகங்கள்மீது பயணம் மேற்கொள்வதையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலாளர்களுடன் அன்பாக

மனிதன் சோம்பேறியாக யாசகன் கேட்போனாக இல்லாமல் உழைத்து வாழக்கூடியவனாக இருக்க வேண்டும் என வலியுறுத்தும் இஸ்லாம் இப்பூவுலகம் தொழில் முயற்சி செய்வதற்குரிய தலமாகப் படைக்கப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்துகிறது.

அல்லாஹ் கூறுகிறான்;

ٱلَّذِى جَعَلَ لَكُمُ ٱلْأَرْضَ مَهْدًا وَسَلَكَ لَكُمْ فِيهَا سُبُلًا وَأَنزَلَ مِنَ ٱلسَّمَآءِ
مَآءً فَأَخْرَجْنَا بِهِۦٓ أَزْوَٰجًا مِّن نَّبَاتٍ شَتَّىٰ ﴿٥٣﴾ كُلُوا۟ وَٱرْعَوْا۟ أَنْعَٰمَكُمْ ۗ إِنَّ
فِى ذَٰلِكَ لَءَايَٰتٍ لِّأُو۟لِى ٱلنُّهَىٰ ﴿٥٤﴾

*அவன் பூமியை விரிப்பாக அமைத்து அதில் பாதைகளையும் உங்களுக்கு ஏற்படுத்தினான். மேலும் வானத்திலிருந்து நீரை இறக்கினான். இதைக் கொண்டு நாம் பலதரப்பட்ட தாவரங்களிலிருந்து பலவகைகளை வெளிப்படுத்தி விட்டோம். அவற்றை நீங்கள் உண்ணுங்கள், உங்கள் கால்நடைகளையும் மேய விடுங்கள். அறிவுடையோருக்கு இதில் அத்தாட்சிகள் உள்ளன.*

(அல்-குர்ஆன் 20:53,54)

பூமியை உழைப்பதற்கேற்ற பூமியாக ஆக்கியுள்ள அல்லாஹ் அப்பூமியில் மனிதன் பல்வேறு தொழில்களைச் செய்து அவனது வாழ்வாதாரங்களைத் தேடுவதற்கு வழிவகுத்துள்ளான். இவ்வாறு அவன் செய்யும் பணிகளில் கையினால் உழைத்து உண்பதை இஸ்லாம் வரவேற்கிறது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

''தன் கையினால் உழைத்து உண்பதை விடச்சிறந்த உணவை யாரும் உண்பதற்கில்லை''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்செய்யும் ஒரு விசுவாசியையே அல்லாஹ் விரும்புகிறான். நபிமார்களில் பலர் தொழில் செய்து வாழ்வோராகவே இருந்துள்ளனர். நபி ஆதம் (அலை) அவர்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளார். அவரே பூமியை உழுபவராக, விவசாய உபகரணங்களைச் செய்பவராகவும் இருந்துள்ளார்.

நபி இத்ரீஸ் (அலை) அவர்கள் ஆடைகளைத் தைக்கும் தையல் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். ஆடைகளைத் தைத்து முதலில் உடுத்தவரும் இவரே!

நபி நூஹ், ஈஸா, சக்கரிய்யா (அலை) ஆகியோர் தச்சுத்தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். நூஹ் (அலை), மூஸா (அலை) ஆகியோர் மந்தை மேய்ப்பவர்களாகவும், நபி தாவூத் (அலை) அவர்கள் இரும்புக் கவசம் செய்யும் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். எங்கள் நபி (ஸல்) அவர்களும் ஆரம்பத்தில் மந்தை மேய்ப்பவராகவும் பின்னர் வியாபாரம் செய்பவராகவும் இருந்தது குறிப்பிடத் தக்கதாகும். இவ்வாறு தொழில் புரிவதை வரவேற்று ஊக்கப்படுத்தும் இஸ்லாம் இரந்து வாழும் ஈனப்பழக்கத்தைக் கண்டிக்கிறது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ''உங்களில் ஒருவன் கயிற்றை எடுத்து அதனைக் கொண்டு விறகுகளை எடுத்தக் கட்டி அவ் விறகுக்கட்டை தன் முதுகில் சுமந்து கொண்டு வந்து விற்று அதன்மூலம் தன்னை நரகத்தை விட்டும் காத்துக் கொள்வது அவன் மனிதர்களிடம் சென்று யாசிப்பதைவிட மேலானது''

மேற்கூறிய ஹதீஸ் தொழில் செய்வதன் மகத்துவத்தையும் யாசகம் செய்வதன் கொடூரத்தையும் தெளிவாக்குகிறது.

''அதிகமான வேலை செய்து காய்ச்சிப்போன ஒரு சஹாபாத் தோழரின் கையை றசூல் (ஸல்) அவர்கள் முத்தமிட்டார்கள். முத்தமிட்ட நபி (ஸல்) அவர்கள், ''இதுதான் அல்லாஹ்வும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது தூதரும் விரும்பும் கரம்'' என்றார்கள். (தபறானி)

தொழில் செய்து உண்பதை அல்லாஹ்வின் பாதையில் புனிதப் போர் செய்வதற்குச் சமமாக நபி (ஸல்) அவர்கள் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

ஒரு நாள் ஒரு வாலிபர் சென்றுகொண்டிருந்தார். அவரது தோற்றத்தையும் உடலமைப்பையும் பார்த்த நபித் தோழர்கள் "இறைதூதரே! இவ்வாலிபர் அல்லாஹ்வின் பாதையில் புனிதப் போர் செய்தால் எவ்வளவு பயனுள்ளதாக அமையும்" என்றனர். அப்போது நபி தூதர் அவர்கள் "அவர் அவரது பிள்ளைகளுக்காக உழைப்பதற்காகச் செல்வதும் தனது உணவுக்காக அவர் முயற்சிசெய்வதும் அல்லாஹ்வின் பாதையிலே யுத்தம் செய்வதற்குச் சமமானதாகும். அவர் பெருமைக்காகவும் முகஸ்துதிக்காகவும் பொருளீட்டுவது அது ஷெய்த்தானின் பாதைக்குரியது'' என்றார்கள்.

ஒரு மனிதன் உழைக்காமல் யாசகம் கேட்டு வாழ்வதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. அவ்வாறு வாழ்வது மறுமையில் தண்டனைக்குரிய குற்றம் என இஸ்லாம் எச்சரிக்கிறது.

ஒரு நாள் மதீனாவைச் சேர்ந்த ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து யாசகம் கேட்டார். அப்போது அவரிடம் "உனது வீட்டில் என்ன பொருட்கள் உள்ளன?" என வினவினார்கள். அவர் "தனது வீட்டில் நீர் அருந்தும் பாத்திரம் ஒன்றும் ஒரு விரிப்பும் இருப்பதாக" கூறினார். "அவற்றைக் கொண்டுவாரும்" என வேண்டியதும் அதனைக் கொண்டு வந்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள் அப்பொருட்களை எடுத்து தனது தோழர்களை நோக்கி "இவ்விரண்டையும் யார் வாங்கப் போகிறீர்கள்" எனக் கேட்டார்கள். அப்போது எங்கிருந்தோ ஒருவர் "அவற்றை நான் ஒரு திர்ஹத்துக்கு வாங்குகிறேன்" என்றார். அப்போது "அதை விட அதிகமாக யார் வாங்குவீர்கள்" என மும்முறை நபித்தூதர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்க மற்றொருவர் "தான் இரண்டு திர்ஹத்துக்கு வாங்குவதாக" கூறினார். அதனைப் பெற்றுக்கொண்ட நபி தூதர் அவர்கள் "இதில் ஒரு நாணயத்தை எடுத்துக்கொண்டு போய் உனது குடும்பத்துக்கு உணவு வாங்கு, மற்ற நாணயத்துக்கு ஒரு கோடரியை வாங்கிக் கொண்டு வா" என்றார்கள். அவ்வாறு அவர் கோடரியை வாங்கிக் கொண்டு வரவே அதற்கு தமது கரத்தால் பிடிபோட்டுக் கொடுத்த நபி தூதர் அவர்கள் "இதனைக் கொண்டு போய் விறகுவெட்டி விற்பனை செய். பதினைந்து நாட்களுக்கு இப்பக்கம் வராதே!" என்றார்கள். அதன்பின் அவர் வந்து "இந்த நாட்களுக்குள் தான் பத்து திர்ஹம்கள் சம்பாதித்ததாகவும் அவற்றைக் கொண்டு உணவும் உடையும் வாங்கியதாக" கூறவே, நபிதூதர் அவர்கள் ''மறுமை நாளில் கறுப்பு விழுந்த முகத்துடன் நீ வருவதைவிட இது உனக்கு மிகவும் சிறந்ததாகும்'' என்றார்கள்.

## தொழிலாளர்களின் கூலியை உடன் வழங்குக!

நபி (ஸல்) அவர்கள் தொழில் புரிபவர்களைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள். மேலும் அவ்வாறான தொழிலாளியின் கூலியை அவனது வியர்வை வற்றுமுன் கொடுத்துவிடுங்கள் என வலியுறுத்தியுள்ளார்கள். (இப்னுமாஜா)

''ஒரு தொழிலாளியைக் கூலிக்கமர்த்தி வேலை வாங்கிவிட்டு அவனது கூலியைக் கொடுக்காமல் யார் மறுக்கின்றாரோ மறுமை நாளில் அவருக்கெதிராக நான் வழக்காடுவேன்'' என நபி தூதர் அவர்கள் கூறினார்கள். (புகாரி)

மேலும், வேலை நேரத்தின்போது தொழிலாளர்கட்கு ஓய்வு கொடுத்தல், அவர்களின் சக்திக்கு மேற்பட்ட கடின வேலைகளைக் கொடுக்காதிருத்தல் போன்றவற்றை இஸ்லாம் வலியுறுத்துகிறது.

يُرِيدُ ٱللَّهُ أَن يُخَفِّفَ عَنكُمْ ۚ وَخُلِقَ ٱلْإِنسَٰنُ ضَعِيفًا


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அல்லாஹ் உங்களுக்கு இலேசாக்கி வைக்க நாடுகிறான். மேலும் மனிதன் பலவீனனாகப் படைக்கப்பட்டுள்ளான்.*

(அல்-குர்ஆன் 4.28)

لَا يُكَلِّفُ ٱللَّهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا

*அல்லாஹ் எந்தவொரு ஆத்மாவையும் அதன் சக்திக்குமேல் கஷ்டப்படுத்தமாட்டான்.* (அல்-குர்ஆன் 2.286)

நபி (ஸல்) கூறினார்கள்;
"நீங்கள் இலகுபடுத்துங்கள், கஷ்டப்படுத்தாதீர்கள். நற்செய்தி கூறுங்கள் கடுகடுக்காதீர்கள்" (புகாரி, முஸ்லிம்)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்;
"ஒவ்வொரு மணி நேரத்துக்குப் பின்னும் உள்ளங்களுக்கு ஓய்வு கொடுங்கள். ஏனெனில் ஓய்வின்றி உள்ளங்களுக்கு வேலை கொடுத்தால் அது பாதிக்கப்படும்" (புகாரி, முஸ்லிம்)

இவ்வாறு தொழிலாளர்களின் உரிமைகளைக் கொடுக்கும் இஸ்லாம் அவர்கள் தொழில்புரியும் இடத்துக்கு விசுவாசமானவர்களாகவும் தொழில் தரும் முதலாளிகளுடன் நட்புறவுடனும் நல்லிணக்கத்துடனும் தொழிற்பட வேண்டுமென்றும் வர்க்க பேதங்களை வளர்க்கக் கூடாதென்றும், மோசடி போன்ற தீய செயல்களில் ஈடுபடக் கூடாதென்றும் தொழிலாளர்களை வேண்டுகிறது. மேலும் தாம் செய்யும் தொழிலை சிறப்பாகவும் சீராகவும் செய்யவேண்டும் என்றும் அது எதிர்பார்க்கிறது.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ لَا تَخُونُواْ ٱللَّهَ وَٱلرَّسُولَ وَتَخُونُوٓاْ أَمَٰنَٰتِكُمْ وَأَنتُمْ تَعْلَمُونَ

*விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் மோசம் செய்யாதீர்கள். நீங்கள் அறிந்து கொண்டே உங்கள் அமானிதங்களுக்கும் மோசம் செய்யாதீர்கள்* (அல்-குர்ஆன் 8:27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே 'அமானிதம்' என்பது ஒருவர் செய்யும் தொழிலையும் குறிக்கும் என்பது குறிப்பிடக்தக்கது.

وَلَتُسْـَٔلُنَّ عَمَّا كُنتُمْ تَعْمَلُونَ

*நீங்கள் செய்கின்றவற்றைப் பற்றி கேள்வி கேட்கப்படுவீர்கள்.*

(அல்-குர்ஆன் 16:93)

''நீங்கள் செய்யும் வேலையை சீராகவும் திறமையாகவும் செய்வதையே அல்லாஹ் விரும்புகிறான்'' (முஸ்லிம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுடன் அன்பாக

'பெண்கள் பிறப்பதே பாவம்' என்று கருதப்பட்டு பெண் குழந்தைகள் உயிரோடு புதைக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் - சமூகச் சூழலில் பிறந்த நபி முஹம்மது (ஸல்) அவர்கள் பெண்கள் சுதந்திரமாக வாழ்வதற்குரிய சகல உரிமைகளையும் பெற்றுக் கொடுத்துள்ளார்கள்.

வரலாற்றுப் புகழ்பெற்ற இறுதி ஹஜ்ஜு பேருரையின்போதும் பெண்களின் உரிமைகளை வழங்குமாறும் அவர்களோடு அன்பாக நடந்துகொள்ளுமாறும் மனித சமுதாயத்துக்குக் கட்டளை யிட்டார்கள்.

## கல்வி உரிமை

கல்வி கற்றுக்கொள்வது ஆண்கள் மீது கடமை என்பதுபோல் பெண்களுக்கும் அது கடமை என்பதை 1400 ஆண்டுகளுக்கு முன்னே நபி (ஸல்) அவர்கள் பிரகடனப்படுத்தினார்கள். நபி (ஸல்) அவர்களின் மனைவியரில் ஹப்ஸா (ரலி)வும் ஒருவர். இவரது தந்தையே உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள். இந்த ஹப்ஸா அவர்கள் நபியவர்களைத் திருமணம் செய்யமுன் மதீனாவில் ஷிபா அல் அதவிய்யா என்ற பெண்ணிடம் எழுத்து, வாசிப்பு போன்றவற்றைக் கற்றுக் கொண்டிருந்தார்கள். (இந்த ஷிபா என்ற பெண் மதீனாவில் பல பெண்களுக்கு எழுத, வாசிக்கக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்) திருமணம் முடிந்த பின் நபியவர்கள் அந்தப் பெண்ணை அழைத்து தொடர்ந்து ஹப்ஸாவுக்கு கற்றுக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்கள்.

(புதூஹுல் புல்தான்)

நபியவர்களின் மனைவிமார்களில் ஆயிஷா (ரலி), உம்மு சல்மா (ரலி) போன்றவர்களும் எழுத வாசிக்கக் கற்றுக் கொண்டதாக வாகிதீ குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொத்தில் உரிமை

பெற்றோர் விட்டுச் செல்லும் சொத்தில் பெண்களுக்கும் உரிமை உண்டு என்பதை அல்-குர்ஆன் பின்வருமாறு பிரகடனப்படுத்தியது.

لِّلرِّجَالِ نَصِيبٌ مِّمَّا تَرَكَ ٱلْوَٰلِدَانِ وَٱلْأَقْرَبُونَ وَلِلنِّسَآءِ نَصِيبٌ مِّمَّا
تَرَكَ ٱلْوَٰلِدَانِ وَٱلْأَقْرَبُونَ مِمَّا قَلَّ مِنْهُ أَوْ كَثُرَ

*பெற்றோரோ நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற சொத்துக்களிலிருந்து ஆண்களுக்குப் பாகமுண்டு. (அவ்வாறே) பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற சொத்துக்களிலிருந்து பெண்களுக்கும் பாகமுண்டு.*

(அல்-குர்ஆன் 4.7)

இந்த அல்-குர்ஆன் வசனம் பெண்களுக்கும் சொத்தில் உரிமை என்பதை குறிப்பிட்டுச் சொன்ன விதமே அற்புதமானதாகும். ஆண்களுக்கு இருக்கும் உரிமை பெண்களுக்கும் உள்ளது என்பதை இதன் மூலம் அது தெளிவுபடுத்தியது.

## திருமணத்தில் பெண்ணின் அனுமதி

திருமணத்திற்கு முன் பெண்களின் சம்மதம் பெறவேண்டுமென்று இஸ்லாம் அப்பெண்ணின் உரிமையாளர்கட்கு கட்டளை இடுகிறது. பெண்ணின் சம்மதம் பெறாமல் முடித்து வைக்கப்பட்ட திருமணம் ஒன்றை அப்பெண்ணின் முறையீட்டைத் தொடர்ந்து நபியவர்கள் இரத்துச் செய்தார்கள். (புகாரி)

## உரிமைப் போராட்டத்தில் ஒரு பெண்

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். தன்னிடம் ஒரு வாலிபப் பெண்வந்து தனது தந்தை தனது விருப்பமின்றி தன்னைத் திருமணம் முடித்துக் கொடுத்ததாக முறையிட்டார். இவ்விடயத்தை ஆயிஷா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் எடுத்துக் கூறினார்கள். பின்னர் நபியவர்கள் அப்பெண்ணின் தந்தையை அழைத்து விடயத்தை வினவியபின் பெண்ணின் விருப்பமின்றிச் செய்யப்பட்ட இத்திருமணத்தில் அப்பெண்ணின் முடிவே ஏற்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென தீர்ப்பு வழங்கினார்கள். அவ்வேளை அப்பெண் இத்திருமணத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நான் தங்களிடம் வந்து முறையிட்டதன் நோக்கம் பெண்ணின் விருப்பமின்றித் திருமணம் முடித்துக் கொடுக்கும் உரிமை தந்தைமாருக்குக் கிடையாது என்பதைப் பெண்களுக்குத் தெளிவுபடுத்தவே எனக் கூறினார். (நஸயீ)

## மஹரைக் கட்டுப்படுத்த முடியாது

ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதாயின் அவள் ஏற்றுக் கொள்ளும் தொகை ஒன்றைக் கொடுத்தே திருமணம் நடைபெற வேண்டுமென்பது இஸ்லாமிய விதி. இதற்கு 'மஹர்' என அழைக்கப்படுகிறது. மஹர்ப்பண அதிகரிப்பால் வாலிபர்கள் பலர் திருமணம் செய்ய முடியாத நிலை இஸ்லாமிய நாடுகளில் அன்றும் இன்றும் உள்ளது. இத்தொகையை கட்டுப்படுத்த வேண்டும் என்று கருதிய கலீபா உமர் (ரலி) அவர்கள் பலருடன் கலந்துரையாடிய பின் மஹர்த் தொகையை 400 திர்ஹம்களாக மட்டுப்படுத்த வேண்டுமென்று மிம்பரில் ஏறி பிரகடனப் படுத்தினார்கள். இவ்வேளை குறைஷியைச் சேர்ந்த ஒரு பெண்மணி கலீபா அவர்களின் இப்பிரகடனத்துக்கு ஆட்சேபம் தெரிவித்தார். அல்லாஹ் எமக்கு அல்-குர்ஆன் மூலம் வழங்கியுள்ள உரிமையை உங்களால் எவ்வாறு மறுக்க முடியும்? எனக் கேட்டார். அப் பெண்ணின் வாதத்தினால் வாயடைத்துப் போன கலீபா அவர்கள் "உமர் தவறிழைத்து விட்டார். பெண் சரியாகக் கூறிவிட்டார்" என்றார்கள்.

மற்றொரு தகவலின்படி இப்பெண் குர்ஆன் வசனத்தை ஓதிக் காட்டியதைத் தொடர்ந்து உமர் (ரலி) அவர்கள் "இறைவா! என்னை மன்னித்துக்கொள். உமரை விட மற்ற மனிதர்கள் எல்லாம் சிறந்த அறிஞர்களாகவுள்ளனர்" எனக் கூறிவிட்டு மிம்பரில் ஏறி "நான் 400 திர்ஹம்களைவிடக்கூடுதல் தொகையை மஹராகக் கொடுக்க வேண்டாம் என்று உங்களைத் தடுத்தேன். விரும்பியவர் விரும்பிய தொகையைக் கொடுக்கலாம்; கட்டுப்பாடு கிடையாது. நான் முன்பு கூறிய கட்டளையை மீளப்பெறுகிறேன்" என்றார்கள். (இப்னுகதீர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சேவையும் மார்க்க சேவையே!

மனிதன் மனிதனுக்குச் செய்யும் சேவைகளை மார்க்க சேவையாக; இறைவனுக்குச் செய்யும் நன்றியாக இஸ்லாம் ஏற்றுக் கொள்கிறது. அதற்கு நற்கூலி இருப்பதாக நவில்கிறது.

''மனிதர்கள் போக்குவரத்துச் செய்யும் வழியைத் தடைசெய்து கொண்டிருந்த ஒரு மரக்கிளையை வெட்டி பாதையைச் சீர் செய்ததற்காக ஒருவர் சுவனத்தில் நுழைந்ததாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.'' (முஸ்லிம்)

மற்றொரு அறிவிப்பு பின்வருமாறு கூறுகிறது,
''ஒரு மனிதன் பாதையால் நடந்து கொண்டிருந்தான். அங்கே பாதையைக் குறுக்கீடு செய்து வீழ்ந்துகிடந்த மரக்கொப்பை எடுத்து அவன் தள்ளிப்போட்டு பாதையைச் சீராக்கினான். இதனால் அல்லாஹ் அவனுக்கு நன்றி செலுத்தியதுடன் அவனது பாவங்களையும் மன்னித்தான்''.

(புகாரி, முஸ்லிம்)

''ஒரு வழியில் கிடக்கும் முள்ளை எடுத்து அவ்வழியை சீராக்குவதும் ஸதக்கா – புனிதக் கொடை'' என நபி தூதர் நவின்றார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''எனது சமூகத்தாரின் நல்ல செயல்களும் தீய செயல்களும் என்னிடம் காட்டப்பட்டன. அவர்களின் நற்செயலாக எனக்கு காட்டப்பட்டது, பாதையில் கிடக்கும் இடர்களை நீக்கி போக்குவரத்துக்கு ஏற்ப வழி செய்வதும் எனக்குப் பிழையாகக் காட்டப்பட்டது, பள்ளிவாசலிலே துப்பிவிட்டு அதனைப் புதைக்காமல் விடுவதும்'' என்றார்கள். (முஸ்லிம், இப்னுமாஜா)

ஒருவர் நாட்டுகின்ற விதை முளைத்து அந்த விதையில் விளையும் பயிரை மனிதனோ மிருகமோ அல்லது பறவையோ சாப்பிட்டாலும் விதைத்தவனுக்கு நற்கூலி இருப்பதாகவும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி தவறிய ஒருவனுக்கு வழிகாட்டுவதும் தர்மம் என்று கூறிய அவர்கள் ''தனது சகோதரனின் தேவையை நிறைவேற்று வதற்காக அவனுடன் செல்வது எனது இந்தப் பள்ளியிலே இரண்டு மாதங்கள் (இஃதிகாப்) தரித்திருந்து வணக்கத்தில் ஈடுபடுவதை விட மேலானது'' என்றார்கள்.

மேலும் அவர்கள் கூறினார்கள், ''எவன்தன் சகோதரனின் தேவையை நிறைவேற்றுகின்றானோ அல்லாஹ் அவனது தேவையை நிறைவேற்றுவான். எவன் ஒரு முஸ்லிமின் கஷ்டங்களை நீக்குகின்றானோ மறுமை நாளில் அவனது கஷ்டங்களை அல்லாஹ் நீக்குவான். எவன் ஒரு முஸ்லிமின் இரகசியத்தை மறைக்கின்றானோ மறுமையில் அவனது இரகசியங்களை அல்லாஹ் மறைப்பான்.'' (புகாரி, முஸ்லிம்)

இவ்வாறு இஸ்லாம் மனிதன் மனிதனுக்குச் செய்யும் சேவைகளை இறைசேவையாக ஏற்று அதற்கு நற்கூலி வழங்குகிறது. ஒரு நாய்க்கு நீர் புகட்டியவனுக்கு அல்லாஹ் நன்றி கூறியதாகவும் நாய்க்கு நீர் புகட்டிய காரணத்துக்காக ஒரு விபச்சாரம் புரிந்த பெண்ணுக்கு சுவனத்தை அல்லாஹ் பரிசளித்ததாகவும், நல்வணக்கங்களைப் புரிந்த பெண் பூனை ஒன்றைக் கட்டிவைத்து உணவு கொடுக்காமல் கொலை செய்தமைக்காக நரகம் புகுந்ததாகவும் வந்த ஹதீஸ்கள் ஏலவே கூறப்பட்டுள்ளன. மிருகங்களுக்குச் செய்யும் சேவைக்கே இவ்வளவு உயர்வு கிடைக்குமென்றால் இறைவனின் படைப்புக்களில் மேலான மனிதனுக்குச் செய்யும் சேவைகளுக்கிருக்கும் மாண்புகளைக் கூறவேண்டுமா?

எனவே, இஸ்லாத்தின் வணக்க வழிபாடுகள் என்பது சில சடங்குகளைக் கொண்டதல்ல ''உன் மனைவியுடன் நீ உடலுறவு கொள்வதும் வணக்கம். அதற்கும் நற்கூலி உண்டு என்று நபி (ஸல்) அவர்கள் கூறியபோது தோழர்கள் ''நாங்கள் எங்கள் இச்சை களைத் தீர்த்துக்கொள்ள எம் மனைவிகளை நாடுகின்றபோது அதற்கும் நற்கூலியா'' எனக் கேட்க அவர்கள் ''நீங்கள் உங்கள் ஆசைகளைத் தீர்த்துக்கொள்ள வேறு வழிகளைத் தேடினால் அது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் இல்லையா?'' என்று திருப்பிக்கேட்டார்கள்.

பக்கத்து வீட்டான் பசித்திருக்க தான் மட்டும் வயிறார உண்பவன் உண்மை விசுவாசியாக மாட்டான் என்றும் அவர்கள் கூறினார்கள்
(தபறானி)

அடுத்த வீட்டுக்காரிக்கு துன்பம் செய்து கொண்டிருந்த ஒருத்தியை அல்லாஹ் நரகத்துக்கு அனுப்புவதாகவும் ஒரு ஹதீஸ் கூறுகிறது.

ஒரு மனிதனின் நிலத்திலிருந்து ஒரு சாண் நிலத்தை ஒருவன் அபகரித்தால் அவனுக்கு நாளை மறுமையில் ஏழு பூமியில் இருந்தும் இவனுக்கு பூமியை மாலையாகப் போட்டு வேதனை செய்யப்படும். இவன் அபகரித்த பூமியைத் தோண்டுமாறு இவனுக்கு பணிக்கப்படும் என்றும் ஹதீஸ்கள் தெரிவிக்கின்றன.
(புஹாரி, முஸ்லிம்)

அபுஹுரைரா அறிவிக்கின்றார்;
நபி (ஸல்) அவர்களிடம் ஒரு பெண்ணைப் பற்றிக்கேட்கப்பட்டது அவள் அதிகம் தொழுபவள், நோன்பு பிடிப்பவள், தர்மம் செய்பவள். ஆனால் 'அவளோ தனது அடுத்த வீட்டுக்காரர்களை என்றும் துன்புறுத்துபவள்' இவ்வாறு கூறப்பட்டதும் அவள் நரகவாதி என்றார்கள்.
(அஹ்மத்)

வீட்டுக்கு ஒரு விருந்தாளி வரும்போது அவ்விருந்தாளியை உபசரிப்பதும் இஸ்லாம் என்றும், அதற்கும் நற்கூலி உண்டு என்றும் இஸ்லாம் கூறுகிறது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''எவர் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் விசுவாசிக்கிறாரோ அவர் தனது விருந்தாளியைக் கௌரவிக்கவும்''
(புகாரி முஸ்லிம்)

இவ்வாறு மனிதன் மனிதனுக்குச்செய்யும் சேவைகளை அல்லாஹ்வுக்குச் செய்யும் சேவையாகவும் மனிதனுக்கு மனிதன் புரியும் தீமைகளை அல்லாஹ்வுக்குச் செய்யும் தீங்காகவும் இஸ்லாம் ஆக்கி மனித சேவைக்கு பெரும்சிறப்பை ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேய மாநபி

*அல்லாஹ்வின் தூதரில் உங்களுக்கு அழகிய முன் மாதிரிகள் இருக்கின்றன.*
(அல்-குர்ஆன் 33.21)

*நபியே! நிச்சயமாக நீங்கள் மேலான நற்குணத்தின் மீது உள்ளீர்கள்.*
(அல்-குர்ஆன்)

மேற்கண்டவாறு நபி தூதர் (ஸல்) அவர்களின் நற்பண்புகளை யிட்டு அல்-குர்ஆன் சான்று பகர்கிறது.

நபி (ஸல்) அவர்கள்கூட "மேலான நற்பண்புகளை பூர்த்தி செய்யவே நான் நபியாக அனுப்பப்பட்டேன்" எனக் கூறினார்கள். அதாவது நபி (ஸல்) அவர்கள் நற்பண்புகளை அணிகலனாகக் கொண்டவர்களாகவும் அதன் மூலம் மனித நேயத்தை வளர்ப்பவர் களாகவுமே செயற்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு நாள் புனிதமிக்க மஸ்ஜிதிலே நாட்டறபி ஒருவர் சிறுநீர் கழித்தார். இதனைக் கண்ட மக்கள் ஆத்திரமடைந்து அவரைத் தடுக்க முயன்றனர் - சப்தமிட்டனர். அப்போது நபி (ஸல்) அவர்கள் மிக அமைதியாக அவர் அதனைச் செய்து முடிக்கும் வரை எதுவும் செய்ய வேண்டாம் என வேண்டினார்கள். அவர் கழித்து முடிந்ததும் ஒருவாளி நீர் கொண்டுவருமாறு கூறி அவ்விடத்தைச் சுத்தமாக்கினார்கள்.

(அறிவிப்பவர் அனஸ் பின் மாலிக் ஆதாரம் புகாரி, முஸ்லிம்)

நபி தூதர் அவர்களுக்கு முன்னிலையில் அவர்களின் பள்ளியிலே ஒருவர் சிறுநீர் கழிப்பதைத் தடுக்காமல் அதனைப் பார்த்துக் கொண்டு நின்றுவிட்டு அதனை அவர்களே சுத்தமாக்கினார்கள் என்றால் அந்தக் காருண்ய நபியின் மனித நேயப்பண்புகளுக்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்? இன்று எம் மத்தியில் இவ்வாறான ஒரு நிகழ்வு நடந்தால் எத்தனை உயிர்ப்பலி அதனால் ஏற்படும் என்பதை யோசித்துப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை யூதர்களில் ஒரு கோஷ்டியினர் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்தார்கள் அவர்கள் "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று முஸ்லிம்கள் கூறும் ஸலாத்துக்குப் பதிலாக 'அஸ்ஸாமு அலைக்க' (இதன் பொருள், உங்கள் மீது மரணம் உண்டாகுக!) எனக் கூறிக் கொண்டு வந்தார்கள். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த நபியவர்களின் மனைவி ஆயிஷா (ரலி) அவர்கள் ஆத்திரமுற்று "அஸ்ஸாமு அலைக்க வல்லஃனா" (உங்கள் மீது மரணமும் சாபமும் உண்டாவதாக) எனத் திட்டினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் "ஆயிஷாவே சற்றுப் பொறுமையாக இரும். இறைவன் சகல விடயங்களிலும் மிருதுவாகவும் இலகுவாகவும் இருப்பதையே விரும்புகிறான்" என்றார்கள். அப்போது ஆயிஷா அவர்கள் "வந்தவர்கள் என்ன கூறிக்கொண்டு வந்தார்கள் என்பதை நீங்கள் கேட்கவில்லையா?" எனக் கூற நான் அதற்குத்தான் "வஅலைக்க (உங்கள் மீதும்) என்று கூறிவிட்டேனே" என்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள் எப்போதும் உணவுப் பொருட்களைப் பழிக்கமாட்டார்கள். நன்றாக இருந்தால் சாப்பிடுவார்கள். இல்லையென்றால் விட்டுவிடுவார்கள். தன்னைச் சந்திப்பவர்களுக்கு அவர்களே முதலில் 'ஸலாம்' கூறுவார்கள். சிறுவர்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களே முதலில் 'ஸலாம்' கூறுவார்கள். அவர்கள் இமாமாக நின்று தொழுகை நடத்துவார்கள். அவ்வேளை பெண்கள் தொழும் பகுதியிலிருந்து குழந்தைகள் அழும் சத்தம் கேட்டால் தொழுகையை இலகுவாக்கி விரைவாகத் தொழுது முடிப்பார்கள்.

## அன்புள்ளம்

அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கும் பின்வரும் ஹதீஸ் நபிதூதர் அவர்களின் அன்பு உள்ளத்தை பிரதிபலித்துக் காட்டுகிறது.

"நான் நபி (ஸல்) அவர்களுடன் சென்று கொண்டிருந்தேன். அவர்கள் நஜ்ரான் தேச தடிப்பமான போர்வையொன்றைப் போர்த்திக் கொண்டு வந்தார்கள். அவ்வேளை ஒரு நாட்டறபி நபியவர்களின் போர்வையைப் பிடித்து கழுத்து இறுகக் கூடியளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமாக இழுத்து முஹம்மதே! உம்மிடம் இருக்கும் அல்லாஹ்வின் சொத்திலிருந்து எனக்கு கொடுக்குமாறு உத்தரவிடு என்றான். நபியவர்கள் திருப்பிப் பார்த்து ஆத்திரப்படாமல் சிரித்துவிட்டு அவருக்கு பொது நிதியிலிருந்து கொடுக்குமாறு பணிப்புரை வழங்கினார்கள். (புகாரி, முஸ்லிம்)

## மன்னிக்கும் மனம்

ஜாபிர் (ரலி) அறிவிக்கிறார்கள், நபி (ஸல்) அவர்களுடன் சேர்ந்து யுத்தம் ஒன்றுக்காக நஜ்துப் பிரதேசத்துக்குச் சென்றிருந்தோம். அவ்வழியில் மூங்கில் நிறைந்த கால்வாய் ஒன்றை வந்தடைந்தோம். அங்கிருந்த ஒரு மரத்தடியே நபியவர்கள் வந்து தனது வாளை மரத்தின் கிளையொன்றில் கொழுவி வைத்துவிட்டு தூங்கிவிட்டார்கள். அவ்வேளை மர நிழல் தேடி ஸஹாபாத் தோழர்கள் பல்வேறு இடங்களுக்கும் கலைந்து சென்றுவிட்டார்கள். நபியவர்கள் கூறினார்கள். "நான் தூங்கிக்கொண்டிருந்த வேளை ஒருவன் வந்து வாளைக் கையில் எடுக்கும்போதே நான் விழித்து விட்டேன். அவன் எனது தலைமாட்டில் நின்று கொண்டிருந்தான். வாளைக் கையில் வைத்திருந்த அவன் "என்னிடம் இருந்து உன்னைத் தற்போது பாதுகாப்பது யார்?" என்று கேட்டான். நான் "அல்லாஹ்" என்றேன். இரண்டாவது தரமும் அவன் அவ்வாறு கேட்க அதே பதிலையே சொன்னேன். அவ்வேளை அவனது கையிலிருந்த வாள் கீழே வீழ்ந்தது"

அவ்வாளை கையிலெடுத்த நபியவர்கள் அவனுக்கு எவ்வித தீங்கையும் செய்யவில்லை. அவனை மன்னித்து விட்டார்கள்.

## இஸ்லாம் என்பது நற்பண்புகளே!

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களின் முன்னால் வந்து நின்று மார்க்கம் என்றால் என்ன என்று கேட்க "நற்பண்புகள்" என பதிலளித்தார்கள். அவர் வலதுபுறமாகவும் வந்து அதே வினாவை எழுப்ப அதே பதிலையே அளித்தார்கள். பின்னர் அவர் இடதுபுறமாகவும் பின்னாலும் வந்து அக்கேள்வியையே கேட்ட போது பதில் அதுவாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமும் நீதியும்

மனித சமுதாயம் முழுவதையும் ஒரு தாய் பெற்ற பிள்ளைகளாகக் கருதும் இஸ்லாம் அவர்கள் மத்தியில் நீதி செலுத்துவது அல்லாஹ்வுக்குப் பயந்து நேர்மையாகச் செய்யப்பட வேண்டு மென்றும் சொந்தம், பந்தம், இனம், கோத்திரம் போன்ற எந்த சக்திகளும் நீதியின் முன் செல்வாக்குச் செலுத்தக் கூடாதென்றும் கட்டளையிடுகிறது.

وَإِذَا حَكَمْتُم بَيْنَ ٱلنَّاسِ أَن تَحْكُمُوا۟ بِٱلْعَدْلِ ۚ إِنَّ ٱللَّهَ نِعِمَّا يَعِظُكُم بِهِۦٓ ۗ إِنَّ ٱللَّهَ كَانَ سَمِيعًۢا بَصِيرًا

*மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால் பாரபட்சமின்றி நீதமாகவே தீர்ப்பளிக்குமாறும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான். நிச்சயமாக அல்லாஹ் எதனை உங்களுக்கு உபதேசிக்கிறானோ அதுமிக்க நல்லதாகும். நிச்சயமாக அல்லாஹ் செவியேற்கிறவனாக, பார்க்கிறவனாக இருக்கின்றான்.*

(அல்-குர்ஆன் 4 - 58)

மேற்காணும் வசனம் மனிதர்களுக்கிடையில் ஏற்படும் எவ்வாறான பிரச்சினையாயினும் நீதமாகவே அது தீர்க்கப்பட வேண்டுமென்றும், பாரபட்சம் பாராட்டக் கூடாதென்றும் தெளிவாக்குவதுடன் அல்லாஹ்வின் இவ்வுபதேசம் மிகவும் நல்லதென்றும் அவன் குறிப்பிடுகின்றான். அதாவது இவ்வாறு நீதியாக நடந்து கொள்ளாமல் பாரபட்சம் காட்டப்பட்டால் அது அம்மக்களுக்கு மிகவும் தீமையான முடிவைக் கொண்டுவரும் என்பதை அல்-குர்ஆன் வலியுறுத்துகிறது.

பொதுவாக மனிதர்களுக்கு எவ்வாறு நீதி வழங்க வேண்டுமோ அதே போன்றுதான் உறவினர்களாக இருந்தாலும் பாரபட்சம் காட்டக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

وَإِذَا قُلْتُمْ فَٱعْدِلُوا۟ وَلَوْ كَانَ ذَا قُرْبَىٰ

*நீங்கள் பேசினால் பாதிக்கப்படுபவர் நெருங்கிய உறவினராயிருப்பினும் நீங்கள் நீதத்தையே கூறுங்கள்* (அல்-குர்ஆன் 6:152)

ஊராருக்கு ஒரு சட்டம், உறவினருக்கு ஒரு சட்டம், தனது இனத்துக்கு ஒன்று, மற்றவர்களுக்கு வேறு என்று தீர்ப்பு அமைந்துவிடக் கூடாது.

وَأُمِرْتُ لِأَعْدِلَ بَيْنَكُمُ ۖ ٱللَّهُ رَبُّنَا وَرَبُّكُمْ ۖ

*உங்களுக்கிடையில் நீதமாகவே தீர்ப்பளிக்குமாறு நான் ஏவப்பட்டுள்ளேன். அல்லாஹ்தான் எங்கள் இரட்சகனும் உங்கள் இரட்சகனுமாவான்.* (அல்-குர்ஆன் 42:15)

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ كُونُوا۟ قَوَّٰمِينَ لِلَّهِ شُهَدَآءَ بِٱلْقِسْطِ ۖ وَلَا يَجْرِمَنَّكُمْ
شَنَـَٔانُ قَوْمٍ عَلَىٰٓ أَلَّا تَعْدِلُوا۟ ۚ ٱعْدِلُوا۟ هُوَ أَقْرَبُ لِلتَّقْوَىٰ ۖ وَٱتَّقُوا۟ ٱللَّهَ ۚ إِنَّ ٱللَّهَ
خَبِيرٌۢ بِمَا تَعْمَلُونَ

*விசுவாசம் கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்காக நீதியைக் கொண்டு சாட்சி கூறுபவர்களாக உண்மையின்மீது நிலைத்தவர்களாக ஆகிவிடுங்கள். எந்த சமூகத்தவரின் விரோதமும் நீங்கள் நீதமாக நடந்து கொள்ளாதிருக்க உங்களைத் தூண்டிவிட வேண்டாம். எவ்வளவுதான் விரோதம் இருந்த போதிலும் நீங்கள் நீதி செலுத்துங்கள். அதுதான் பயபக்திக்கு மிக நெருக்கமானதாகும். நீங்கள் அல்லாஹ்வைப் பயப்படுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு உணர்கின்றவன்.*

(அல்-குர்ஆன்5:8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி செலுத்துகின்றபோது நீதி செலுத்துபவர் பல்வேறு இழப்புக் களை ஏற்க வேண்டி வரலாம். துன்புறுத்தல்களுக்கு ஆளாகலாம். அதிகாரத்திலுள்ளவர்களின் அதிருப்திக்கும் மிரட்டல்களுக்கும் ஆளாகலாம். எனினும் இவர் நீதியின் பக்கம் நிலைத்து நிற்க வேண்டும். இதுதான் உண்மையான 'தக்வா'; அல்லாஹ்வைப் பயந்தவர் என்ற பெயருக்குரியவர்; நிச்சயமாக உலகில் எவரது விரோதத்துக்கும் அச்சுறுத்தலுக்கும் இடமளிக்கக் கூடாது என்பதைத்தான் மேற்படி வசனம் சுட்டிக்காட்டுகிறது.

இஸ்லாம் நீதியில் பாகுபாடு காட்டியதில்லை. ஆட்சியாளர்களும் சாதாரண பிரஜைகள் போல் நீதி விசாரணைகளின் போது நடத்தப்பட்டதே வரலாறு. இஸ்லாமிய வரலாற்றில் நடந்த முக்கிய வழக்கு விசாரணையொன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

கலீபா அலி (ரலி) இஸ்லாமிய உலகின் தலைவராக இருந்த காலம். முஆவியாவோடு நடந்த ஒரு யுத்தத்துக்கு கலீபா சென்றிருந்தார்கள். அங்கு அவருடைய போர்க்கவசம் காணாமற் போனது. போர்க்களம் இருந்து கூபா நகர் திரும்பிய கலீபா அவர்கள் கூபாச் சந்தையிலே யூதர் ஒருவரால் தனது காணாமற்போன கவசம் விற்கப்படுவதைக் கண்டார்கள். அவரிடம் போய், "இது எனது கவசம். இதனை நான் விற்கவும் இல்லை, யாருக்கும் அன்பளிப்பாகக் கொடுக்கவும் இல்லை. இதனை தன்னிடம் தந்துவிட வேண்டும்" என்று கேட்டார்கள் நாடாளும் கலீபா. அப்போது அந்த யூதன் "இது என்னுடையது. என் கையில் இருப்பதே அதற்குச் சான்று" என்று கூறினான். விடயம் நீதிபதி சுறைஹ் பின் ஹாரிஸ் அல் கிந்தி முன்னிலையில் கொண்டு வரப்பட்டது. கலீபா அலி நீதிபதியின் முன் "இது தன்னுடைய கவசம்" என்றும் "இதனை தான் யாருக்கும் விற்கவும் இல்லை, அன்பளிப்பாக அளிக்கவும் இல்லை"யென்றார். அப்போது நீதிபதி யூதரிடம், "இது பற்றி என்ன கூறுகின்றீர்" என்றார். "இது எனது கவசம் என் கையில் அது இருப்பதே அதற்கு ஆதாரம்" என்று கூறினான். அப்போது நீதிபதி "கலீபா அவர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு ஏதேனும் ஆதாரம், சாட்சிகள் உண்டா" எனக்கேட்க "எனது மகன் ஹஸன் அதற்குச் சாட்சி" என்றார். அப்போது நீதிபதி, "கலீபா அவர்களே! தந்தைக்குச் சார்பாக மகனின் சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை" என்றார். அப்போது ஆச்சரியப்பட்ட கலீபா அலி "ஹஸனும் ஹுஸைனும் சுவனத்து வாலிபர்களின் தலைவர்கள் என நபியவர்கள் கூறியுள்ளார்கள். நபி அவர்கள் சுவர்க்கவாதியென்று நற்செய்திகூறிய ஒருவரின் சாட்சியத்தை நீங்கள் ஏற்பதில்லையா" எனக் கேட்டார்கள்.

கலீபாவின் வாதத்தை நீதிபதி ஏற்க மறுத்ததால் ஆச்சரியமடைந்த யூதர், "நாட்டின் தலைவர் (அமீருல் மு.'.மினீன்) அவரது நீதிபதி யிடத்திலே எனக்கு எதிராக முறைப்பாடு செய்தார். ஆனால் அவரது நீதிபதியோ அவருக்கு எதிராக தீர்ப்பு வழங்குகிறார். நிச்சயமாக இது உண்மை மார்க்கம் என்று ஏற்றுக் கொள்கிறேன். கலீபா அவர்களே! நிச்சயமாக இது உங்களின் கவசம்தான். இரவு நேரம் அது விழுந்ததால் அதை நான் பொறுக்கி எடுத்துக் கொண்டேன்" என்று கூறினான். கலீபா அந்த கவசத்தை அந்த யூதருக்கே அன்பளிப்புச் செய்து விட்டார்கள்.

இதுதான் இஸ்லாம் கூறும் நீதி முறை. கலீபா முறையிடுகிறார் என்பதற்காக குற்றம் சாட்டப்படுபவன் யூதன் - சாதாரண பிரஜை என்ற போதிலும் இஸ்லாமிய நீதிமன்றம் கலீபாவிற்காக தலை சாய்க்க முடியாது. அது அல்லாஹ்வின் கட்டளையான நீதி தவறாமையை அணிகலனாகக் கொண்டதாக அமைய வேண்டும்.

உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களுடைய ஆட்சிக் காலம். அவர்களிடத்திலே சிரியாவைச்சேர்ந்த ஒரு முஸ்லிம் அல்லாதவர் வந்து, "முன்னாள் கலீபா வலீதின் மகன் அப்பாஸ் தனது காணியைப் பறித்துவிட்டார்" என்று முறையிட்டார். அவ் வேளை அச்சபையில் அப்பாஸ் இருந்து கொண்டிருந்ததால் அவரிடம் கலிபா அவர்கள் "அப்பாஸே! இவ்விடயத்தில் நீர் என்ன கூறுகிறீர்" என வினவ அப்போது அவர், "கலீபா வலீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காணியை தனக்கு தந்துள்ளார் அதற்கான உறுதியும் தன்னிடம் உள்ளது'' என்றார். அப்போது உமர், ''அந்த (முஸ்லிமல்லாத) மனிதரிடம் நீர் என்ன கூறுகிறீர்'' என்று கேட்க "அமீருல் மு.'.மீனின் ஆகிய நீங்கள் அல்லாஹ்வின் வேதத்தின்படி நடக்குமாறு நான் கேட்கிறேன்'' என்றார். அப்போது கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ், "வலீத் பின் அப்துல் மலிக்கின் எழுத்தை விட (உறுதியைவிட) அல்லாஹ்வின் குர்ஆன் பின்பற்றப்பட வேண்டியது'' என்று கூறி, அவ்வாறே அம்மனிதனுக்கு நீ வைத்திருக்கும் பூமியைத் திருப்பிக்கொடு என்று கட்டளை யிட்டார்கள். அவ்வாறே அதனைத் திருப்பிக் கொடுத்தார் அப்பாஸ் பின் வலீத் பின் அப்துல் மலிக் (ஆதாரம்: டமஸ்கஸ் வரலாறு)

மேற்கூறிய சம்பவம் சிந்திக்கத்தக்கதாகும். முன்னாள் ஆட்சித் தலைவர் ஒருவரின் மகனுக்காக தந்தை வழங்கிய உறுதியை அதே குடும்பத்தைச் சேர்ந்த, பின் வந்த கலீபா ரத்துச் செய்து அந்நியர் ஒருவருக்கு அதுவும் முஸ்லிம் அல்லாத ஒருவருக்கு அக்காணியை திருப்பிக் கொடுத்தார் என்றால் இஸ்லாமிய நீதியின் சிறப்பு இங்கு தெளிவாகின்றதல்லவா?

பிற சமயங்களைச் சேர்ந்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அவர்களுக்கு நீதி வழங்குவதில் இஸ்லாமிய வரலாற்றில் கலீபாக்கள், சுல்த்தான்கள் எவ்வளவு கரிசனை காட்டியுள்ளார்கள் என்பதற்கு பின்வரும் சம்பவம் நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.

சுல்த்தான் இமாதுத்தீன் ஸன்கீ ஒரு தீவுக்கு தமது பரிவாரங் களுடன் வந்தார். அது குளிர்காலமாக இருந்ததால் அங்கிருந்த கோட்டையில் அவர் தங்கினார். படைகளை கூடாரமடித்து அதில் தங்க வைத்தார். அத்தீவுக்கு வந்தவர்களில் அவரது அரசபரம் பரையைச் சேர்ந்த இஸ்ஸுத்தீன் அபூபக்கர் துபைசி என்பவரும் ஒருவர். இளவரசர்களில் மிகவும் சிரேஷ்டமான அவர் அரசர் களுக்கு ஆலோசனை சொல்பவரும் கூட. இவர் அத்தீவில் ஒரு யூதனின் வீட்டுக்குள் சென்று அடாவடித்தனமான முறையில்

அவனை வெளியேற்றிவிட்டு அவ்வீட்டில் குடியேறினார். இந்த அநியாயத்தை ஏற்றுக்கொள்ளாத அந்த யூதர், அரசர் இமாதுத்தீனிடம் முறையிட விரும்பினார். அதிர்ஷ்டவசமாக அவ்வேளை அரசர் ஒரு வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். எனவே, அரசரிடத்திலே தனக்கு நடந்துள்ள அநியாயத்தை இம்மனிதர் விளக்கினார். அவ்வேளை அவருக்குப் பக்கத்தில் துபைசி நின்று கொண்டிருந்தார். மன்னருக்கோ ஆத்திரம் தாங்க முடியவில்லை. துபைசியுடன் எதையும் பேசாமலே அரசர் இமாதுத்தீன், தனது படைகளை எல்லாம் அந்த ஊரைவிட்டு வெளியேறி ஊருக்குவெளியே கூடாரம் அமைக்குமாறு கட்டளை யிட்டார். கூடாரம் அமைக்கப் பொருத்தமற்ற சேறும் சகதியுமான நிலமாக அது இருந்தபோதிலும் அங்கேயே கூடாரமடித்து அனைவரையும் தங்கச் செய்து ஊர் மக்களை இராணுவத்தின் கெடுபிடிகளிலிருந்து தவிர்த்தார் மன்னர் இமாதுத்தீன். தனது வீடு பறிக்கப்பட்ட ஒரு யூதனின் நலனுக்காகவே மன்னர் இக்கட்டளையைப் பிறப்பித்தமை இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

(ஆதாரம் தாரீகுல்பாஹிர் - இப்னு அதீர்.)

## பிள்ளைகளுடனும் நீதமாக

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுடன் நீதமாக நடந்து கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் வேண்டுகிறது. பல பிள்ளைகள் இருக்கும்போது ஒரு சில பிள்ளைகளோடு மட்டும் இரக்கமாக நடந்துகொள்வதும் சொத்துக்களை சில பிள்ளைகளுக்குக் கொடுத்து விட்டு வேறு சில பிள்ளைகளை விட்டுவிடுவதும் தவறு என்பதை அது தெளிவாக்குகின்றது. யஃகூப் நபிக்கு பல பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் யூசுப் என்ற பிள்ளையோடு அவருக்கு இரக்கம் அதிகம் என்று ஏனைய பிள்ளைகள் சந்தேகித்தனர். இதுதான் யூசுபை அவர்கள் கொல்ல வேண்டும் என்று திட்டமிட்டதற்கும் கிணற்றில் எறிந்ததற்கும் காரணமாகும்.

சொத்துக்களை பங்கு வைக்கும் விடயத்திலும் பெற்றோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியாக நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு பின்வரும் ஹதீஸ் சான்றாக அமைகிறது.

பஷீரின் புதல்வர் நு:.மான் என்பவர் கூறுகிறார். "அவரது தந்தை நபியவர்களிடம் வந்து எனது இந்த மகனுக்கு என்னிடமிருந்த அடிமையை அன்பளிப்பாக வழங்குகிறேன் என்றார். அப்போது நபியவர்கள் உனது எல்லாப் பிள்ளைகட்கும் இதுபோன்று கொடுக்க உன்னிடம் உள்ளதா? எனக் கேட்க இல்லையென்றார். அப்படியானால் அவ்வாறு கொடுக்கவேண்டாம் என்று தடுத்ததுடன் உங்கள் பிள்ளைகள் மத்தியில் நீதமாக நடந்து கொள்வதில் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள் என்றார்கள்."

(புகாரி, முஸ்லிம்)

இன்று நாம் ஆட்சியாளர்கட்கு அவர்களின் பிள்ளைகளுக்கு ஓர் சட்டம் ஏனைய பிரஜைகளுக்கு, அப்பாவிகளுக்கு மற்றொரு சட்டம் என்பதையே இந்நவீன உலகில் காண்கின்றோம். ஆனால் இஸ்லாம் மனிதனை சமமாக மதிக்கிறது. குற்றம் செய்பவர் யாராக இருந்தாலும் அவருக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று பணிக்கிறது.

இஸ்லாத்தில் மதுபானம் அருந்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். 40 கசையடிகள் அதற்காக வழங்கப்பட வேண்டும். கலீபா உமருடைய மகன் அப்துர்ரஹ்மான் என்பவர் எகிப்திலே மதுபானம் அருந்திய குற்றத்திற்காக உரிய தண்டனையை வழங்க கவர்னர் அம்று இபுனு ஆஸ் அவர்கள் பின்வாங்கியபோது பாரபட்சம் காட்டினால் பதவி பறிபோகும் என்று கலீபா எச்சரித்தார். இவர் தண்டனையை இரகசியமாக நிறைவேற்றியபோது கலீபா குற்றவாளியை தன்னிடம் அனுப்புமாறு கோரி மதீனாவில் பகிரங்கமாக தண்டனை வழங்கியதாக வரலாறு தெரிவிக்கின்றது. தண்டனை விடயத்திலே பட்டம், பதவி, குலம், கோத்திரம் என்பவற்றை இஸ்லாம் கவனிக்காது. நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவம் இதற்கு நல்ல எடுத்துக் காட்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ஸல்) அவர்களின் காலத்திலே உயர் குடும்பத்தைச் சேர்ந்த பாத்திமா மஹ்சூமிய்யா என்ற பெண் திருட்டுக் குற்றம் ஒன்றைப் புரிந்துவிட்டார். இவ்விடயம் வெளியே வந்து தண்டனை நிறைவேற்றப்பட்டால் தமது உயர் குடும்பத்திற்கு நீங்காத வடு ஏற்பட்டுவிடும் என அஞ்சிய அக்கோத்திரத்தினர் நபி அவர்களின் வளர்ப்பு மகனான உஸாமா பின் ஸைத் என்பவரை அணுகி இவ்விடயத்தை நபி அவர்களிடம் கூறி தண்டனை வழங்காது விடுமாறு சிபாரிசு செய்ய வேண்டினர். எனவே உஸாமா, நபி அவர்களிடம் சென்று பரிந்து பேசியதும் ஆத்திரமுற்ற நபி அவர்கள் உஸாமாவைப் பார்த்து அல்லாஹ்வின் சட்டத்திற்கு மாற்றமாக நடக்குமாறா என்னைக் கேட்கின்றீர்? எனக் கோபப்பட்டு மக்களை அழைத்து பின்வருமாறு உபதேசம் செய்தார்கள். "உங்களுக்கு முன் உண்டான சமூகங்கள் அழிந்ததெல்லாம் அவர்கள் மத்தியிலே பெரிய இடத்தைச் சேர்ந்தவர்கள் களவெடுத்தால் அதனை விட்டு விடுவார்கள். ஆனால் சாதாரண மக்கள் களவு செய்தால் அதற்கு தண்டனை நிறைவேற்றுவார்கள். எனது உயிர் எவன் கையில் உள்ளதோ அவன் மீது ஆணையாக எனது மகள் பாத்திமா களவெடுத்தாலும் அவள் கையைத் துண்டிப்பேன்" என்று கூறி அந்த களவெடுத்த உயர்குலத்துப் பெண்ணிற்கு தண்டனை நிறைவேற்றினார்கள்.

(அஹ்மத், முஸ்லிம், நஸயி)

இஸ்லாமிய நீதிமன்றத்தின் முன் குலம், கோத்திரம், பட்டம், பதவி என்ற பேதமின்றி சகல மனிதர்களும் சமம் என்ற அடிப்படையிலேயே நீதி வழங்கப்படும். மனிதருக்குள் வேற்றுமை கிடையாது.

## நீதிக்குமுன் அரசனும் ஆண்டியும் சமம்

உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் நடந்த முக்கிய வரலாற்றுச் சம்பவம் இது. ஹஸ்ஸான் கிளையைச் சேர்ந்த ஜிபில்லா பின் அல் ஜஹம் என்ற சிற்றரசன் இஸ்லாத்தைத் தழுவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கலீபா உமருக்கு கடிதம் எழுதி தான் மதீனாவுக்கு வருவதாக அறிவித்தார். கலீபாவும் அனுமதி வழங்கினார். ஜிபில்லா அரச கிரீடத்தை அணிந்தவராக தமது குடும்பத்தினர் ஐநூறு பேருடனும் இருநூறு ஆயுத பாணிகளான வீரர்களுடனும் தங்கம், வெள்ளி ஆபரணங்கள் அணிந்த குதிரைகளுடனும் மதீனா வந்தார். கலீபா உமர் இவரை வரவேற்று உபசரித்தார். பின்னர் கலீபா ஹஜ்ஜுக்காக மக்கா செல்ல ஆயத்தமானார். ஜிபில்லாவும் தானும் வருவதாகக்கூறி கலீபாவுடன் இணைந்து கொண்டார். மக்கா சென்று புனித க.்.பாவை வலம் வந்து கொண்டிருந்தபோது அவர் உடுத்திருந்த வேட்டி இழுபட்டுக் கொண்டிருந்ததால் ஒரு மனிதனின் காலில்பட்டு அவிழ்ந்துவிட ஆத்திரம் கொண்ட மன்னர் ஜிபில்லா, அம்மனிதனின் மூக்கில் குத்தி காயமேற்படுத்தினார். புனித க.்.பாவில் நடக்கக் கூடாத ஒரு சம்பவமாக இது நிகழ்ந்தது. க.்.பாவில் அரசன் ஆண்டியென வித்தியாசம் இன்றி சகலரும் சமமாகவே 'தவாப்' (சுற்றி வருதல்) செய்வர் என்பது குறிப்பிடத்தக்கது. அல்லாஹ்வின் சந்நிதியில் அனைவரும் சமம் என்ற இடத்தில் மன்னரின் செயற்பாடு கலீபாவுக்கு பெரும் வெறுப்பை ஏற்படுத்தியது. மன்னரால் அவமதிக்கப்பட்ட மனிதனும் கலீபாவிடம் முறையிட்டான். கலீபா மன்னரை அழைத்து விசாரிக்கவே அவன் எனது வேட்டியைக் கழட்ட முயன்றான். 'க.்.பா'வுக்கு கண்ணியம் கொடுப்பதற்காக விட்டுவிட்டேன். இல்லையென்றால் அவனை ஒரே வெட்டாக வெட்டிச் சரித்திருப்பேன் என்றார். அப்போது கலீபா நீங்கள் செய்த குற்றத்தை நீங்கள் ஏற்றுள்ளதால் உங்களை அந்நபர் மன்னிக்க வேண்டும். இல்லையெனில் தாங்கள் தண்டனைக்குள்ளாக வேண்டிவரும் என்றார். உடனே ஜிபில்லா நீங்கள் என்ன செய்வீர்கள் என்று கேட்க, நீங்கள் அம்மனிதருக்கு என்ன செய்தீர்களோ அவ்வாறே உங்களுக்குச் செய்யுமாறு அவரைப் பணிப்பேன் என்றார். அப்போது அவர், நான் ஒரு மன்னன் அவர் சாதாரண பிரஜைதானே என்றார். அப்போது கலீபா இஸ்லாத்தின் முன் நாம் அனைவரும் சமமானவர்களே! ஒருவரின் நற்செயல்கள் மூலம்தான் அல்லாஹ்விடம் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வானவனாக மதிக்கப்படுகிறான். அந்தஸ்தினால் அல்ல என்று கலீபா விளக்கினார். அப்போது ஜிபில்லா, இஸ்லாத்துக்கு வந்தால் முன்பு இருந்ததைவிட கௌரவம், அந்தஸ்து, அதிகாரம் கிடைக்கும் என்றுதான் வந்தேன் என்றார். எனினும் கலீபா பழிக்குப்பழி என்பதில் விட்டுக் கொடுக்காதவராக இருந்தார். நிலைமையைப் புரிந்துகொண்ட ஜிபில்லா நடுஇரவில் தமது பரிவாரங்களுடன் மக்காவை விட்டுத் தப்பிச் சென்று ரோம் தேசத்தை அடைந்து அங்கு ஹிறக்ல் என்ற மன்னனுடன் இணைந்து கிறிஸ்தவத்தை தழுவினார். பின்னர் தான் செய்த தவறை எண்ணி வருந்தியதாக வரலாறு கூறுகிறது.

(நன்றி - சீறத்து உமர் பின் கத்தாப்)

## சகல இனத்தவரும் சமம்

இஸ்லாமிய நீதி மன்றத்தில் எந்த இனத்தவராயினும் சமமாக நடத்தப்படுவார்கள் என ஏலவே குறிப்பிட்டோம். இது தொடர்பான மற்றொரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலம். ஸஹாபாத்தோழர்களில் சிரேஷ்டமானவரும் நபியவர்களின் மருமகனுமான அலி அவர்களுக்கு எதிராக யூதர் ஒருவர் வழக்குத் தொடர்ந்திருந்தார். விசாரணைக்குரிய நேரம் வந்தது. கலீபா இருவரையும் அழைத்தார். அலி அவர்களுக்கு ஹஸன் என்ற ஒரு புதல்வர் இருந்ததால் அவரை ஹஸனின் தந்தை 'அபுல் ஹஸன்' என்றும் யூதரின் சொந்தப் பெயரைக் கூறியும் கலீபா அழைத்தார். கலீபாவின் இச்செயல் அலிக்கு சரியாகப்படவில்லை. சற்று அதிருப்தியை வெளிப்படுத்தினார். அதற்கு கலீபா யூதர் ஒருவருடன் உன்னையும் சமமாக நிறுத்தி விசாரித்தமைக்காகவா நீர் அதிருப்திப்படுகிறீர்? எனக் கேட்டார். இல்லை. அவரது சொந்தப் பெயரையும் எனது காரணப்பெயரையும் குறிப்பிட்டு அழைத்த தாலேயே நான் அதிருப்திப்படுகிறேன். எமது நீதிமன்றத்தில் சகலரும் சமமாக நடத்தப்பட வேண்டுமல்லவா? என்றார் அலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய நீதி மன்றம் ஒரு சிறு தவறும் இன்றி நேர்மையாக செயற்படவேண்டும் என்பதில் ஸஹாபாத் தோழர்கள் எவ்வளவு கவனமாகச் செயற்பட்டுள்ளார்கள் என்பது இதன் மூலம் தெளிவாகின்றதல்லவா?

பலமானவன் பலவீனமானவன், ஏழை, பணக்காரன், ஆட்சியாளன் பிரஜை என்ற பாகுபாட்டுக்குப் பிரியாவிடை கொடுத்த மக்களாகவே நபித் தோழர்களும் அவர்களின் கலீபாக்களும் திகழ்ந்தனர். முதல் கலீபாவாகப் பதவியேற்ற அபூபக்கர் (ரலி) தமது பதவியேற்பு வைபவத்தில் ஆற்றிய உரை இங்கு கவனிக்கத்தக்கது. "உங்களில் பலவீனமானவன் அவனது உரிமையை நான் கொடுக்கும் வரை என்னிடம் பலமானவன். உங்களில் பலம் பொருந்தியவன் நான் அவரிடம் இருந்து பெற வேண்டியதை பெறும் வரை என்னிடம் பலவீனன். " என்றார்கள்.

இதே கலீபா தொடர்ந்து சொல்கிறார். நான் உங்களுக்கு பொறுப்புதாரியாக நியமிக்கப்பட்டுள்ளேன். அதற்காக நான் உங்களை விடச் சிறந்தவனல்ல. நான் சரியாக நடந்தால் எனக்கு உதவி செய்யுங்கள் நான் பிழையாகச் சென்றால் என்னைச் சீர்படுத்துங்கள். நான் அல்லாஹ்வுக்கு பொருத்தமான முறையில் நடந்தால் என்னைப் பின்பற்றுங்கள். நான் அதற்கு மாறுசெய்தால் என்னைப் பின்பற்றாதீர்கள் என்று உபதேசம் செய்தார்கள்.

கலீபா உமர் அவர்களின் ஆட்சிக்காலம். மக்களிடம் சென்று அவர்கள் குறைகேட்டு தேவைகளை நிறைவேற்றுவது அவர்களது வழக்கம். இரவு வேளைகளிலும் ஊர் சுற்றி மக்கள் குறை அறிவார்கள். ஒரு நாள் இருவர் விபச்சாரம் புரிவதைக் காண்கிறார். இதனை வேறு எவருமே காணாதபடியால் ஆட்சியின் தலைவர் என்ற போதிலும் அவரால் தண்டனை கொடுக்க முடியாத நிலை. மறுநாள் தமது ஆலோசனைச் சபையைக் கூட்டி ஆராய்கிறார் அமீறுல் முஃமினீன். (நாட்டின் தலைவருக்கு இவ்வாறும் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படும்) "இருவர் விபச்சாரம் புரிவதைக் கண்டால் அவர்களுக்கு தண்டனை கொடுக்க முடியுமா?" என வினவுகிறார். அப்போது அங்கிருந்த அலி (ரலி) அவர்கள் "நீங்கள் கூறுவதை நான்கு சாட்சிகள் கொண்டு நிரூபிக்கவேண்டும். அப்போதுதான் அவர்கட்கு தண்டனை வழங்க முடியும். அவ்வாறு நீங்கள் நிரூபிக்கவில்லையென்றால் தாங்கள்தான் படுதூறு கூறியதாக உங்களுக்குத்தான் தண்டனை வழங்க வேண்டிவரும். ஒரு பெண்ணைப் படுதூறு கூறுபவர் அதனை நான்கு சாட்சிகள் கொண்டு நிரூபிக்கவில்லையென்றால் குற்றம் சுமத்தியவருக்கு 80 கசையடி கொடுக்கவேண்டும் என்பது இஸ்லாமியச் சட்டம்" என்றார்கள். விடயம் அத்துடன் முடிந்து போகிறது.

ஆட்சியில் எந்தப் பதவி வகிப்பவராயினும் நினைத்தமாதிரி அவரால் எவரையும் குற்றம் சாட்ட முடியாது. சாதாரண பிரஜைகள் போல் நீதிமன்றத்தின்முன் அதனை அவர் நிரூபிக்கவும் தயாராக இருக்க வேண்டும் என்ற இந்த இஸ்லாமியக் கோட்பாடு வீணான முறையில் ஆட்சியாளர்களால் பிரஜைகள் மீது குற்றம் சாட்டப்படுவதும், தண்டிக்கப்படுவதுமான ஈனச்செயலுக்குச் சாட்டையாக அமைகிறது.

இஸ்லாமிய கலீபாக்கள் தனிமனிதனின் உரிமையைப் பேணுவதில் எவ்வளவு கவனமாக பொறுப்பாளர்களாக இருந்திருக்கின்றார்கள் என்பதற்கு பின்வரும் வரலாற்றுப் பெருமைமிக்க சம்பவம் சான்றாகும்.

அம்றுப்னு ஆஸ் (ரலி) அவர்கள் எகிப்தின் கவர்னராக இருந்த பொழுது அவரின் மகன் முஹம்மத் என்பவர் எகிப்திய வாலிபர் ஒருவரை சாட்டையால் அடித்ததுடன் நான் பெரிய இடத்துப் பிள்ளை தெரியுமா? என்றும் கூறினார். இவ்விடயத்தை அவ்வாலிபர் மதீனா சென்று கலீபா உமரிடம் முறையிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு நடந்த சம்பவத்தை நபித் தோழர்களில் ஒருவரான அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் விளக்குகிறார்கள்.

நாங்கள் கலீபா உமர் (ரலி) அவர்களின் சபையில் இருந்தோம். எகிப்திய வாலிபர் ஒருவர் அங்கு வந்து தான் ஒரு முறைப்பாடு தெரிவிப்பதாக கூறினார். அதனை கூறுமாறு கேட்டபோது எகிப்தில் குதிரை ஓட்டப்போட்டி நடந்தது. அதில் ஒரு குதிரை முன்னேறி வந்தபோது கவர்னர் அம்று இப்னு ஆஸ் அவர்களின் மகன் அது அவரது குதிரை என்று ஆர்ப்பரித்தார். குதிரை அண்மித்ததும் அது எனது குதிரை என்பது தெளிவானது. அதனை நான் எல்லோரிடமும் கூறினேன். அவரது குதிரை பிந்தி வந்ததால் ஆத்திரமடைந்த அவர், அவ்வாறு நான் கூறியதும் எனக்கு சாட்டையால் அடித்துவிட்டார். நான் பெரிய இடத்து பிள்ளை தெரியுமா என்றும் கூறினார். இவ்விடயம் கவர்னருக்கு எட்டியவுடன் நான் உங்களிடம் வந்து முறையிட்டு விடுவேன் என்ற பயத்தில் என்னை சிறையில் அடைத்தார். சிறையில் இருந்து விடுவித்த பின் நான் உங்களிடம் வந்துள்ளேன் என்று கூறினார்.

அனஸ் கூறுகிறார்கள்,
இவ்வாறு அவ்வாலிபன் கூறியவுடன் கலீபா அவர்கள், எகிப்தின் கவர்னர் அம்று இப்னு ஆஸ் அவர்களுக்கு "எனது இக்கடிதம் கிடைத்ததும் உனது மகன் முஹம்மதை அழைத்துக் கொண்டு இங்கே வாரும்" என எழுதியனுப்பியவுடன் அந்த வாலிபரை அவர் மதீனா வரும்வரை தங்கியிருக்குமாறு கலீபா கேட்டுக் கொண்டார்கள். கடிதம் கிடைத்ததும் அம்று இப்னு ஆஸ் தன் மகனுடன் எகிப்திலிருந்து மதீனா வந்து சேர்ந்தார்.

அனஸ் கூறுகிறார்கள்
நாங்கள் கலீபா உமரின் சபையில் இருந்தோம். அப்பொழுது எகிப்தின் கவர்னர் அம்று இப்னு ஆஸ் அவர்கள் மகனுடன் வந்திருந்தார். விசாரணை நடத்திய பின் அவர்கள் "எகிப்திய வாலிபன் எங்கே" என்று கேட்டார்கள். அவர் வந்ததும் அவ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபனிடம் சாட்டையை கொடுத்து "அந்த பெரிய இடத்துப் பிள்ளையை அடியும்" என்று கூறினார்கள். அவ்வாலிபரோ தனது கோபம் தீருமளவு கடுமையாக அடித்தார். அவ்வாலிபன் அடிக்கும்போது, "பெரிய இடத்துப்பிள்ளைக்கு அடியும்" என்று உமர் கூறிக்கொண்டேயிருந்தார். அடித்துவிட்டு அவ்வாலிபர் "எனக்கு அடித்தவரை நான் அடித்துவிட்டேன். நான் ஆறுதல் அடைந்து விட்டேன்" என்று கூறினார். பின்னர் கலீபா அம்று இப்னு ஆஸ் அவர்களைப் பார்த்து, "அம்ரே! மனிதர்களை எப்போது அடிமைகளாக்கி அடக்கி ஆளத் துணிந்துவிட்டீர்கள். அவர்களை அவர்களது தாய்மார் சுதந்திரமானவர்களாகவே பெற்றுள்ளனர்." இவ்வாறு கலீபா கூறியதை கேட்ட அம்று இப்னு ஆஸ் அவர்கள் நடந்த சம்பவத்தையிட்டு வருத்தம் தெரிவித்தார். "இதனை நான் அறிந்திருக்கவில்லை" என்றும் கூறினார். அந்த எகிப்திய வாலிபரை அழைத்த கலீபா "இதற்குப் பிறகு உனக்கு ஏதாவது நடந்தால் எனக்கு உடனே எழுது" என்றார்கள்.

இதன் மூலம் கலீபா உமர் அவர்கள் தான் பதவியேற்றதும் "பலவீனமான ஒருவன் அவனுடைய உரிமையை நான் வழங்கும் வரை அவன் என்னிடம் பலமானவன், உங்களில் பலமானவன் என்னிடத்தில் பலவீனமானவன்" என்று கூறிய அக்கூற்றை நிரூபித்தார்கள்.

(அக்பாறு உமர்)

இஸ்லாமிய அரசாங்கம் மனிதனின் மாண்பை, மனித நேயத்தை மதிக்கும் ஒரு மார்க்கம் என்பதில் ஏற்பட்ட நம்பிக்கையினால்தான் அவ்வாலிபர் எகிப்தில் இருந்து மதீனாவுக்கு மிக நீண்ட தூரப் பயணத்தை மேற்கொண்டு வந்து முறையிட்டார். இஸ்லாமிய அரசில் தனது உரிமை மறுக்கப்பட மாட்டாது என்பதை அவர் உறுதியாக நம்பியிருந்தார்.

கலீபா அபூபக்கர் (ரலி) அவர்கள் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களை மதீனாவின் நீதிபதியாக நியமித்தார். ஒருவருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பதவியில் இருந்தபோதும் ஒரு வழக்குக்கூட இவர்களிடம் வரவில்லை. கலிபாவைச் சந்தித்த உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் "தான் இப்பதவியிலிருந்து விலகுவதாக"க் கூறினார். அப்போது அபூபக்கர் "ஏன் இப்பதவி கஷ்டமாக இருக்கிறதா" என வினவியபோது "இல்லை விசுவாசிகள் மத்தியில் நீதிமன்றம் ஒன்றின் தேவை கிடையாது. ஒவ்வொருவரும் மற்றவர் உரிமையை மதித்து நடக்கும்போது இப்பதவி தேவையில்லையே" என்றார்கள். உண்மையாகவே இஸ்லாமிய நெறியை மதித்து வாழ ஒவ்வொரு வரும் முனையும்போது நீதிமன்றம் ஒன்றின் தேவை எழ நியாயமேயில்லை.

இங்கு நாம் கூறியுள்ள அல்-குர்ஆன் வசனங்களும், ஹதீஸ்களும் இஸ்லாமிய வரலாற்றில் நடந்த சம்பவங்களும் இஸ்லாம், நீதி விடயத்தில் எவ்வளவு கவனமாக நடக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது என்பதைக் காண முடிகிறது. எனவே அல்-குர்ஆன் வசனங்கள் வழுவாத நீதிமுறையையிட்டு கண்டிப்பாகக் கூறுகிறது. சிபார்சுடன் கூடிய தீர்ப்பை எதிர்க்கிறது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டை வலியுறுத்துகிறது. ஆட்சியாளர்களும், சாதாரண பிரஜைகள் போல் நீதிபதிமுன் ஆஜராகி தமது வாதத்தை முன்வைக்கும் வரலாற்றை எமக்கு அது காட்டித்தந்துள்ளது.

**இவ்வாறான நீதிமுறை அமுலாகும் தேசமே நீதி நேர்மையான ஆட்சி கொண்டதாக அமையும் என்பதில் சந்தேகமேயில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநியாயம் செய்தல்

நீதமாக நடந்து கொள்வதை வலியுறுத்தும் இஸ்லாம் அநியாயத்தை அதன் பல்வேறு உருவங்களிலும் வகைகளிலும் கண்டிக்கிறது. மனிதனை மனிதன் வஞ்சிக்கும் இச் செயற்பாட்டை இஸ்லாம் அடியோடு வெறுக்கிறது.

وَلَا تَحْسَبَنَّ ٱللَّهَ غَـٰفِلًا عَمَّا يَعْمَلُ ٱلظَّـٰلِمُونَ

*அநியாயக்காரர்கள் செய்கின்றவற்றையிட்டு அல்லாஹ் பராமுகமாக இருக்கிறான் என நீங்கள் எண்ணிக் கொள்ளவேண்டாம்*

(அல்-குர்ஆன் 14:42)

என்று அநியாயக்காரர்கட்கு அல்லாஹ் எச்சரிக்கை செய்கின்றான்.

''ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் வங்குரோத்துக்காரன் என்றால் யார் என்று தெரியுமா எனக் கேட்டார்கள். அப்போது சஹாபாத் தோழர்கள் பணமும் பொருளும் இல்லாதவனைத்தான் அவ்வாறு கூறுகிறோம் என்றார்கள். அப்போது நபியவர்கள் இறுதி நாளில் (நன்மை தீமைக் கணக்குப் பார்க்கும் நாளிலே) தொழுகை, ஸகாத், நோன்பு என்ற நன்மைகளோடு இவன் இன்னாருக்கு ஏசினான், இவரைப்பற்றி அவதூறு சொன்னான். இவரது சொத்தை அபகரித்தான். அவரது இரத்தத்தை ஓட்டினான். இன்னாருக்கு அடித்தான் என்ற தீமைகளும் எடுத்துக் கூறப்படும். இவன் செய்த தீமைக்குப்பரிகாரமாக இவனது நன்மைகள் பங்கிடப்படும் இறுதியில் இவனது நன்மைகள் முடிந்து செய்த தீமைகள் எஞ்சும். எனவே இவன் அநியாயம் செய்தவரின் பாவங்கள் இவனது தலையில் போடப்பட்டு இவன் நரகுக்கு அனுப்பப்படுவான். அவன்தான் வங்குரோத்துக்காரன் என்றார்கள்.

(முஸ்லிம், திர்மிதி)

நன்மைகள் செய்தபோதும் பிறருக்கு அநியாயம் செய்து அதனால் தனது நன்மைகளை இழந்து பிறரின் தீமைகளைச் சுமந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகத்துக்குச் செல்லும் அபாக்கியவாதியான இவனைத்தான் வங்குரோத்துக்காரன் என நபி அவர்கள் விபரித்துள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் முஆத் பின் ஜபல் என்ற தோழரை எமன் தேச கவர்ணராக நியமித்து அனுப்பும்போது ''நீ அநியாயம் செய்யப்படுவோனின் பிரார்த்தனையைப் பயந்துகொள். ஏனெனில் அதற்கும் அல்லாஹ்வுக்கும் இடையே எவ்வித திரையும் கிடையாது'' என்று கூறினார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

وَلَا تَأْكُلُوٓا۟ أَمْوَٰلَكُم بَيْنَكُم بِٱلْبَٰطِلِ وَتُدْلُوا۟ بِهَآ إِلَى
ٱلْحُكَّامِ لِتَأْكُلُوا۟ فَرِيقًا مِّنْ أَمْوَٰلِ ٱلنَّاسِ بِٱلْإِثْمِ وَأَنتُمْ تَعْلَمُونَ

*உங்கள் மத்தியில் உரிமையின்றி உங்கள் செல்வங்களை உண்ணாதீர்கள். நீங்கள் அறிந்து கொண்டே பிறமனிதர்களின் செல்வங்களிலிருந்து ஒரு பகுதியை பாவமான முறையில் உண்ணுவதற்காக அவற்றை (இலஞ்சமாகக் கொடுக்க) அதிகாரிகளின்பால் கொண்டும் செல்லாதீர்கள்.* (அல்-குர்ஆன் 2: 188)

மேற்காணும் வசனம் அநியாயமான முறையில் பிறர் சொத்துக்களை உண்ணல், பிறர் சொத்தை அபகரிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல், அதற்காக இலஞ்சம் போன்றவற்றைக் கொடுத்து அல்லது நீதிமன்றங்களில் பொய் வழக்குத் தொடுத்து தனக்கு உரிமையில்லாத ஒன்றை பெற முயலல் போன்றவற்றைக் கண்டிக்கிறது.

## அளவை நிறுவை மோசடி

மனித இனத்துக்கு மனிதன் செய்யும் அநியாயங்களில் ஒன்று அளவை நிறுவைகளில் மோசடி செய்வதாகும். நபி (ஸல்) மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றபோது அங்கு வாழ்ந்த மக்கள் அளவை நிறுவையில் மோசடி செய்யக் கூடியவர்களாக இருந்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். உங்கள் முன் வாழ்ந்த சமூகங்கள் அழிவுக்குள்ளாகியது இந்த அநியாயத்தினால்தான் என்று அம்மக்களுக்குப் போதித்து அவர்களை இஸ்லாமிய நெறிக்குரியவர்களாக மாற்றினார்கள்.

وَيْلٌ لِّلْمُطَفِّفِينَ ۝١ ٱلَّذِينَ إِذَا ٱكْتَالُوا۟ عَلَى ٱلنَّاسِ يَسْتَوْفُونَ ۝٢ وَإِذَا كَالُوهُمْ أَو وَّزَنُوهُمْ يُخْسِرُونَ ۝٣ أَلَا يَظُنُّ أُو۟لَٰٓئِكَ أَنَّهُم مَّبْعُوثُونَ ۝٤ لِيَوْمٍ عَظِيمٍ ۝٥

*அளவை நிறுவையில் மோசடி செய்வோர்களுக்கு கேடு உண்டாவதாக! அவர்கள் தங்களுக்காக மனிதர்களிடமிருந்து அளந்து வாங்கினால் நிறைவாக அளந்து வாங்கிக் கொள்கின்றனர். அவர்கள் பிறருக்கு அளந்து கொடுத்தாலும் அல்லது நிறுத்துக் கொடுத்தாலும் அவற்றில் மோசடி செய்து விடுகின்றனர். அவர்கள் ஒரு மகத்தான நாளைக்காக எழுப்பப்படுபவர்கள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லையா?* (அல்-குர்ஆன் 83:1-5)

ஷுஐப் நபி தங்கள் மக்களுக்குச் செய்த பிரச்சாரம் ஒன்றைக் கவனியுங்கள்.

وَيَٰقَوْمِ أَوْفُوا۟ ٱلْمِكْيَالَ وَٱلْمِيزَانَ بِٱلْقِسْطِ ۖ وَلَا تَبْخَسُوا۟ ٱلنَّاسَ أَشْيَآءَهُمْ وَلَا تَعْثَوْا۟ فِى ٱلْأَرْضِ مُفْسِدِينَ

*எனது சமூகத்தினரே, அளவை, நிறுவையில் நீதமாக நடந்துகொள்ளுங்கள் மனிதர்களின் பொருட்களைக் குறைத்து விடாதீர்கள். அதனால் பூமியில்குழப்பம் செய்கிறவர்களாக வரம்பு மீறாதீர்கள்.* (அல்-குர்ஆன் 11:85)

இஸ்லாம் மார்க்கத்தின் முந்தைய நபிமார்களில் ஒருவரான சுஜப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி தன் மக்களுக்கு போதித்த அதே போதனையையே இன்று அல்-குர்ஆன் சகல மக்களுக்கும் போதிக்கிறது. அளவை நிறுவையில் மோசடி செய்து அதன் மூலம் பூமியில் குழப்பம் செய்கின்றவர்களாக மாறவேண்டாம் என்ற எச்சரிக்கையை இதன் மூலம் அல்-குர்ஆன் விடுக்கிறது.

இதோ மனித சமுதாயத்தை நோக்கி அல்லாஹ் விடுக்கும் வேண்டுகோளைக் கவனியுங்கள்.

وَلَا تَقْتُلُوٓا۟ أَوْلَـٰدَكُمْ خَشْيَةَ إِمْلَـٰقٍ ۖ نَّحْنُ نَرْزُقُهُمْ وَإِيَّاكُمْ ۚ
إِنَّ قَتْلَهُمْ كَانَ خِطْـًٔا كَبِيرًا ﴿٣١﴾ وَلَا تَقْرَبُوا۟ ٱلزِّنَىٰٓ ۖ إِنَّهُۥ
كَانَ فَـٰحِشَةً وَسَآءَ سَبِيلًا ﴿٣٢﴾ وَلَا تَقْتُلُوا۟ ٱلنَّفْسَ ٱلَّتِى حَرَّمَ ٱللَّهُ إِلَّا
بِٱلْحَقِّ ۗ وَمَن قُتِلَ مَظْلُومًا فَقَدْ جَعَلْنَا لِوَلِيِّهِۦ سُلْطَـٰنًا فَلَا يُسْرِف
فِّى ٱلْقَتْلِ ۖ إِنَّهُۥ كَانَ مَنصُورًا ﴿٣٣﴾ وَلَا تَقْرَبُوا۟ مَالَ ٱلْيَتِيمِ إِلَّا بِٱلَّتِى
هِىَ أَحْسَنُ حَتَّىٰ يَبْلُغَ أَشُدَّهُۥ ۚ وَأَوْفُوا۟ بِٱلْعَهْدِ ۖ إِنَّ ٱلْعَهْدَ كَانَ مَسْـُٔولًا ﴿٣٤﴾
وَأَوْفُوا۟ ٱلْكَيْلَ إِذَا كِلْتُمْ وَزِنُوا۟ بِٱلْقِسْطَاسِ ٱلْمُسْتَقِيمِ ۚ ذَٰلِكَ خَيْرٌ وَأَحْسَنُ
تَأْوِيلًا ﴿٣٥﴾

*(மனிதர்களே!) வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை வழங்குகிறோம். நிச்சயமாக அவர்களைக் கொலை செய்வது பெரும் பாவம்.*

*நீங்கள் விபச்சாரத்தையும் நெருங்காதீர்கள். நிச்சயமாக மானக் கேடானதாகவும் கெட்ட வழியாகவும் அது இருக்கிறது.*
*அல்லாஹ் தடுத்துள்ள எந்த உயிரையும் உரிமையின்றிக்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கொல்லாதீர்கள். எவரேனும் அநீதி இழைக்கப்பட்டவராகக் கொல்லப்பட்டால் அவனுடைய வாரிசுக்கு பழிவாங்கும் உரிமை அளித்துள்ளோம். அவர்கள் அளவு கடந்துவிட வேண்டாம். நிச்சயமாக (கொலை செய்யப்பட்டவரின் வாரிசான) அவர் (நீதியைக்கொண்டு) உதவி செய்யப்பட்டவராவார்.*

*மேலும், அநாதைக்குழந்தைகள் வாலிபத்தை அடையும் வரையில் நியாயமான முறையிலன்றி அவர்கள் பொருளை நெருங்காதீர்கள். (உங்கள்) வாக்குறுதியை நீங்கள் பூரணமாக நிறைவேற்றுங்கள். ஏனெனில் வாக்குறுதியைப் பற்றி உங்களிடம் கேட்கப்படும்.*

*நீங்கள் அளந்தால் பூரணமாக அளவுங்கள். (நிறுத்தால்) சரியான எடையைக் கொண்டு நிறுங்கள். இது மிகவும் நன்றானது. மிக அழகான பலனையும் தரும்.*

(அல்-குர்ஆன் 17:31-35)

சிசுக்கொலை, மனித கொலை, விபச்சாரம், அநாதைகள் சொத்தை உண்ணல், வாக்குறுதியை நிறைவேற்றல், அளவை நிறுவையில் நீதமாக நடந்து கொள்ளல் போன்ற மனித இனத்தின் சுபீட்சத்துக் காக அல்லாஹ் விதித்துள்ள கட்டளைகளை மேற்படி வசனம் போதிக்கிறது. இவ்வாறான போதனைகள் மூலம் இஸ்லாம் மனித இனத்தின் சுபீட்சத்துக்கு உழைக்கும் சமயம் என்பதை பறைசாற்றுகிறது.

**பதுக்கல்**

மனிதன் மனிதனுக்கு செய்யும் அநியாயங்களில் ஒன்று பொருட்களின் விலை உயரும்வரை பதுக்கிவைத்து விலை ஏறியபின் அதனை விற்பனை செய்வதாகும். இவ்வாறான செயலை இஸ்லாம் கண்டிக்கிறது.

"விலைகள் குறைகின்றபோது கவலையடைந்து விலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்கும்போது மகிழ்ச்சியடையும் பதுக்கிவைப்பவன் மிகவும் கெட்டவன்'' என்று நபி அவர்கள் கண்டிக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்,
''எவன் நாற்பது நாட்களுக்கு உணவுப் பொருட்களைப் பதுக்கி வைக்கிறானோ அவன் இறைவனின் பொறுப்பி லிருந்து நீங்குகிறான். இறைவனும் அவனது பொறுப்பி லிருந்து நீங்குகிறான். எந்த ஒரு பகுதியில் ஒரு மனிதன் பசித்தவனாக இருக்கிறானோ இறைவன் அவர்களின் பொறுப்பிலிருந்து நீங்குகிறான்'' (அஹ்மத்)

இந்த ஹதீஸில் உணவுப் பொருட்களைப் பதுக்கிவைப்பதும் ஓர் ஊரில் உணவின்றி ஓர் ஏழை விடப்படுவதும் கண்டிக்கப் படுகிறது.

## மோசடியும் கலப்படமும்

மோசடி, கலப்படம்போன்ற மனித இனத்துக்கெதிரான செயல் களையும் இஸ்லாம் கண்டிக்கிறது.

உணவுப் பொருட்கள் குவியலாக வைக்கப்பட்டு விற்கப்படுகின்ற ஓரிடத்துக்கு நபியவர்கள் சென்றார்கள். அந்த உணவுக் குவியலுக்குள் கையைப் புகுத்த, உள்ளே ஈரமாக இருப்பதைக் கண்டார்கள். அப்போது அந்த வியாபாரியிடம் "இது என்ன ஈரமாக உள்ளதே!'' என்றார்கள். "அது மழையினால் நனைந்து விட்டது'' என்றார் வியாபாரி. "அப்படியானால் ஏன் அதனை மக்கள் கண்களுக்குத் தெரியும்படி வைக்கவில்லை. யார் மோசடி செய்கின்றாரோ அவர் எமது சமூகத்தைச் சார்ந்தவரல்ல'' என நபியவர்கள் கூறி இந்த மோசடியைக் கண்டித்தார்கள்.
(முஸ்லிம் அபூதாவூத்)

ஒருநாள் ஒரு பகுதியால் அபூஹுறைறா என்ற நபித் தோழர் சென்று கொண்டிருந்தார். அங்கே ஒருவர் பால் விற்றுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார். அப்பாலை இவர் உற்று நோக்கியபோது அதனுள் நீர் கலந்து விற்கப்படுவதைக் கவனித்தார். அப்போது இவர் அந்த வியாபாரியிடம் மறுமை நாளில் உம்மிடத்தில் பாலிலிருந்து நீரைப் பிரித்தெடுக்குமாறு கூறப்பட்டால் நீர் என்ன செய்வாய்? என்று கேட்டார்கள் (பைஹகி)

மேற்கூறிய இரு சம்பவங்களும் மோசடி, கலப்படம் போன்ற மனிதனை ஏமாற்றும் செயல்களை மேற்கொள்வது ஒரு முஸ்லிம் தவிர்ந்து நடக்க வேண்டுமென்பதைத் தெளிவுபடுத்துகிறது.

**வட்டி**

இஸ்லாம் வெறுக்கின்ற பொருளீட்டும் முறைகளில் வட்டி மிகவும் மோசமானதாகும். மனித நேயத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடுகளில் இதுவும் ஒன்றாகும்.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ وَذَرُواْ مَا بَقِيَ مِنَ ٱلرِّبَوٰٓاْ
إِن كُنتُم مُّؤْمِنِينَ ﴿٢٧٨﴾ فَإِن لَّمْ تَفْعَلُواْ فَأْذَنُواْ بِحَرْبٍ مِّنَ ٱللَّهِ
وَرَسُولِهِۦۖ وَإِن تُبْتُمْ فَلَكُمْ رُءُوسُ أَمْوَٰلِكُمْ لَا تَظْلِمُونَ وَلَا تُظْلَمُونَ

*விசுவாசிகளே! அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். நீங்கள் உண்மை விசுவாசியாக இருந்தால் வட்டியாக மிஞ்சுபவற்றை விட்டு விடுங்கள். அவ்வாறு நீங்கள் செய்யாவிடில் அல்லாஹ்வுடனும் அவனுடைய தூதருடனும் சண்டை புரிய ஆயத்தமாகுங்கள்.*

(அல்-குர்ஆன் 2:278,279)

வட்டிக்குக் கொடுப்போரையும் வட்டிக்குப் பணம் வாங்குவோரையும் அந்த உடன்படிக்கையை எழுதிக் கொடுப்போரையும் அதற்கு சாட்சியாக நிற்பவர்களையும் அல்லாஹ் சபிக்கிறான் என்று இந்தக் கொடுமையின் தன்மையை நபி (ஸல்) அவர்கள் பறைசாற்றியுள்ளார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநாதைகளின் சொத்தை அபகரித்தல்

அல்லாஹ் கூறுகிறான்

إِنَّ ٱلَّـذِينَ يَـأۡكُلُونَ أَمۡـوَٰلَ ٱلۡيَتَـٰمَـىٰ ظُلۡمًـا إِنَّمَـا يَـأۡكُلُونَ فِـى بُطُـونِهِمۡ نَـارًاۖ وَسَـيَصۡلَوۡنَ سَـعِيرًا

*எவர் அநாதைகளின் பொருட்களை அநியாயமாக விழுங்கி விடுகின்றனரோ அவர்கள் தங்கள் வயிறுகளில் நெருப்பையே கொட்டிக்கொள்கின்றார்கள். பின்னர் (மறுமையில்) கொழுந்து விட்டெரியும் நெருப்பினுள் செல்வார்கள்.* (அல்-குர்ஆன் 4:10)

وَلَا تَقۡرَبُـواْ مَـالَ ٱلۡيَتِيـمِ إِلَّا بِـٱلَّتِى هِىَ أَحۡسَنُ حَتَّىٰ يَبۡلُـغَ أَشُـدَّهُۥۖ وَأَوۡفُـواْ ٱلۡكَيۡـلَ وَٱلۡمِـيزَانَ بِـٱلۡقِسۡطِۖ

*அநாதைகளின் பொருளை அவர் பருவமடையும் வரையில் நியாயமான முறையிலன்றித் தொடாதீர்கள். அளவைகளை சரியான முறையில் அளவுங்கள். எடையை நீதமாக நிறுங்கள்.*

(அல்-குர்ஆன் 6:152)

அநாதைகளின் சொத்துக்கு கிட்டவும் நெருங்காதீர்கள் என்ற அல்லாஹ்வின் கட்டளையின் மூலம் அது ஒரு கொடிய நெருப்பு என்பது தெளிவாகின்றதல்லவா?

இதோ ஒரு ஹதீஸைக் கவனியுங்கள். இஸ்லாம் வெறுக்கும் முக்கிய குற்றச் செயல்கள் அங்கு தெளிவாக்கப்படுகின்றன. அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்;

''ஏழு கொடிய பாவங்களை நீங்கள் தவிர்ந்து கொள்ளுங்கள். அப்போது தோழர்கள் அவைகள் என்ன நாயகமே! என வினவ அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், சூனியம் செய்தல், கொலை செய்தல், வட்டி உண்ணல், அநாதைகளின் சொத்தை உண்ணல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தின் போது பின்வாங்கல், பத்தினியான விசுவாசியான பெண்களை அவதூறு கூறுதல் என்பனவையே அவைகள்'' என்று கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

மேற்கூறிய ஹதீஸின் மூலம் வட்டி உண்ணல், அநாதைகளின் சொத்துக்களை உண்ணல், அவதூறு கூறல் போன்ற மனிதநேயத்துக்கு விரோதமான செயல்கள் கொடிய பாவங்களாக சித்தரிக்கப்படுவதை நாங்கள் காணலாம்.

இவ்வாறு இஸ்லாம் மனித நேயத்தை இல்லாதொழிக்கின்ற பொருளீட்டும் முறைகளை வன்மையாகக் கண்டிக்கிறது. ஒரு மனிதன் எந்த நிலையிலும் மற்ற மனிதனின் கண்ணியத்தை மேம்படுத்துகின்றவனாகவும், அவனது உரிமையைப் பேணி வாழவேண்டியவனாகவுமே வேண்டப்படுகின்றான்.

இதே போன்றுதான் இலஞ்சம் கொடுத்தல், எடுத்தல், பிறர் சொத்தை அபகரித்தல், பொறாமைப்படல், கோள் சொல்லுதல், புறம் பேசுதல், பரிகாசம் செய்தல் போன்ற மனிதனுடன் சம்பந்தப்படுகின்ற அத்தனை விடயங்களையும் இஸ்லாம் சமய வரையறைக்குள் கொண்டு வந்துள்ளதன் மூலம், இம்மார்க்கம் மனித நேயத்தை எவ்வளவு தூரம் மதிக்கின்றது என்பதையும் மனிதனுக்கு மனிதன் செய்யும் தவறுகளை படைத்த இறைவனுக்குச் செய்யும் குற்றமாகவும் மனிதனுக்கு மனிதன் புரியும் நன்றிகளை - உதவிகளை படைத்தவனுக்குச் செய்யும் உதவியாகவும் இஸ்லாம் கருதுகின்றதனையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும்.

**உண்மையில் தீனுல் இஸ்லாம் மனித நேயத்தை மானிடர் மத்தியில் வளர்ப்பதில் பெரும் முயற்சியை மேற்கொண்டு வெற்றி பெற்றுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமும் ஜிஹாதும்

'ஜிஹாது' என்ற அறபுச் சொல்லுக்கு முயற்சி செய்தல், சிரமப் படல் என்பன பொருளாகும். அது பலரும் நினைப்பதைப்போல் யுத்தம், போர் என்ற சொல்லின் ஒத்தபொருள் அல்ல. இச்சொல் பல்வேறு பொருளில் வழங்கப்படுகிறது. சில குறிப்பிட்ட காரணங் களுக்காக நடைபெறும் போராட்டத்துக்கும் இப்பெயர் வழங்கப் படுகிறது. தனது ஆத்மாவோடு போராடும் போராட்டத்துக்கும் இப்பெயர் கூறுப்படுகிறது.

ஜிஹாதுகளில் சிறந்தது எது?
நபி தூதர் (ஸல்) அவர்கள் விளக்கம் கூறுகின்றார்கள்:
''ஜிஹாதுகளில் மிகவும் சிறந்தது அநியாயக்கார அரசனிடத்திலே உண்மையை எடுத்துக் கூறுவது''

எனவே, யுத்தங்கள் புரிவது மாத்திரம்தான் ஜிஹாது அல்ல. மனப் போராட்டமும் அதில்தான் அடங்கும். இஸ்லாமிய நாடுகளில் நடக்கும் யுத்தங்கள் எல்லாம் ஜிஹாது என்ற வகையில் அடங்காது. ஆனால் யுத்தங்களிற்சில அதனுள் அடங்கும்.

## ஜிஹாது யாருடன்?

அனைத்து மனிதர்களையும் இறைவனின் படைப்பாக கண்ணியத்துக்குரியவனாகக் கருதும் இஸ்லாம் அற்ப காரணங்களுக்காக சண்டை பிடிக்குமாறு தூண்டாது. அதற்கு புனிதப்போர் என்ற அடைமொழியையும் வழங்காது.
அல்லாஹ் கூறுவதைக் கவனியுங்கள்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

لَّا يَنْهَىٰكُمُ ٱللَّهُ عَنِ ٱلَّذِينَ لَمْ يُقَٰتِلُوكُمْ فِى ٱلدِّينِ وَلَمْ
يُخْرِجُوكُم مِّن دِيَٰرِكُمْ أَن تَبَرُّوهُمْ وَتُقْسِطُوٓا۟ إِلَيْهِمْ ۚ إِنَّ ٱللَّهَ يُحِبُّ
ٱلْمُقْسِطِينَ ﴿٨﴾ إِنَّمَا يَنْهَىٰكُمُ ٱللَّهُ عَنِ ٱلَّذِينَ قَٰتَلُوكُمْ فِى ٱلدِّينِ
وَأَخْرَجُوكُم مِّن دِيَٰرِكُمْ وَظَٰهَرُوا۟ عَلَىٰٓ إِخْرَاجِكُمْ أَن تَوَلَّوْهُمْ ۚ
وَمَن يَتَوَلَّهُمْ فَأُو۟لَٰٓئِكَ هُمُ ٱلظَّٰلِمُونَ ﴿٩﴾

*விசுவாசிகளே! மார்க்க விடயத்தில் உங்களுடன் எதிர்த்து யுத்தம் புரியாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அத்தகையோருக்கு நீங்கள் நன்மை செய்வதையும் அவர்கள் பால் நீங்கள் நீதமாக நடந்து கொள்வதையும் அல்லாஹ் உங்களுக்குத் தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்வோரை நேசிக்கிறான்.*

*அல்லாஹ் உங்களைத் தடுப்பதெல்லாம் மார்க்க விடயத்தில் உங்களுடன் போர் புரிந்து உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றி உங்களை வெளியேற்றுவதில் எதிரிகட்கு உதவியும் செய்தார்களே அத்தகையோரை நீங்கள் சிநேகிதர் களாக ஆக்கிக் கொள்வதைத்தான். எவர்கள் அவர்களை நேசர்களாக ஆக்கிக் கொள்கிறார்களோ அவர்கள்தான் அநியாயக்காரர்கள்.*

(அல்-குர்ஆன் 60:8,9)

மேற்காணும் வசனம் அந்நியர் விடயத்தில் முஸ்லிம் சமுதாயத் திற்கு எவ்வாறான வழிகாட்டல்களை வழங்குகின்றதென்பதைக் கவனியுங்கள்.

மார்க்கத்தைக் காரணமாக வைத்து முஸ்லிம்களுடன் சண்டை பிடிக்காதவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களை தங்களது வீடுகளிலிருந்து வெளியேற்றாதவர்கள். இவ்வாறான அந்நிய சமய மக்களுக்கு முஸ்லிம்கள், நன்மை செய்ய வேண்டும்.அவர்களுடன் நீதமாக நடந்துகொள்ள வேண்டும்.

ஆனால், முஸ்லிம்களுடன், முஸ்லிம் என்ற காரணத்துக்காக சண்டைசெய்து, அவர்களை அவர்களின் வீடுகளில் இருந்து வெளியேற்றி அல்லது வெளியேற்றுவதற்கு உதவி செய்து விரோதமாக நடந்தவர்களோடு அன்பாக இருக்காமல் அவர்களைப் பகைவர்களாகக் கருத வேண்டும் என அல்-குர்ஆன் வேண்டுகிறது. இவ்வாறான அநியாயம் செய்யப்பட்ட நிலையில் உருவாகும் யுத்தமே 'ஜிஹாது' என்ற வரையறைக்குள் அடங்கும்.

இவ்வாறு அநியாயம் செய்யாதவர்கள் முஸ்லிம் அல்லாதவராக இருப்பினும் அவர்களுடன் இணக்கமாக; பரஸ்பரம் உதவியாக; நீதமாக நடக்கும்படியே மேற்படி வசனம் வேண்டுகிறது.

ஜிஹாது பற்றி வலியுறுத்தும் மற்றொரு அல்-குர்ஆன் வசனத்தைக் கவனியுங்கள்.

وَقَٰتِلُوا۟ فِى سَبِيلِ ٱللَّهِ ٱلَّذِينَ يُقَٰتِلُونَكُمْ وَلَا تَعْتَدُوٓا۟ ۚ إِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ ٱلْمُعْتَدِينَ

*உங்களுடன் சண்டைபிடிப்போருடன் மாத்திரமே அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள், வரம்பு மீறாதீர்கள், அல்லாஹ் வரம்பு மீறுவோரை நேசிப்பதில்லை.* (அல்-குர்ஆன் 2:190)

உங்களுடன் சண்டைபிடிப்பவர்களோடு மாத்திரமே நீங்கள் 'ஜிஹாது' புரியுங்கள். அவ்வாறு செய்யும்போது நீங்கள் வரம்பு மீறாதீர்கள். அதாவது உங்களுக்கு அவர்கள் என்ன அநியாயம் செய்தார்களோ அதனையே நீங்கள் அவர்களுக்கும் செய்யுங்கள். அதைவிட அதிகம் செய்யாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுவோரை நேசிப்பதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வசனத்தின் மூலம் முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்யாத முஸ்லிம் அல்லாதாருடன் புரியும் சண்டையை புனிதப் போர் 'ஜிஹாது' என்ற வரையறைக்குள் அடக்க முடியாது. மாறாக எல்லை மீறிச் செயற்படும் அவர்களின் பகைமையை முறியடிக்கவே யுத்தம் அங்கு அனுமதிக்கப்படுகிறது.

மற்றுமோர் அல்-குர்ஆன் வசனத்தைக் கவனியுங்கள்;

فَمَنِ ٱعْتَدَىٰ عَلَيْكُمْ فَٱعْتَدُوا۟ عَلَيْهِ بِمِثْلِ مَا ٱعْتَدَىٰ عَلَيْكُمْ ۚ
وَٱتَّقُوا۟ ٱللَّهَ وَٱعْلَمُوٓا۟ أَنَّ ٱللَّهَ مَعَ ٱلْمُتَّقِينَ

*(சங்கைமிக்க மாதங்களில்) எவரேனும் வரம்புமீறி உங்கள் மீது யுத்தத்துக்கு வந்தால் அவர் உங்கள் மீது மீறிய விதமே நீங்களும் அவர்கள் மீது மீறி யுத்தத்துக்குச் செல்லுங்கள். நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து (அம்மாதங்களில் யுத்தத்தை ஆரம்பம் செய்யாது இருந்து) கொள்ளுங்கள். அல்லாஹ் பயபக்தியுடைய வர்களுடன் இருக்கிறான் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.* (அல்-குர்ஆன் 2:194)

ரஜப், துல்க.்.தா, துல்ஹஜ், முஹர்ரம் ஆகிய நான்கு மாதங்கள் யுத்தம் செய்வது தடைசெய்யப்பட்ட மாதங்களாகும். நபியவர்கட்கு நபித்துவம் கிடைக்க முன்பே அரபிகள் இம்மாதங்களில் சண்டை செய்வதை தவிர்த்து வாழ்ந்தனர். அல்-குர்ஆனும் இவ்வழக்கத்தைத் தொடருமாறு பணித்தது. இம்மாதங்களில் முஸ்லிம்கள் யுத்தங்கள் எதையும் ஆரம்பிக்க முடியாது. ஆனால், இம்மாதங்களில் யாராவது அவர்களை தாக்கினால் அவர்கள் திருப்பித் தாக்காமல் இருக்கத் தேவையில்லை. அதனைத்தான் மேற்கூறிய வசனம் அனுமதியளிக்கிறது.

மேலும் முஸ்லிம்களோடு ஒப்பந்தங்கள் புரிந்து அதன்மூலம் நன்மைகள் அடைந்துவிட்டு முஸ்லிம்களுக்கு ஆபத்து வருகின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது உதவாமல் ஒப்பந்தங்களை மீறி கழுத்தறுப்பு வேலையில் ஈடுபடுவோருடன் யுத்தம் புரிய இஸ்லாம் அனுமதியளிக்கிறது.

وَإِن نَّكَثُوٓاْ أَيْمَـٰنَهُم مِّنۢ بَعْدِ عَهْدِهِمْ وَطَعَنُواْ فِى دِينِكُمْ فَقَـٰتِلُوٓاْ أَئِمَّةَ ٱلْكُفْرِ ۙ إِنَّهُمْ لَآ أَيْمَـٰنَ لَهُمْ لَعَلَّهُمْ يَنتَهُونَ

உடன்படிக்கை செய்து கொண்டதன் பின்னரும் அவர்கள் தங்களுடைய சத்தியங்களை முறித்து உங்களுடைய மார்க்கத்தைப் பற்றியும் குற்றங்குறைகள் கூறிக்கொண்டிருந்தால் நிராகரிப் போரின் இத்தகைய தலைவர்களுடன் போரிடுங்கள். ஏனெனில் அவர்களின் உடன் படிக்கையில் உறுதியில்லை. அவர்கள் விலகிக்கொள்ளலாம். (அல்-குர்ஆன் 9:12)

அநியாயம் செய்யப்பட்டவர்கட்கு நீதி வழங்குவதற்காக யுத்தம் செய்வது அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

وَمَا لَكُمْ لَا تُقَـٰتِلُونَ فِى سَبِيلِ ٱللَّهِ وَٱلْمُسْتَضْعَفِينَ مِنَ ٱلرِّجَالِ وَٱلنِّسَآءِ وَٱلْوِلْدَٰنِ ٱلَّذِينَ يَقُولُونَ رَبَّنَآ أَخْرِجْنَا مِنْ هَـٰذِهِ ٱلْقَرْيَةِ ٱلظَّالِمِ أَهْلُهَا وَٱجْعَل لَّنَا مِن لَّدُنكَ وَلِيًّا وَٱجْعَل لَّنَا مِن لَّدُنكَ نَصِيرًا

பலவீனமான ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் சிறுகுழந்தைகளுக்காகவும் இவர்களை இரட்சிப்பதற்காக அல்லாஹ்வுடைய பாதையில் நீங்கள் யுத்தம் புரியாதிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? அவர்களோ எங்கள் இறைவனே! அக்கிரமக்காரர்கள் வசிக்கும் இவ்வூரிலிருந்து எங்களை வெளியேற்றிவிடுவாயாக! நீ எங்களுக்கு உன் புறத்தால் இருந்து ஒரு பாதுகாவலரை ஆக்குவாயாக! ஓர் உதவியாளரையும் அளித்தருள்வாயாக! என்று பிரார்த்திக்கின்றனர்.

(அல்-குர்ஆன்4:75)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காணும் வசனம் அநியாயம் செய்யப்படுகின்றபோது அதனைப் பார்த்துக் கொண்டு வாய்பொத்தி பேசாமல் இருக்கக் கூடாது. அநியாயம் செய்யும் நபர் எவ்வளவு சக்தியுள்ளவராக இருப்பினும் அவருக்கெதிராகச் சக்திகளைத் திரட்டிப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமெனக் கூறுகிறது. ஏனெனில் இங்கு பிரச்சினையை உருவாக்குவது நோக்கமல்ல. அநியாயக்காரனால் பலவீனமான மக்கள், ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் படும் துன்பங்கள் துடைத்தெறியப்பட வேண்டும். அவனை அழித்து அம்மக்களை அவ்வூரில் நிம்மதியாக வாழ வைக்கவேண்டும். இவ்வாறான நோக்கத்துக்காக யுத்தம் செய்வதை இஸ்லாம் ஆதரிக்கிறது.

பலவீனமான மக்கள் நலனில், பாதுகாப்பில் இஸ்லாம் எப்போதும் அக்கறையாகவே இருந்து வந்துள்ளது என்பதை இவ்விடத்தில் குறிப்பிட்டுக் காட்டவேண்டியுள்ளது. அநியாயம் செய்யப்படும் ஒரு மனிதன் அல்லாஹ்விடத்தில் பிரார்த்திக்கும்போது அவனது பிரார்த்தனை எவ்வித தடங்கலுமின்றி ஏற்றுக்கொள்ளப்படும் என்பது நபிமொழி.

''நீங்கள் உதவி செய்யப்படுவதும் உணவளிக்கப்படுவதும் உங்களில் உள்ள பலவீனமான மக்கள் காரணமாகத்தான்'' என்றும் இந்த உம்மத்தினர்களில் பலவீனமான மக்களின் பிரார்த்தனை, தொழுகை, உளத்தூய்மை காரணமாகவே அல்லாஹ் இவர்களுக்கு உதவுகிறான்'' என்றும் ஹதீஸ்கள் குறிப்பிடுகின்றன.

(புஹாரி, நஸயீ)

## யுத்தம் எப்போது அனுமதிக்கப்பட்டது?

நபி (ஸல்) அவர்கள் தமது நாற்பதாவது வயதில் நபித்துவம் வழங்கப்பட்டார்கள். சுமார் 13 வருடங்கள் தாம் பிறந்த ஊரான மக்காவில் வாழ்ந்து தனக்கு வழங்கப்பட்ட 'ரிஸாலா'வை மக்களுக்குப் போதித்தார்கள். இதனால் அவர்களும் அவர்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றியோரும் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாக்கப் பட்டார்கள். எனினும் இவர்களைப் பொறுமையைக் கடைப் பிடிக்குமாறே அல்லாஹ் உத்தரவிட்டான்.

وَٱصْبِرْ لِحُكْمِ رَبِّكَ فَإِنَّكَ بِأَعْيُنِنَا

*நபியே! உமதிரட்சகனின் தீர்ப்பை எதிர்பார்த்துப் பொறுத்திருப்பீராக! நிச்சயமாக நீர் நமது கண்களுக்கு முன்பாகவே இருக்கிறீர்*

(அல்-குர்ஆன் (52:48)

فَٱصْفَحْ عَنْهُمْ وَقُلْ سَلَٰمٌ فَسَوْفَ يَعْلَمُونَ

*நபியே! நீர் அவர்களைப் புறக் கணித்துவிட்டு ஸலாம் (சமாதானம்) என்று கூறிவிடுவாயாக! பின்னர் அவர்கள் இதன் உண்மையை அறிந்து கொள்வார்கள்.* (அல்-குர்ஆன் 43:89)

மேற்காணும் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப பொறுமையைக் கடைப்பிடித்த நபியவர்கள் தம்மைப் பின்பற்றியவர்களை அபீசீனியா போன்ற புறதேசங்களுக்கு அனுப்பி அவர்களின் உயிரையும் சமயத்தையும் பாதுகாத்தார்கள். மக்காவில் வாழ்ந்த நபியவர்கள் கொலைப்பயமுறுத்தலுக்கு உள்ளானார்கள். குறைஷிய இளைஞர்களால் நபியவர்களின் வீடு முற்றுகை இடப்பட்டது. இவ்வேளையில்தான் அங்கிருந்து தப்பி மதீனாவுக்கு ஓடிவந்தார்கள். மதீனா வந்தும் அவர்களை நிம்மதியாக வாழ குறைஷிகள் அனுமதிக்கவில்லை. இந்நிலையில்தான் தற்காப்பு அடிப்படையில் யுத்தம் புரிய முதன்முதலாக நபி தூதர் (ஸல்) அவர்கட்கு அனுமதி அளிக்கப்பட்டது.

ஜிஹாத் தொடர்பாக அல்-குர்ஆன் அருளிய முதல் வசனமே இதுதான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

أُذِنَ لِلَّذِينَ يُقَٰتَلُونَ بِأَنَّهُمْ ظُلِمُوا۟ ۚ وَإِنَّ ٱللَّهَ عَلَىٰ نَصْرِهِمْ لَقَدِيرٌ ﴿٣٩﴾
ٱلَّذِينَ أُخْرِجُوا۟ مِن دِيَٰرِهِم بِغَيْرِ حَقٍّ إِلَّآ أَن يَقُولُوا۟ رَبُّنَا ٱللَّهُ ۗ وَلَوْلَا
دَفْعُ ٱللَّهِ ٱلنَّاسَ بَعْضَهُم بِبَعْضٍ لَّهُدِّمَتْ صَوَٰمِعُ وَبِيَعٌ وَصَلَوَٰتٌ
وَمَسَٰجِدُ يُذْكَرُ فِيهَا ٱسْمُ ٱللَّهِ كَثِيرًا ۗ وَلَيَنصُرَنَّ ٱللَّهُ مَن يَنصُرُهُۥٓ ۗ إِنَّ ٱللَّهَ
لَقَوِىٌّ عَزِيزٌ ﴿٤٠﴾

*அநியாயத்துக்குள்ளானவர்களுக்கு யுத்தம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டு விட்டது. நிச்சயமாக அல்லாஹ் இவர்களுக்கு உதவி செய்யப் பேராற்றலுடையவன். இவர்கள் நியாயமின்றி தங்கள் வீடு களிலிருந்து விரட்டப்பட்டார்கள். எங்களின் இறைவன் அல்லாஹ் ஒருவன்தான் என்று கூறியதுதான் இவர்கள் செய்த குற்றம். மனிதர்களில் அக்கிரமம் செய்யும் சிலரை, சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருந்தால் கிறிஸ்தவர்களின் ஆலயங்களும், அவர்களின் மடங்களும், யூதர்களுடைய ஆலயங் களும் அல்லாஹ் வின் நாமம் அதிகமாக ஓதப்படும் மஸ்ஜிதுகளும் அழிக்கப்பட்டே போயிருக்கும். அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கிறானோ அவனுக்கு அல்லாஹ் உதவி செய்கிறான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க பலவானும் யாவரையும் மிகைத்தோனு மாவான்.*

(அல்-குர்ஆன் 22:39-40)

முஸ்லிம்களுக்கு ஜிஹாது செய்யும் அனுமதியை அல்லாஹ் வழங்கிய அதேவேளை அதற்கான நியாயங்களையும் அவன் குறிப்பிடுகின்றான்.

01. இவர்கள் மற்றவர்களால் அநியாயங்களுக்குள்ளானார்கள்.
02. எங்கள் இறைவன் அல்லாஹ் என்றதற்காக தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.
03. அநியாயங்களை எதிர்ப்பது இல்லையென்றால் சமயங்களும், சமய நிறுவனங்களும் அழிக்கப்பட்டுவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, தற்பாதுகாப்பு யுத்தம் இல்லையென்றால் சமயங்கள் அழிந்துவிடும். அவற்றைப் பாதுகாக்க யுத்தத்தின் தேவை இங்கு உணர்த்தப்பட்டுள்ளது.

இந்த இடத்திலே அல்-குர்ஆன் கிறிஸ்தவர்களின் ஆலயங்களும், மடங்களும், யூதர்களின் ஆலயங்களும் பாதுகாக்கப்படுவது பற்றிக் குறிப்பிட்டிருப்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். அதாவது சகல சமயங்களும் எதிரிகளின் சூழ்ச்சிகளிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு யுத்தம் தேவைப்பட்டாலும் அதனைச் செய்ய வேண்டுமென்பதே இஸ்லாத்தின் கருத்தாகும்.

மேற்கத்தியவாதிகளில் பலர் இஸ்லாத்தின் இந்த நிர்ப்பந்த யுத்தம் பற்றி அறிந்துள்ளனராயினும் சிலர் இஸ்லாம் ஒரு நரபலியை விரும்பும் மார்க்கம்போல பிரசாரம் செய்கின்றனர். மேற்கத்திய ஊடகங்கள் இஸ்லாத்தைப் பயங்கரவாத மதமாகவும் முஸ்லிம்களைப் பயங்கரவாதிகளாகவும் உலகுக்கு காட்டுவதில் பெருமுயற்சி செய்கிறார்கள். இது இன்று நேற்றல்ல, ஆங்கிலேய ராக இருந்து இஸ்லாத்தைத் தழுவிய அறிஞர் முஹம்மது பிக்தால் அவர்கள் தங்களது இஸ்லாமிய 'கலைப்பண்பு' (1952) என்ற நூலில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகின்றார்.

ஜெனீவாவில் நடந்த சமாதான மாநாடொன்றில் ஜனாப். பிக்தால் அவர்களும் சமூகமளித்திருந்தார். அம்மாநாட்டில் கலந்து கொண்ட லொய்ட் ஜோர்ஜ் என்பவரும் இந்திய நீதிபதியொருவரும் அல்-குர்ஆனில் 'அவர்களைக் கண்ட இடத்தில் கொல்லுங்கள்' என்ற வசனம் உள்ளதால், இஸ்லாம் வன்செயலைத் தூண்டுவதாகக் குற்றம் சுமத்தினர். உடனே பிக்தால் அவர்கள் எழுந்து அந்த வசனத்தை அரைகுறையாகக் கூறி விடயத்தைக் குழப்பாமல் முழுமையாகக் கூறுமாறு கேட்டுவிட்டு அவ்வசனம் எவ்வாறான சூழ்நிலையை குறிப்பிடுகிறது என்பதையும் விளக்கினார். குற்றம் சாட்டியவர்கள் உண்மையை அறிந்து வாயடைத்துப் போயினர். அவர்கள் குறிப்பிட்ட வசனத்தின் முழுப் பகுதியும் இதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

وَقَٰتِلُواْ فِي سَبِيلِ ٱللَّهِ ٱلَّذِينَ يُقَٰتِلُونَكُمْ وَلَا تَعْتَدُوٓاْۚ إِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ
ٱلْمُعْتَدِينَ ﴿١٩٠﴾ وَٱقْتُلُوهُمْ حَيْثُ ثَقِفْتُمُوهُمْ وَأَخْرِجُوهُم مِّنْ حَيْثُ
أَخْرَجُوكُمْۚ وَٱلْفِتْنَةُ أَشَدُّ مِنَ ٱلْقَتْلِۚ وَلَا تُقَٰتِلُوهُمْ عِندَ ٱلْمَسْجِدِ ٱلْحَرَامِ
حَتَّىٰ يُقَٰتِلُوكُمْ فِيهِۖ فَإِن قَٰتَلُوكُمْ فَٱقْتُلُوهُمْۗ كَذَٰلِكَ جَزَآءُ ٱلْكَٰفِرِينَ

*உங்களோடு எதிர்த்து சண்டைபிடிப்போருடன் அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் போராடுங்கள். ஆனால் நீங்கள் எல்லை கடந்துவிடாதீர்கள். அல்லாஹ் வரம்பு மீறுவோரை விரும்ப மாட்டான். ஆகவே உங்களை எதிர்த்து யுத்தம் புரியும் அவர்களைக் கண்ட விடமெல்லாம் வெட்டுங்கள். உங்களை உங்கள் ஊரிலிருந்து வெளியேற்றியவாறே நீங்களும் அவர்களை வெளியேற்றி விடுங்கள். அவர்கள் செய்யும் கலகம் கொலையைவிட மிகக் கொடியது. அவ்வாறான நிலையிலும் அவர்கள் அபயம் தேடி (புனித மக்காப்பள்ளியான) மஸ்ஜிதுல் ஹரமில் இருந்தால் அவர்கள் உங்களைத் தாக்காத வரை அவர்களை நீங்கள் தாக்காதீர்கள். அவர்கள் உங்களைத் தாக்கினால் (மாத்திரம்) நீங்கள் அவர்களைத் தாக்குங்கள். இவ்வாறே நிராகரிப்போருக்கு கூலி உள்ளது.*

(அல்-குர்ஆன் 2:190,191)

முஸ்லிம்களின் உரிமைகளை மறுத்து அவர்களை சண்டைக் கிழுத்து கலகம் செய்து கொண்டிருப்போருக்கெதிராக யுத்த நிலையில் கூறப்பட்ட வசனமே அது! உங்களோடு சண்டை பிடித்துக் கொண்டிருப்போர்களுடன்; உங்களை வெளியேற்றிய வர்களுடன் எனும் சொற்கள், நிலையை நன்கு தெளிவுபடுத்து கின்றதல்லவா?

எனவே, முஸ்லிம்களுக்கெதிராகப் போர் தொடுத்துக்கொண்டும் அவர்களுக்கெதிராக அட்டூழியங்கள் புரிந்துகொண்டிருப்போருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கி, ஒடுங்கி அடிமைபோன்று வாழ்ந்து அழிந்து போவதை இஸ்லாம் ஒருபோதும் ஏற்காது. போரிட்டு தமது உரிமைகளை அவர்கள் நிலை நாட்ட வேண்டும். இதுவே இஸ்லாத்தின் இலட்சியம்.

இந்த உண்மைகளை மறுத்து இன்று வெளிநாட்டு ஊடகங்கள் முஸ்லிம்களுக்குச் சூட்டுகின்ற பட்டம் பயங்கரவாதிகள், அடிப்படைவாதிகள் என்பனவாகும். ஆனால் இந்த மேற்கத்திய சக்திகள் செய்யும் பயங்கரவாதச் செயல்களுக்கு அளவேயில்லை. அதனைப் பயங்கரம் என்று கூறுவோரும் இல்லை. தட்டிக் கேட்பதற்கும் ஆட்களில்லை. பலஸ்தீனத்திலே நடக்கும் போராட்டத்தைச் சற்றுக் கவனியுங்கள்.

நான் கட்டிய எனது வீட்டிலே இருந்த என்னைப் பிடித்து இழுத்துக்கொண்டு சென்று வீதியிலே நிறுத்திவிட்டு எனது வீட்டுக்குள் அந்நியர் புகுந்து, வாழ்ந்து ஆடிப்பாடி மகிழ்வதை நான் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமா? எனது சொந்த வீட்டிலே அடாவடித்தனமான முறையில் அந்நியர் குடியேற, போக்கிடம் இன்றி நான் வீதியிலே கைகட்டி, வாய் பொத்தி பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? இந்நிலையில் எனது ஆத்திரத்தை அடக்க முடியாமல் நான் அவ்வீட்டுக்கு ஒரு கல் வீசினால் அது பயங்கரவாதமா? உரிமைப் போராட்டமா? பலஸ்தீனத்திலே இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. ஈராக், ஆப்கானிஸ்தானில் என்ன நடைபெறுகிறது? யார் பயங்கரவாதிகள் என்பதை உலகு நன்கு அறிந்து வைத்திருக்கிறது. ஆனால் வாய்திறக்க மறுக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரிலும் பக்குவம்

போர் முஸ்லிம்கள் விரும்பும் ஒன்றல்ல. அது அவர்களுக்கு நிர்ப்பந்தம். தானாக அவர்கள் அதனைச் தேடிச் செல்ல மாட்டார்கள். ஆனால் அவர்களுக்கும் அவர்களது மார்க்கத்துக்கும் அவர்கள் வாழும் இடத்திற்கும் ஆபத்து வந்தால் மாத்திரம் அந்த ஆயுதத்தைத் தொடுவார்கள். ஆனால் யுத்த நேரத்திலும் ஒழுக்கம் வழுவாது நெறி தவறாது அவர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்பதே இஸ்லாத்தின் கட்டளை.

மு..தா யுத்தத்துக்கு செல்லும்போது நபி (ஸல்) அவர்கள் தமது படைகளுக்கு பின்வருமாறு கட்டளை பிறப்பித்தார்கள். "அல்லாஹ்வைப் பயந்து நடக்குமாறு உங்களுக்கு நான் கட்டளையிடுகின்றேன். அல்லாஹ்வின் பாதையில் அல்லாஹ்வின் பெயரால் போரிடுங்கள். நீங்கள் மோசடி செய்யாதீர்கள். பிள்ளைகளையோ, பெண்களையோ, வயதுமுதிர்ந்தவர்களையோ, கோயில்களில் இருப்பவர்களையோ கொன்றுவிடாதீர்கள். மரங்களை வெட்டாதீர்கள். கட்டிடங்களைத் தகர்க்காதீர்கள்"

இவ்வாறு போர் ஒழுக்கத்தை அவர்கட்குப் போதித்தார்கள். இதே போன்றுதான் கலீபா அபூபக்கர் தமது தளபதி உஸாமா பின் செய்துக்கு பின்வரும் உபதேசம் செய்து வழியனுப்பி வைத்தார்கள். "நான் உனக்கு பத்து விடயங்களையிட்டு கட்டளை இடுகின்றேன். நீ பெண்களைக் கொல்லக்கூடாது. அதேபோல் சிறுவர்களையும், வயோதிபர்களையும் கொல்லக் கூடாது. பழம் தரும் மரங்களை வெட்டவோ, கட்டிடங்களைச் சேதப்படுத்தவோ கூடாது. கால்நடைகளை, மிருகங்களைக் கொல்லாதீர். பேரீச்சமரங்களை அழிக்கவோ எரிக்கவோ கூடாது. மோசடியாக நடக்காதீர்கள், கோழையாகவும் இருக்காதீர்கள். கோயில்களில், ஆசிரமங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள மக்களைக் கண்டால் அவர்களை அதற்காக விட்டுவிடுங்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய உபதேசங்களை நன்கு கவனியுங்கள். சிறுவர், பெண்கள், முதியோர், மரங்கள், கட்டிடங்கள் போன்றவற்றின் உரிமைகளை பேணுமாறு அன்றைய தளபதிகளுக்கு இஸ்லாமியத் தலைவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால், இஸ்லாம் உரிமைகளைப் பாதுகாப்பதில் எவ்வளவு கவனம் செலுத்தியுள்ளது என்பது தெளிவாகின்றதல்லவா!

தளபதி காலித் பின் வலீத் அவர்கட்கு கலீபா எழுதினார்; "விவசாயம் செய்து கொண்டும், கால்நடைகளை மேய்த்துக் கொண்டும் இருக்கும் தொழிலாளர்களைக் கொல்வது கூடாது; தவிர்க்கப்படல் வேண்டும்"

ரபாஹ் பின் ரபீஃ அறிவிக்கின்றார்.
ஒரு யுத்தம் முடிந்தபின் கொல்லப்பட்டவர்களை நபி (ஸல்) அவர்கள் பார்த்துக் கொண்டு சென்றபோது ஒரு பெண்ணின் சடலத்தை அங்கே கண்டார்கள். உடனே அவ்விடத்தில் நின்ற அவர்கள் ஏன் இப்பெண் கொல்லப்பட வேண்டும் என கடிந்து கொண்டார்கள். அவ்விடத்திலிருந்தே தனது தளபதிகளுக்கு பெண்கள், அப்பாவிகள் போன்றவர்களைக் கொல்லக் கூடாது எனக் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார்கள்.

போர் நடைபெறுகின்றபோது எதிர்த்தரப்பால் யுத்த நிறுத்தம் கோரப்பட்டால் உடனே அதை ஏற்று யுத்த நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறான கோரிக்கையின் நோக்கம் சதி மோசடியென அறிந்தபோதும், உரிய எச்சரிக்கைகளுடன் யுத்த நிறுத்தம் மேற்கொள்ள வேண்டுமென அல்-குர்ஆன் பணிக்கிறது.

۞وَإِن جَنَحُوا۟ لِلسَّلْمِ فَٱجْنَحْ لَهَا وَتَوَكَّلْ عَلَى ٱللَّهِ ۚ إِنَّهُۥ هُوَ ٱلسَّمِيعُ ٱلْعَلِيمُ ﴿٦١﴾ وَإِن يُرِيدُوٓا۟ أَن يَخْدَعُوكَ فَإِنَّ حَسْبَكَ ٱللَّهُ ۚ هُوَ ٱلَّذِىٓ أَيَّدَكَ بِنَصْرِهِۦ وَبِٱلْمُؤْمِنِينَ ﴿٦٢﴾


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்ந்தால் அப்பொழுது நீரும் அதன் பக்கம் சாய்வீராக! அல்லாஹ்மீது நம்பிக்கையும் வைப்பீராக! நிச்சயமாக அவனே செவியுறுவோன். நன்கறிந்தோன். மேலும் அவர்கள் ஏமாற்றி உமக்குச் சதி செய்யக் கருதினால் அப்பொழுது அல்லாஹ் உமக்குப் போதுமானவன். அவன்தான் உம்மை தன் உதவியைக் கொண்டும் விசுவாசத்தைக் கொண்டும் பலப்படுத்தினான்*

(அல்-குர்ஆன் 8:61-62)

மேற்கண்ட வசனத்தின் மூலம் சமாதானத்தின்பால் இஸ்லாம் எவ்வளவு அக்கறையாகவுள்ளது என்பது தெளிகின்றதல்லவா? உள்நோக்கத்தோடு மோசடியான முறையில் சமாதானத்தைக் கோரினாலும் அதனை ஏற்று யுத்த நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்ற இக்கட்டளை, யுத்தத்தை எவ்வளவு தூரம் இஸ்லாம் வெறுக்கின்றது என்பது புலனாகிறது அல்லவா?

இஸ்லாமிய யுத்த நெறிகள் இன்றைய யுத்தங்களில் கடைப் பிடிக்கப்படுமென்றால் எவ்வளவு நிம்மதி ஏற்படும். கட்டடத்தைத் தகர்த்து, சிறுவர்கள், பெண்கள், வயோதிபர் என்றும் பாராமல் வகை தொகையற்ற முறையில் அப்பாவிகளைக் கொல்லும் இன்றைய யுத்த முறைகள் மனித சமுதாயத்தின் வாழ்க்கை உரிமையை மறுத்துக்கொண்டிருக்கிறதல்லவா?

எனவே, இஸ்லாம் போரில் ஈடுபடாத அப்பாவிகள் விடயத்தில் காட்டும் அக்கறையை இன்று உலகம் பின்பற்றினால் மனித சமுதாயத்திற்கு எவ்வளவு நிம்மதி ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழப்பங்களும் பயங்கரவாதமும்

சமாதானத்தை இலட்சினையாகக் கொண்ட மார்க்கம் இஸ்லாம். சமாதான பூமியாக உலகம் திகழ்வதையே அது எதிர்பார்க்கிறது. சமாதானத்துக்கெதிரான செயலை அது நிராகரிக்கிறது. குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டு பூமி பிணக்காடாவதை அது கண்டிக்கிறது.

அல்லாஹ் குர்ஆனிலே கூறுகிறான்,

وَلَا تَعْثَوْا فِي الْأَرْضِ مُفْسِدِينَ

*பூமியில் குழப்பம் செய்து கொண்டு அலையாதீர்கள்*

(அல்-குர்ஆன்2:60)

وَلَا تَبْغِ الْفَسَادَ فِي الْأَرْضِ إِنَّ اللَّهَ لَا يُحِبُّ الْمُفْسِدِينَ

*பூமியில் குழப்பம் செய்ய விரும்பாதே! நிச்சயமாக அல்லாஹ் குழப்பம் செய்யும் விஷமிகளை விரும்புவதில்லை.*

(அல்-குர்ஆன் 28:77)

وَإِنَّ لِلطَّاغِينَ لَشَرَّ مَآبٍ ﴿٥٥﴾ جَهَنَّمَ يَصْلَوْنَهَا
فَبِئْسَ الْمِهَادُ ﴿٥٦﴾

*அட்டூழியம் புரிவோருக்கு மிகக் கெட்ட தங்குமிடமான நரகம் காத்திருக்கிறது. அதில் அவர்கள் நுழைவார்கள்.*

(அல்-குர்ஆன் 38:55-56)

إِنَّ جَهَنَّمَ كَانَتْ مِرْصَادًا ﴿٢١﴾ لِلطَّاغِينَ مَآبًا ﴿٢٢﴾

*நிச்சயமாக நரகம் அட்டூழியம் புரிவோரின் வரவை எதிர்பார்த்த வண்ணமாகவுள்ளது. (வரம்பு மீறுவோரின்) தங்குமிடம் அதுவே.*

(அல்-குர்ஆன் 78:21-22)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

وَلَا تُفْسِدُوا۟ فِى ٱلْأَرْضِ بَعْدَ إِصْلَـٰحِهَا

*பூமி சீராக அமைதியாக இருக்கும்போது அதிலே குழப்பத்தை ஏற்படுத்தாதீர்கள்.* (அல்-குர்ஆன் 7:56)

وَإِذَا تَوَلَّىٰ سَعَىٰ فِى ٱلْأَرْضِ لِيُفْسِدَ فِيهَا وَيُهْلِكَ ٱلْحَرْثَ وَٱلنَّسْلَ ۗ وَٱللَّهُ لَا

يُحِبُّ ٱلْفَسَادَ

*பூமியில்குழப்பம் விளைவிக்கவும், விவசாயத்தையும் சந்ததியையும் அழிக்கவும் அவன் முயற்சி செய்கின்றான். அல்லாஹ் குழப்பத்தை விரும்பவே மாட்டான்.* (அல்-குர்ஆன் 2.205)

وَلَا تُطِيعُوٓا۟ أَمْرَ ٱلْمُسْرِفِينَ ﴿١٥١﴾ ٱلَّذِينَ يُفْسِدُونَ فِى ٱلْأَرْضِ

وَلَا يُصْلِحُونَ ﴿١٥٢﴾

*வரம்பு மீறுவோரின் கட்டளைக்கு நீங்கள் கீழ்ப்படியாதீர்கள். அவர்கள் பூமியிலே குழப்பத்தை ஏற்படுத்துவார்கள் - சமாதானத்தை ஏற்படுத்தமாட்டார்கள்.* (அல்-குர்ஆன் 26:151-152)

மேற்காணும் வசனங்கள் அனைத்தும் குழப்பங்களை இஸ்லாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் குழப்பம் விளைவிப்போர் அனைவரும் சென்றடையும் இடம் நரகம் என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறது. இஸ்லாத்தில் மிகக் கொடூரமான குற்றச் செயல் களுக்கே நரகம் என்ற தண்டனை என்று இஸ்லாம் கூறுவது கவனிக்கத்தக்கதாகும்.

பூமியிலே குழப்பத்தை ஏற்படுத்தி அதன் மூலம் உயிர்ப்பலி ஏற்படுத்துவதையிட்டு அல்-குர்ஆன் கூறுவதைக் கவனிப்போம்.

مَن قَتَلَ نَفْسًۢا بِغَيْرِ نَفْسٍ أَوْ فَسَادٍ فِى ٱلْأَرْضِ فَكَأَنَّمَا قَتَلَ ٱلنَّاسَ جَمِيعًا

وَمَنْ أَحْيَاهَا فَكَأَنَّمَآ أَحْيَا ٱلنَّاسَ جَمِيعًا



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எவன் மற்றொரு ஆத்மாவின் கொலைக்குப் பிரதியாகவோ அல்லது பூமியில் குழப்பத்தைத் தடை செய்வதற்காகவோ அன்றி (அநியாயமாகக்) கொலை செய்கின்றானோ அவன் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவன் போலாவான். எவன் ஓர் ஆத்மாவை வாழவைக்கின்றானோ அவன் மனிதர்கள் யாவரையும் வாழ வைத்தவன் போலாவான்.* (அல்-குர்ஆன் 5:32)

ஓர் உயிரை அநியாயமாகக் கொல்வது மனித இனத்தை முழுமையாகக் கொல்வதற்கு சமமானதென்றும் அதேபோல் ஓர் உயிரைக் காப்பாற்றுவது மனித இனத்தையே காப்பாற்றுவதற்கு ஒப்பானதென்றும் எமக்கு அல்-குர்ஆன் போதிக்கிறது. எனவே, இவ்வாறு கூறும் மார்க்கம், பூமியிலே குழப்பங்கள் ஏற்படுவதையும் உயிர்கள் பலியாவதையும் ஏற்குமா? என ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## சமாதானத்தைக் குழப்பாதீர்கள்

சமாதானத்தை ஏற்படுத்திய பின்னர் அந்தச் சமாதானத்துக்கு விரோதமாக நடந்து குழப்பம் செய்வோருடன் யுத்தம் செய்யுமாறு இஸ்லாம் பணிக்கிறது.
அல்லாஹ் கூறுகிறான்;

وَإِن طَآئِفَتَانِ مِنَ ٱلْمُؤْمِنِينَ ٱقْتَتَلُوا۟ فَأَصْلِحُوا۟ بَيْنَهُمَا ۖ فَإِنۢ بَغَتْ إِحْدَىٰهُمَا
عَلَى ٱلْأُخْرَىٰ فَقَـٰتِلُوا۟ ٱلَّتِى تَبْغِى حَتَّىٰ تَفِىٓءَ إِلَىٰٓ أَمْرِ ٱللَّهِ ۚ فَإِن فَآءَتْ
فَأَصْلِحُوا۟ بَيْنَهُمَا بِٱلْعَدْلِ وَأَقْسِطُوٓا۟ ۖ إِنَّ ٱللَّهَ يُحِبُّ ٱلْمُقْسِطِينَ

*விசுவாசிகளில் இருசாரார் தங்களுக்குள் சண்டைபிடித்துக் கொண்டால் அவர்கட்கிடையே சமாதானத்தை ஏற்படுத்தி விடுங்கள். சமாதானத்தை ஏற்படுத்திய பின் ஒரு சாரார் மற்றவர்கள் மீது வரம்பு மீறினால் அக்கிரமம் செய்தவர் அல்லாஹ்வின் கட்டளையின்பால் திரும்பும்வரை நீங்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரிடுங்கள். அவர்கள் திரும்பிவிட்டால் நியாயமான முறையில் அவ்விரு தரப்பாரிடையே சமாதானம் செய்து வையுங்கள். இதில் நீங்கள் நியாயமாக நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களை நேசிக்கிறான். (அல்-குர்ஆன் 49.9)

சண்டை பிடித்து அதன்பின் சமாதானம் ஏற்பட்டபின் மீண்டும் சமாதானத்தைக் குழப்பியவர்களுடன் சமாதானத்தை ஏற்படுத்திய அனைவரும் சண்டை செய்ய வேண்டுமென்று இஸ்லாம் பணிக்கிறது. அதன்பின் அவர்கள் வழிக்கு வந்துவிட்டால் அவர்களுடன் நீதியாக நடந்து கொள்ளவேண்டும் என்றும் அது வேண்டுகோள் விடுக்கின்றது.

## பயங்கரவாதச் செயலுக்கான தண்டனை

பூமியில் குழப்பங்கள் செய்து பயங்கரவாதத்தை ஏற்படுத்துவோருக்கான உச்சமான தண்டனையை வழங்க வேண்டுமென்று அல்-குர்ஆன் விதித்துள்ளது.

إِنَّمَا جَزَٰٓؤُاْ ٱلَّذِينَ يُحَارِبُونَ ٱللَّهَ وَرَسُولَهُۥ وَيَسۡعَوۡنَ فِى ٱلۡأَرۡضِ
فَسَادًا أَن يُقَتَّلُوٓاْ أَوۡ يُصَلَّبُوٓاْ أَوۡ تُقَطَّعَ أَيۡدِيهِمۡ وَأَرۡجُلُهُم مِّنۡ خِلَٰفٍ أَوۡ
يُنفَوۡاْ مِنَ ٱلۡأَرۡضِۚ ذَٰلِكَ لَهُمۡ خِزۡيٌ فِى ٱلدُّنۡيَاۖ وَلَهُمۡ فِى ٱلۡأٓخِرَةِ عَذَابٌ
عَظِيمٌ

அல்லாஹ்வுடனும் அவனது தூதருடனும் யுத்தம் தொடுத்தும், பூமியில் குழப்பம் செய்து கொண்டும் திரிகின்றவர்களுக்குரிய தண்டனை அவர்கள் வெட்டப்பட வேண்டும். அல்லது சிலுவையிலறையப்பட வேண்டும். அல்லது அவர்களின் கைகளும் கால்களும் மாறாக (ஒருபக்கத்துக் காலும் மறுபக்கத்து கையும்) துண்டிக்கப்படல் வேண்டும். அல்லது நாடு கடத்தப்படல் வேண்டும். இது இம்மையில் அவர்களுக்கு இழிவுதரும் தண்டனை ஆகும். மேலும் மறுமையிலோ மகத்தான வேதனையும் அவர்களுக்குண்டு. (அல்-குர்ஆன் 5:33)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய அல்-குர்ஆன் வசனம் மூலம் குழப்பம் செய்வோருக்கு பின்வரும் தண்டனைகள் வழங்கப்படுகின்றன

அவர்கள் கொல்லப்படல் வேண்டும்.
சிலுவையில் அறையப்படல் வேண்டும்.
காலொன்றும் கையொன்றும் வெட்டப்படல் வேண்டும்.
நாடு கடத்தப்படல் வேண்டும்.

வழிப்பறி, கொள்ளையடித்தல் போன்ற குற்றச் செயல்களுக்கும் மேற்கூறிய தண்டனையையே இஸ்லாம் விதித்துள்ளது. மேலே கூறப்பட்டுள்ள தண்டனைகள் மிகக்கொடூரமாக இருக்கிறதே எனக் கேட்கலாம். இவ்வாறான தண்டனை யாருக்கு வழங்கப்படவுள்ளது என்பதைச் சற்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். மனித சமுதாயத் தின் உரிமையை அழித்து; அமைதியைக் கெடுத்து; அவர்களின் சுதந்திரத்தைத் தடுத்து; அட்டூழியமும் அராஜகமும் புரிவோருக்குத் தான் இஸ்லாம் மேற்காணும் தண்டனையை வழங்குகிறது.

எனவே, இஸ்லாம் என்றும் பயங்கரவாதத்தை விரும்பும் மார்க்க மல்ல. பயங்கரவாதம் உலகை விட்டும் நீங்கி அமைதிப் பூங்காவாக அது ஆக வேண்டும் எனப்பாடுபடும் சமயமே இஸ்லாமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறசமயத்தவர்களுடன் ஒப்பந்தங்கள்

இஸ்லாமிய நாடொன்றிலோ இஸ்லாம் அல்லாத நாட்டிலோ முஸ்லிம் அல்லாதவர்கள் எல்லாம் இஸ்லாத்தைத் தழுவவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இஸ்லாம் என்றும் இருந்ததில்லை. ஒவ்வொரு சமயத்தவரும் அவரவர் சமயத்தைப் பின்பற்றி வாழும் உரிமையை வழங்கும் இஸ்லாம் பிறசமயத்தினர் முஸ்லிம்களின் உரிமையையும் மதிக்கவேண்டுமென எதிர்பார்க்கிறது. இதன் அடிப்படையில் அது பல்வேறு சமயத்தினருடன் பல ஒப்பந்தங் களை செய்தது.

நபித்துவம் அருளப்பட்டு பதின்மூன்று வருடங்கள் மக்காவில் துன்பச் சூழலில் வாழ்ந்த நபியவர்கள், மதீனாவுக்கு ஹிஜ்ரத் வந்தபோது அங்கே வாழ்ந்த அறபிகள் பெரும்பாலும் இஸ்லாத்தை யும் நபி (ஸல்) அவர்களின் தலைமைத்துவத்தையும் ஏற்றுக் கொண்டனர். அதேநேரம் மதீனாவின் பல்வேறு பகுதிகளில் யூதர்களின் பல்வேறு பிரிவினர் சிறு, சிறு குழுக்களாக, சிறுபான்மையினராக வாழ்ந்துகொண்டிருந்தனர். அவர்கள் அனைவர்களோடும் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அவ்வொப்பந் தத்தில் 'மதீனாவில் வாழும் முஸ்லிம்களும் யூதர்களும் ஏனைய மக்களும் ஒரே தேசத்தவராகக் கருதப்படுவர் என்றும் ஒவ்வொருவரும் தத்தம் சமயங்களைப் பின்பற்றுகின்ற முழுச் சுதந்திரம் உடையவர்கள் என்றும் யூதர்களுடனோ அல்லது முஸ்லிம்களுடனோ வெளியார்கள் எவரும் போர் தொடுக்க முனைந்தால் எதிரியை எதிர்ப்பதில் ஒருவருக்கொருவர் உதவ வேண்டுமென்றும் மதீனாவைப் பாதுகாப்பதில் சகலரும் சமமாகப் பங்குகொள்ள வேண்டுமென்றும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் யூதர்களின் உரிமையைப் பாதுகாப்பதும் அவர்கட்கு பாதுகாப்பளிப்பதும் முஸ்லிம்களின் கடமையாகுமென்றும் அத்துடன் யூதர்களுடன் நேசமாக இருப்போரின் உரிமைகளையும் முஸ்லிம்கள் பாதுகாப்பர்' என்றும் 'மதீனா சாசனம்' என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுகின்ற புகழ்பெற்ற மதீனா ஒப்பந்தத்தை யூதக் குழுக்களுடன் நபி (ஸல்) அவர்கள் செய்து கொண்டார்கள்.

இதேபோன்றுதான், தனது நேரடி எதிரியான மக்காவில் 13 வருடங்கள் துன்பங்களைச் செய்து, பிறந்த மண்ணில் இருந்து நபியவர்களை விரட்டிய குறைஷிகளுடனும் ஹிஜ்ரி 6ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

இந்த ஒப்பந்தம் எழுதப்பட்டபோது முஸ்லிம்கள் விரும்பாத எத்தனையோ நிகழ்வுகள் நிகழ்ந்தபோதும் ஒப்பந்தம் எழுதப் படுவதில் நபியவர்கள் மிகுந்த பொறுமையுடன் செயற்பட்டார்கள். ஒப்பந்த ஆரம்பப்பகுதி 'இது அல்லாஹ்வின் தூதர் முஹம்மதுக் கும் குறைஷித் தலைவர்களுக்குமிடையிலான ஒப்பந்தம்' என்று எழுத ஆரம்பித்தபோதே அல்லாஹ்வின் தூதர் என்ற வார்த்தையை நீக்குமாறு குறைஷிகள் வேண்டினர். முஸ்லிம்கள் கொதிப் படைந்தனர். நபிகளார் அவர்களோ தமது கையால் அந்த வார்த்தையை நீக்கிவிட்டு அவ்விடத்தில் 'அப்துல்லாஹ்வின் மகன்' என எழுதுமாறு பணித்தார்கள்.

இந்த ஒப்பந்தத்தின் ஒரு சரத்தாவது, 'மதீனாவைச் சேர்ந்த முஸ்லிம்களில் ஒருவர் விரும்பினால் மக்காக் குறைஷிகளுடன் இணைந்து கொள்ளலாம். ஆனால் மக்காவைச்சேர்ந்த ஒருவர் அங்கிருந்து வெளியேறி மதீனாவுடன் இணைந்துகொள்ள முடியாது.' என்பதாகும். ஒப்பந்தம் எழுதப்பட்டு கைச்சாத்தாக முன் அபூஜன்தல் என்ற மக்காக் குறைஷி ஒருவர் இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம்களுடன் இணைய வரவே குறைஷிகள் அதனை ஆட்சேபித்தனர். அவர் அழுது மன்றாடினார். "தன்னைக் குறைஷிகளிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டாம்" என வேண்டினார். எனினும் அம்மனிதருக்கு ஆறுதல் கூறி ஒப்பந்தத்தை நபியவர்கள் மதித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போல் அபூபஸீர் என்பவர், மக்காவாசிகளின் துன்பம் தாங்கமுடியாமல் மதீனா வந்து சேர்ந்தார். அவரைத் திருப்பி அனுப்புமாறு குறைஷிகள் தூதனுப்ப, அந்நபரை அத்தூதரிடமே ஒப்படைத்தார்கள். இவ்வாறு அந்நிய சமயத்தவர்களுடன் ஒப்பந்தங்கள் செய்து அதன் மூலம் அவர்களது சமயத்தையும் இருப்பையும் முஸ்லிம்கள் ஏற்றுள்ளனர்.

பிறசமயத்தவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு நடுநிலையான முடிவுக்கு வருமாறு அல்-குர்ஆன் வேண்டுகோள் விடுக்கிறது.

قُلْ يَـٰٓأَهْلَ ٱلْكِتَـٰبِ تَعَالَوْا۟ إِلَىٰ كَلِمَةٍ سَوَآءٍۭ بَيْنَنَا وَبَيْنَكُمْ

*நபியே! நீர் கூறுவீராக, வேதத்தையுடைய மக்களே, எங்களுக்கும் உங்களுக்குமிடையே பொதுவான இணக்கப்பாட்டின் பக்கம் வாருங்கள்...*

(அல்-குர்ஆன் 3:64)

இவ்வாறு அல்-குர்ஆன் பேச்சுவார்த்தை விட்டுக்கொடுப்பு ஒப்பந்தம் என்பவற்றை வரவேற்று நிற்பதை இதன் மூலம் காணலாம்.

## ஒப்பந்தங்கள் மதிக்கப்படல்

இவ்வாறு செய்யப்படுகின்ற ஒப்பந்தங்கள் ஒப்பந்தம் செய்தோரால் உறுதியாகப் பின்பற்றப்பட வேண்டுமென்றும் அல்-குர்ஆன் கட்டளை பிறப்பிக்கிறது. ஒப்பந்தம் செய்துவிட்டு செய்தவர்களே அதற்கு மாற்றமாக நடத்தல், மீறல் போன்றவற்றை இஸ்லாம் கண்டிக்கிறது.

இதோ குர்ஆன் வசனத்தைக் கவனியுங்கள்;

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ أَوْفُوا۟ بِٱلْعُقُودِ

*விசுவாசிகளே! நீங்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றுங்கள்.*

(அல்-குர்ஆன் 5:1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

وَأَوْفُوا۟ بِٱلْعَهْدِ ۖ إِنَّ ٱلْعَهْدَ كَانَ مَسْـُٔولًا

*உடன்படிக்கைகளை பரிபூரணமாக நிறைவேற்றுங்கள், நிச்சயமாக உடன்படிக்கைகள் மறுமையில் விசாரிக்கப்படக் கூடியதாக இருக்கின்றது.* (அல்-குர்ஆன் 17:34)

وَأَوْفُوا۟ بِعَهْدِ ٱللَّهِ إِذَا عَـٰهَدتُّمْ وَلَا تَنقُضُوا۟ ٱلْأَيْمَـٰنَ بَعْدَ تَوْكِيدِهَا

*நீங்கள் உங்களுக்கு மத்தியில் உடன்படிக்கை செய்துகொண்டால் அல்லாஹ்வின் அந்த உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். சத்தியங்களை அவற்றை உறுதிப்படுத்திய பின்னர் துண்டித்து விடாதீர்கள்.* (அல்-குர்ஆன் 16:91)

மேற்கண்டவாறு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டால் அதனை பற்றுறுதியுடன் ஏற்றுச் செயற்படுவது கடமை என்பதை அல்-குர்ஆன் வலியுறுத்துகிறது.

இவ்வாறு தம்மோடு ஒப்பந்தம் செய்து வாழ்ந்துவரும் அந்நிய சமயத்தினரை முஸ்லிம்கள் சகோதரர்களாகவே மதித்து வாழ்ந்து வருகின்றமை வரலாற்றுண்மையாகும். ஆபத்து வரும்போது அவர்கட்கு உதவுவதிலும் முஸ்லிம்கள் பெரும் அக்கறை காட்டியுள்ளனர்.

சிரியாவுக்கு எதிராகப் படையெடுத்த தாத்தாரியர்கள் அங்கிருந்த மக்களில் அதிகமானோரைச் சிறைப்பிடித்தனர். அவர்களில் முஸ்லிம்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் என பல்வேறு சமயத்தவர்களும் உள்ளடங்கியிருந்தனர். இவ்வேளை இமாம் இப்னு தைமியா அவர்கள் தாத்தாரியத் தளபதியான கத்லூஷாஹ் என்பவரிடம் போய் கைதிகளை விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அவர் முஸ்லிம்களை மட்டும் விடுதலை செய்வதாக ஏற்றுக் கொண்டார். எனினும் இமாம் அவர்கள் விடவில்லை. கைதியாகப் பிடித்து வைத்துள்ள யூத, கிறிஸ்தவ சகோதரர் களையும் விடுதலை செய்யவேண்டுமென வலியுறுத்தினார். எம்மோடு வாழும் மக்களை கைதியாக விட்டுவிட்டு நாம் மட்டும் விடுதலை பெற்றுச் செல்ல மாட்டோம் என விடாப்பிடியாக நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் கத்லூஷாஹ் பணிந்து சகல கைதிகளையும் விடுதலை செய்தார்.

இவ்வாறு முஸ்லிம்களுடன் இணைந்து வாழும் முஸ்லிம் அல்லாத மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இஸ்லாமியனுக்கு உள்ளது. முந்தைய கலீபாக்கள் இவ்விடயத்தில் மிகவும் கவனமாகச் செயற்பட்டுள்ளனர்.

முஸ்லிம்களுடன் ஒப்பந்தம் செய்து அவர்களுடன் வாழும் அந்நியமத மக்களுக்கு பூரண மதச் சுதந்திரத்தை இஸ்லாம் வழங்குகிறது. அவர்களது மதத்தை விட்டுவிட்டு இஸ்லாத்தில் நுழையுமாறு ஒருபோதும் அவர்கள் கேட்கப்படமாட்டார்கள். "இஸ்லாத்தில் பலவந்தம் கிடையாது" என்பது அல்-குர்ஆனின் கட்டளையாகும்.

மேலும், அவர்கள் தங்களது மத அடையாளங்களைப் பேணி வருவதற்கும், சமய நடைமுறைகளைப் பேணி வாழ்வதற்குமான அனுமதி வழங்கப்படுவதுபோல் அவர்களது உயிர்கள், சொத்துக்கள், மானங்கள் என்பனவற்றுக்கும் பூரண பாதுகாப்பு தரப்படுகிறது. இவ்விடயத்தில் ஒரு முஸ்லிம் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளையும் முஸ்லிம் அல்லாதவர் பெறுவார்.

கலீபா அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். "இஸ்லாமிய அரசுக்கு அவர்கள் வரி செலுத்துவது அவர்களின் சொத்துக்கள் எங்களின் சொத்துக்கள் போன்றும் அவர்களின் உயிர்கள் எங்களின் உயிர்கள் போன்றும் கவனிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே" என்றார்கள். அவர்களது ஆட்சியின்போது ஒரு முஸ்லிம் முஸ்லிமல்லாத 'திம்மி' ஒருவரைக் கொன்றபோது, அந்த முஸ்லிம் கைது செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டார்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்;
''முஸ்லிம்களின் ஆட்சியின் கீழுள்ள முஸ்லிமல்லாத (திம்மி) ஒருவரை யாராவது கொன்றால் அவர் சுவனத்தின் வாடையை அனுபவிக்கமாட்டார். அல்லாஹ் அவருக்கு சுவனத்தை தடுத்துவிடுவான்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறசமயங்களுடன் இணக்கமாக

இஸ்லாம் ஏனைய சமயங்களைப் பின்பற்றும் மக்களின் உரிமைகளை மதிப்பதுபோல் அவர்களின் சமயத்துடனும் இணக்கமாக நடந்துகொள்ள வேண்டுமென்ற நிலைப்பாட்டை உடையது. பிறதெய்வங்களை நிந்தனை செய்யும் விடயத்தையிட்டு அல்-குர்ஆன் பின்வருமாறு கட்டளையிடுகிறது.

وَلَا تَسُبُّوا۟ ٱلَّذِينَ يَدْعُونَ مِن دُونِ ٱللَّهِ فَيَسُبُّوا۟ ٱللَّهَ عَدْوًۢا بِغَيْرِ عِلْمٍ

*அல்லாஹ் அல்லாமல் அவர்கள் வணங்கிக்கொண்டிருப்போரை நீங்கள் ஏசவேண்டாம். ஏனெனில், அவர்கள் அறிவின்றி விரோதத்தால் அல்லாஹ்வைத் திட்டுவார்கள்.* (அல்-குர்ஆன் 6:108)

மேற்காணும் வசனம் பிறரின் தெய்வங்களை முஸ்லிம்கள் நிந்திக்கக் கூடாது என்பதை வலியுறுத்துகிறது. ஏனெனில், நீங்கள் அவர்களது தெய்வங்களை ஏசும்போது அவர்கள் உங்கள் இறைவனை ஏசுவார்கள். இதனால் வீண் பகைமை ஏற்பட்டு மனித குலத்திற்கு அமைதியின்மை ஏற்படும் என்பதனாலேயே இஸ்லாம் இதனைத் தடைசெய்துள்ளது.

மேலும், பிறசமயங்களுடன் வீண் தர்க்கங்களை புரிய வேண்டாம் என்றும் முஸ்லிம்களை அல்-குர்ஆன் பணிக்கிறது.

وَلَا تُجَـٰدِلُوٓا۟ أَهْلَ ٱلْكِتَـٰبِ إِلَّا بِٱلَّتِى هِىَ أَحْسَنُ

*நீங்கள் வேதத்தையுடையோர்களுடன் எது மிக அழகானதோ அதைக்கொண்டேயல்லாது தர்க்கிக்க வேண்டாம்.*

(அல்-குர்ஆன் 29:46)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வேதத்தையுடையோர்களென அல்-குர்ஆன் குறிப்பிடுவது யூத, கிறிஸ்தவர்களையாகும். அன்று அரேபியாவில் இந்த இரண்டு சமயங்களுமே முக்கிய சமயங்களாகத் திகழ்ந்தன. இவர்களோடு முஸ்லிம்கள் வீண் விவாதங்களைப் புரிந்து அதன் மூலம் சமயப் பிரச்சினைகள் உருவாவதை இஸ்லாம் விரும்பவில்லை. எனவேதான் வீண் தர்க்கத்தைத் தவிர்த்து அர்த்தபுஷ்டியான ஆரோக்கியமான விவாதத்தை அது ஏற்றுக்கொள்கிறது. அவ் விவாதங்கள் வீண் பிரச்சினைகளை உருவாக்கி சமயங்களுக் கிடையிலான புரிந்துணர்வைச் சிதைப்பதை அது முற்றாக நிராகரிக்கிறது.

நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த மதீனாவில் யூதர்கள் ஒரு பிரதான சிறுபான்மையினராக இருந்ததால் அவர்களோடு கொடுக்கல், வாங்கல் போன்ற தொடர்புகளை வைத்திருந்தார்கள். அவர்களை மதித்து நடக்குமாறும் தோழர்களை வேண்டினார்கள். சமய வேறுபாடின்றி எவர் மரணமானாலும் அவரது பிரேதம் (ஜனாஸா) எடுத்துச் செல்லப்படும்போது எழுந்து நிற்க வேண்டுமென்று பணித்தார்கள்.

ஆமிர் பின் றபீஆ, அறிவிக்கிறார்,
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''ஒரு ஜனாஸா (பிரேதம்) எடுத்துவருவதைக் கண்டால் அது உங்களைக் கடந்து செல்லும்வரை எழுந்து நில்லுங்கள்'' (புகாரி)

ஒரு நாள் நபி தூதர் அவர்கள் இருக்கும்போது ஒரு பிரேதம் எடுத்துச் செல்லப்படுவதைக் கண்டதும் எழுந்து நின்றார்கள். அப்போது அது ஒரு யூதனின் பிரேதம்தானே என்று கூறப்பட்டதும் ''அது ஓர் உயர்வான ஆத்மா இல்லையா'' என்று நபியவர்கள் திருப்பிக்கேட்டார்கள் (புகாரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமர் அளித்த உத்தரவாதம்

உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் அவர்கள் ஜெரூஸலத்துக்கு வந்து அங்கு வாழ்ந்த கிறிஸ்தவ மக்களுக்கு பின்வருமாறு ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தார்கள்.

"அல்லாஹ்வின் அடியானான அமீருல் மு.்.மினீன் உமர், ஜெரூஸல மக்களின் உயிர்களுக்கும் அவர்களின் சொத்துக்களுக்கும் அவர்களின் தேவாலயங்களுக்கும், சிலுவைகளுக்கும் அவர்களின் நோயாளர்களுக்கும் சுகதேகிகளுக்கும் சகல மக்களுக்கும் பாதுகாப்பளிக்கின்றார். அவர்களின் தேவாலயங்களில் எவரும் குடியேற்றப்படமாட்டார்கள். அது உடைக்கப்படவோ அல்லது இழிவாக்கப்படவோமாட்டாது. அதன் சுவர்களோ சிலுவைகளோ அவர்களின் சொத்துக்களில் சிறுபகுதியோ அபகரிக்கப்பட மாட்டாது. அவர்களின் மார்க்கத்தை விட்டுவிடுமாறு நிர்ப்பந்திக்கப் படவோ அவர்களில் ஒருவருக்காவது தீங்கிழைக்கப்படவோ மாட்டாது. ஜெரூஸலத்தில் யூதர்கள் எவரும் குடியேற்றப்படவும் மாட்டார்கள்".

இவ்வாறு ஜெரூஸலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவ மக்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதத்தை கலீபா உமர் அவர்கள் எழுதிக் கொடுத்தார்கள்.

## உமர் பின் அப்துல் அஸீஸ்

உமையா கலீபாக்களில் ஒருவரான உமர் பின் அப்துல் அஸீஸ் நீதி, நியாயத்துக்குப் புகழ்பெற்றவர். 'இரண்டாம் உமர்' என அழைக்கப்படுபவர். அவர்களிடம் சில கிறிஸ்தவப் பிரமுகர்கள் வந்து முன்பு ஆட்சித்தலைவராக இருந்த வலீத் பின் அப்துல் மலிக் அவர்கள் தங்களது தேவாலயப்பூமியை எடுத்து அதனை மஸ்ஜித் வளவினுள் சேர்த்துள்ளார் என முறையிட்டனர். உடனே கலீபா அவர்கள் ஏற்றுக்கொள்ளும் நஷ்டயீட்டுத் தொகையை வழங்குமாறும் அதனை ஏற்காவிட்டால் தேவாலயப் பூமியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பிக் கொடுக்குமாறும் தமது கவர்னருக்கு கட்டளை பிறப்பித்தார்கள்.

கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்களின் ஆட்சியின் போது முஸ்லிம்கள் மத்தியில் வாழ்ந்துகொண்டிருந்த முஸ்லிம் அல்லாத மக்களின் சில நடத்தைகள் திருப்தி தருவதாக இருக்கவில்லை. இவர்களின் நடத்தைகள் முஸ்லிம்களின் கலாசாரச் சீரழிவுக்கு வழிவகுத்துவிடுமோ எனவும் அவர் பயந்தார். எனவே, இது தொடர்பாக அக்காலத்தில் மார்க்க மேதையாக மதிக்கப்பட்ட இமாம் ஹஸனுல் பஸரீ (ரஹ்) அவர்களிடம் மார்க்க விளக்கம் கோரி எழுதினார்கள். "முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் வாழும் முஸ்லிமல்லாதவர்கள் மதுபானம் அருந்துதல், பன்றி இறைச்சியை உண்ணல், திருமணம் முடிக்க முடியாத உறவு முறையுள்ளவர்களைத் திருமணம் செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இவ்விடயத்தில் நேர்வழி பெற்ற முந்தைய கலீபாக்கள் எந்த வகையில் நடந்து கொண்டனர்?" இவ்வாறு கலீபாவின் கடிதம் கிடைத்ததும், அதற்கு அறிஞர் ஹஸனுல் பஸரீ அவர்கள் "அம்மக்கள் தலைவரியை (ஜிஸ்யா) அரசுக்குச் செலுத்துவது அவர்களினதும் அவர்களின் நம்பிக்கைகளிலும் அரசு தலையிடாமல் இருப்பதற்காகவே! எனவே நீர் முன்பிருந்த ஆட்சியாளரைப் பின்பற்றி நடக்கவேண்டுமே தவிர புதிதாக எதையும் உண்டாக்கக் கூடாது" என எழுதினார்கள்.

இஸ்லாத்துக்கு முற்றிலும் மாற்றமான இச்செயற்பாடுகளை முஸ்லிம்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்த அந்நிய மதத்தவர் கள் மேற்கொள்ள அதனை இஸ்லாமிய அரசு அனுமதித்துப் பார்த்துக்கொண்டிருந்ததென்றால் இஸ்லாமிய ஆட்சியில் சிறுபான்மையினர் எந்தளவு உரிமை பெற்று வாழ்ந்தார்கள் என்பது தெளிவாகின்றதல்லவா?

அபீசீனியா நாட்டின் கிறிஸ்தவர்களின் தூது கோஷ்டியொன்று மதீனா வந்தபோது அவர்களை நபியவர்கள் மஸ்ஜிதுந் நபவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்று உபசரித்ததுடன் அவர்கட்கு உணவு பரிமாறுவதில், பணி செய்வதில் அவர்களே முன்னின்று செயற்பட்டார்கள். "அவர்கள் எனது தோழர்களை முன்பு கௌரவித்தவர்கள். எனவேதான் நான் அவர்களை கௌரவிக்க விரும்புகிறேன்" எனக் கூறிச் செயற்பட்டார்கள். (மக்காவில் இஸ்லாத்தையேற்ற தோழர்கட்கு குறைஷிகளின் துன்பம் கடுமையானபோது அவர்களை நபியவர்கள் அபீசீனியாவுக்கு அனுப்பியதும் அந்நாட்டு கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த மன்னர் நஜ்ஜாசி அவர்களை அன்பொழுக வரவேற்று உபசரித்ததும் பாதுகாத்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. அந்த நன்றியுணர்வையே இங்கு நபியவர்கள் வெளிப்படுத்தினார்கள்)

கலீபா உமர் (ரலி) அவர்கள் தமது ஆட்சியின்போது கண் பார்வையற்ற வயோதிபர் ஒருவர் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். கலீபா அம்மனிதரிடம் சென்று அவரது கையைப்பிடித்து, "நீர் எந்த வேதத்தைப் பின்பற்றுபவர்" எனக் கேட்க, "தான் ஒரு யூதன்" என அவர் கூறினார். உடனே கலீபா அவரது கையைப்பிடித்துக் கொண்டு தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றார். தனது வீட்டில் இருந்து சில உதவிகளை அவருக்குக் கொடுத்துவிட்டு, திறைசேரி (பைத்துல்மால்)யின் பொறுப்பாளரிடம் இவரை அனுப்பி, "இவரையும் இவர் போன்றோரையும் நீ பார். நாங்கள் இவர்கட்கு நீதி வழங்கத் தவறிவிட்டோம். அவர்களின் வாலிபக் காலத்தில் அவர்களிடம் வரி அறவிடுகிறோம். அவர்கள் முதுமை அடைந்துவிட்டால் கவனிக்காமல் வீணே விட்டு விடுகின்றோம். எனவே இவரினதும் இவர் போன்றோரினதும் வரியை அகற்றிவிடு" என எழுதிவிட்டு பின்னர், இவர் போன்றோருக்கு பொதுநிதியிலிருந்து உபகாரச் சம்பள முறையொன்றை உருவாக்கினார்கள். இதே கலீபா உமர் அவர்கள் சிரியாவில் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த குஷ்டரோகிகளுக்கு ஸதகாப் பணத்திலிருந்து தர்மப் பணம் வழங்குமாறும் அவர்கட்கு உணவு வழங்குமாறும் உத்தரவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல்லா பின் அம்றுப்னு ஆஸ் (ரலி) அவர்கள் உழ்ஹிய்யா வுக்கு ஆடொன்றை அறுத்தபோது தனது பணியாளரிடம் "எமது பக்கத்துவீட்டு யூதரை மறந்து விடாதீர்கள்" என மூன்றுமுறை கூறினார்கள். அப்போது அப்பணியாள் "ஒருமுறை செல்லிவிட்டீர்கள் தானே! ஏன் பலமுறை சொல்லவேண்டும்" எனக் கேட்க அதற்கு இப்னு அம்று அவர்கள், "நபி (ஸல்) அவர்கள் பக்கத்து வீட்டுக்காரனைப் பற்றி எனக்கு அதிகம் உபதேசித்துள்ளார்கள் அவன் எமது சொத்துக்கும் பங்காளியாகி விடுவானோ என எண்ணும் அளவுக்கு அவனது முக்கியத்து வத்தைக் கூறினார்கள்" என்றார்கள். (திர்மிதி)

## யூதனைப் பாதுகாத்து அல்-குர்ஆன் அருளப்படல்

மதீனாவைச் சேர்ந்த து'.மா பின் உபைரிக் என்பவர் அவரது அயல் வீட்டைச்சேர்ந்த கதாதாபின் நு'.மான் என்பவரின் கவசம் ஒன்றைத் திருடி விட்டார். அக்கவசம் மா வைக்கப்பட்டிருந்த ஒரு பையில் இருந்ததால் இவர் அதனைத் திருடிக் கொண்டு சென்றபோது அப்பையின் ஓட்டையால் மாவு கீழே விழ ஆரம்பித்தது. அவர் வீடுவரை மாவுகொட்டிக் கொண்டு போயிருந்ததை கதாதாவின் கவசத்தைத் தேடியவர்களால் அடையாளம் காணமுடிந்தது. புத்தியாக து'.மா தான் களவெடுத்த கவசத்தை ஸெய்த் என்ற பெயருடைய யூதனிடம் மறைத்து வைத்தார். களவு கொடுத்த கதாதாவின் ஆட்கள் து'.மாவிடம் கவசத்தைத் தேடியபோது, "தான் அதை எடுக்கவில்லை. தனக்கு அதுபற்றி எதுவும் தெரியாது" என மறுத்துவிட்டார். எனினும் களவு கொடுத்தவர்கள் நம்ப மறுத்தனர். இவர் வீடுவரைக்கும் மாவின் அடையாளம் இருந்ததை அவர்கள் வலியுறுத்தினர். எனினும் து'.மா தொடர்ந்து சத்தியம் பண்ணியதால் இவரைவிட்டு விட்டு கவசத்தை மீண்டும் தேட ஆரம்பித்தனர். மீண்டும் மாவின் அடையாளத்தைத் தொடர்ந்தபோது அது ஸெய்த் என்ற யூதனின் வீட்டை அடைந்தது. அங்கே சென்று அவனைப் பிடித்து விசாரிக்கவே தன்னிடம் இருப்பதை ஏற்றுக்கொண்டதுடன், து'.மாதான் அதைக் கொண்டு தந்ததாகக் கூறினான். எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஃமாவின் ஆட்கள் அதனை மறுத்து களவெடுத்தது யூதன்தான் என்றுகூறி விடயத்தை நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டனர். களவெடுத்த யூதன் பொய் கூறி மதீனாவாசியை மாட்டிவிடுவதாக வும் அவர்கள் முறையிட்டனர். களவு போன பொருள் எவரிடம் இருந்ததோ அவருக்கே தண்டனை வழங்க வேண்டுமென நபி (ஸல்) அவர்கள் ஆலோசனை செய்தார்கள். அன்சாரீன்கள் கூறிய கருத்துக்களை அவர்கள் நம்பினார்கள். இவ்வேளையில்தான் அல்-குர்ஆனின் பின்வரும் வசனங்கள் அல்லாஹ்வால் அருளப்பட்டு யூதன் நிரபராதி என நிருபித்தது.

إِنَّآ أَنزَلْنَآ إِلَيْكَ ٱلْكِتَٰبَ بِٱلْحَقِّ لِتَحْكُمَ بَيْنَ ٱلنَّاسِ بِمَآ أَرَىٰكَ ٱللَّهُ ۚ وَلَا
تَكُن لِّلْخَآئِنِينَ خَصِيمًا ﴿١٠٥﴾ وَٱسْتَغْفِرِ ٱللَّهَ ۖ إِنَّ ٱللَّهَ كَانَ غَفُورًا رَّحِيمًا
﴿١٠٦﴾ وَلَا تُجَٰدِلْ عَنِ ٱلَّذِينَ يَخْتَانُونَ أَنفُسَهُمْ ۚ إِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ مَن
كَانَ خَوَّانًا أَثِيمًا ﴿١٠٧﴾ يَسْتَخْفُونَ مِنَ ٱلنَّاسِ وَلَا يَسْتَخْفُونَ مِنَ ٱللَّهِ
وَهُوَ مَعَهُمْ إِذْ يُبَيِّتُونَ مَا لَا يَرْضَىٰ مِنَ ٱلْقَوْلِ ۚ وَكَانَ ٱللَّهُ بِمَا يَعْمَلُونَ
مُحِيطًا ﴿١٠٨﴾ هَٰٓأَنتُمْ هَٰٓؤُلَآءِ جَٰدَلْتُمْ عَنْهُمْ فِى ٱلْحَيَوٰةِ ٱلدُّنْيَا
فَمَن يُجَٰدِلُ ٱللَّهَ عَنْهُمْ يَوْمَ ٱلْقِيَٰمَةِ أَم مَّن يَكُونُ عَلَيْهِمْ وَكِيلًا ﴿١٠٩﴾

*அல்லாஹ் உமக்கு அறிவித்ததைக் கொண்டு மனிதர்களுக்கிடையில் நீர் தீர்ப்பளிப்பதற்காக நிச்சயமாக நாம் முற்றிலும் உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை உம்மீது இறக்கி வைத்திருக்கின்றோம். மேலும் சதிகாரர்கட்கு வாதாடுபவராக நீர் ஆகிவிடவேண்டாம். இன்னும் நீர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுவீராக! நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக கிருபையுடைய வானக இருக்கின்றான்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபியே! (பிறருக்கு தீங்கிழைத்து) தமக்குத்தாமே மோசடி செய்து கொண்டார்களே அத்தகையவர்களுக்காக நீர் வாதாட வேண்டாம். கொடிய பாவியான மிகமோசக்காரனாக இருக்கின்ற வரை அல்லாஹ் நேசிக்கவே மாட்டான்.

இவர்கள் தங்கள் மோசடிகளை மனிதர்களிடமிருந்து மறைக்கின்றார்கள். அவர்கள் அதனை அல்லாஹ்விடம் மறைக்க முடியாது. ஏனெனில் இவர்கள் இரவெல்லாம் ஆலோசனை செய்கின்றபோது அவர் அவர்களுடன்தான் இருக்கின்றான். அவர்கள் செய்து கொண்டிருப்பவற்றை சூழ்ந்து கொண்டவனாக இருக்கின்றான்.

நீங்கள்தானே அவர்கள் அவர்களுக்காக உலக வாழ்வில் வாதாடுகிறீர்கள். கியாமத்து நாளில் அவர்களுக்காக அல்லாஹ்விடம் வாதாடுபவர் யார்? அல்லது எவர் இவர்களுக்காக பொறுப்பேற்பவராக இருப்பார்? (அல்-குர்ஆன் 4:105-109)

அநியாயமான முறையில் ஒரு யூதன் தண்டனைக்குள்ளாகக் கூடாது என்பதில் இஸ்லாம் எவ்வளவு கரிசனை காட்டியுள்ளது என்பதை இந்த வசனங்களை வாசிப்பவர்கள் விளங்கிக் கொள்ளமுடியும். பொய்யான முறையில் குற்றம் சாட்டப்படுபவர் களையிட்டு அல்லாஹ்வின் எச்சரிக்கை எவ்வாறு அமைகின்றது என்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டும். எனவே, இஸ்லாம் ஒருவர் முஸ்லிம் என்பதற்காக அவர் செய்யும் குற்றங்களை யெல்லாம் சாதாரணமானது என்று விட்டுவிடாது. அந்நியர் செய்யும் சாதாரண குற்றங்களை சீரியஸாக அது நோக்காது, நீதி, நியாயத்தின் அடிப்படையில் மனித நேயத்தைப் பேணியே இஸ்லாத்தின் அனைத்து செயற்பாடுகளும் அமையும்.

பிற சமயத்தவருடன் புரிந்துணர்வுடன் அவர்களின் உரிமையைப் பேணி வாழ்வதையே இஸ்லாம் வேண்டி நிற்கிறது. இணைவைத்து வணங்குவதைக் கொடிய குற்றமாகக் கருதும் இஸ்லாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறான ஒருவர்கூட முஸ்லிம்களிடம் அபயம்தேடி வந்தால் அவருக்குப் பாதுகாப்பு வழங்குவது கடமையென்பதைப் பின்வருமாறு வலியுறுத்துகிறது.

وَإِنْ أَحَدٌ مِّنَ ٱلْمُشْرِكِينَ ٱسْتَجَارَكَ فَأَجِرْهُ حَتَّىٰ يَسْمَعَ كَلَـٰمَ ٱللَّهِ ثُمَّ
أَبْلِغْهُ مَأْمَنَهُۥ ۚ ذَٰلِكَ بِأَنَّهُمْ قَوْمٌ لَّا يَعْلَمُونَ

*(நபியே!) இணை வைத்துக் கொண்டிருப்போரில் எவரொருவர் உம்மிடம் அபயம் தேடினால் அல்லாஹ்வின் வசனங்களை அவர் செவியேற்கும் வரையில் அவருக்கு அபயமளிப்பீராக! பின்னர் அவருக்கு அபயமளிக்கும் வேறு இடத்தில் அவரைச் சேர்த்து வைப்பீராக! நிச்சயமாக அவர்கள் அறியாத சமூகத்தினர்.*

(அல்-குர்ஆன் 9:6)

இவ்வாறு இஸ்லாம் பிறசமயத்தவர்களுடன் புரிந்துணர்வுடன் நடந்துகொள்வதை வேண்டி நிற்கிறது. வேதத்தையுடைய யூத - கிறிஸ்தவர்களின் உணவை உண்ணவும் அவர்கள் அறுத்த இறைச்சியை புசிக்கவும், அவர்களின் பெண்களைத் திருமணம் செய்யவும் முஸ்லிம்களுக்கு இஸ்லாம் அனுமதியளிக்கிறது.

*"இன்று முதல் பரிசுத்தமானவைகளே உங்களுக்கு ஆகுமாக்கப் பட்டுள்ளன. வேதத்தையுடைவர்களின் உணவு உங்களுக்கு ஆகுமானதே! உங்களுடைய உணவும் அவர்களுக்கு ஆகுமானதே! விசுவாசங்கொண்ட கற்புடைய பெண்களையும் உங்களுக்கு முன் வேதங்கொடுக்கப்பட்ட கற்புடைய பெண்களையும் விபசாரி களாகவோ வைப்பாட்டிகளாகவோ கொள்ளாமல் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மஹர்களையும் கொடுத்து திருமணம் செய்துகொள்வது உங்களுக்கு ஆகும். எவன் விசுவாசம் கொண்டபின் (இவற்றை) நிராகரிக்கின்றானோ அவனது செயல் நிச்சயமாக அழிந்து விடும். மறுமையில் அவன் நஷ்டமடைந்தவன்"*

(அல்-குர்ஆன் 5:5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாய மதமாற்றம் இஸ்லாம் ஏற்காது

ஒரு சமயத்தைப் பின்பற்றுவோரை ஆசைகாட்டி, பணத்தை, பொருளை அல்லது வாளைக்காட்டி இஸ்லாத்துள் இணைக்க வேண்டிய தேவை இஸ்லாத்துக்குக் கிடையாது. அது அவ்வாறு ஒருபோதும் செய்ததில்லை. நபி (ஸல்) அவர்களின் வீட்டில்கூட முஸ்லிம் அல்லாதவர்கள் பணியாளர்களாக இருந்துள்ளனர். அவர்களைக்கூட இஸ்லாத்துள் நுழையுமாறு அவர்கள் வற்புறுத்த வில்லை.

மதீனாவைச் சேர்ந்த பனூசாலிம் கிளையைச் சேர்ந்த அல்-ஹுஸைனி என்பவரின் இரு புதல்வர்கள் நபியவர்கட்கு நபித்துவம் அருளப்பட முன்பே கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியிருந்தனர். நபியவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் வந்து வாழ்ந்து கொண்டிருக் கையில் இந்த இருவரும் ஒரு தேவைக்காக மதீனா வந்தனர். தனது இரு புதல்வர்களும் மதீனா வந்ததை அறிந்த அவர்களது தந்தை, அவ்விருவரையும் அழைத்து அவர்களை இஸ்லாத்தில் இணையுமாறு வற்புறுத்தினார். இஸ்லாத்தை ஏற்காதவரை மதீனாவை விட்டுச்செல்ல அனுமதிக்கமாட்டேன் என ஒரே பிடியாக நின்றார். தமது தந்தையின் இச்செயலை அவ்விரு வாலிபர்களும் நபியவர்களிடம் முறையிட்டனர். அப்போது அத்தந்தை நபி தூதர் அவர்களிடம் "எனது பிள்ளைகள் நாளை நரகம் சென்றடைவதை நான் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா" எனக்கேட்டார். இவ்வேளையில்தான் பின்வருமாறு அல்-குர்ஆன் வசனம் இறங்கியது.

لَآ إِكْرَاهَ فِى ٱلدِّينِ ۖ قَد تَّبَيَّنَ ٱلرُّشْدُ مِنَ ٱلْغَىِّ

*இஸ்லாத்தில் பலவந்தம் கிடையாது. வழிகேட்டிலிருந்து நேர்வழி திட்டமாகத் தெளிவாகிவிட்டது...* (அல்-குர்ஆன் 2:256)

இவ்வசனத்துக்கு இமாம் இப்னு கதீர் தமது அல்-குர்ஆன் விரிவுரை நூலில் பின்வருமாறு விளக்கம் எழுதுகிறார். "நீங்கள் எவரும் இஸ்லாத்தில் நுழையுமாறு எவரையும் வற்புறுத்தவேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏனெனில்** அது மிகவும் தெளிவான மார்க்கம். அதன் ஆதாரங்கள் அத்தாட்சிகள் மிகவும் பிரகாசமானவை. எனவே, அதனுள் நுழையுமாறு நிர்ப்பந்திக்க வேண்டிய தேவை கிடையாது. எவருக்கு அல்லாஹ் நேர்வழியை நாடுகிறானோ அவர் அதில் நுழைந்துவிடலாம்..." எனக் கூறுகிறார்.

ஒவ்வொருவரும் தமது சமயங்களைப் பிரச்சாரம் செய்யலாம். தேர்வு செய்யவேண்டிய சுதந்திரம் மனிதனுக்குள்ளது. பாசமிகு தந்தை ஒருவருக்கே தன் பிள்ளைகள்மீது கொண்டபற்றின் காரணமாக அவர்களை நிர்ப்பந்திக்க இஸ்லாம் அனுமதிக்க வில்லை என்றால் கட்டாய மதமாற்றத்தை இஸ்லாம் எவ்வளவு தூரம் வெறுக்கின்றது என்பது இதன் மூலம் தெளிவாகின்ற தல்லவா?

எனவேதான் சமயங்களைத் தெரிவு செய்கின்ற சுதந்திரத்தை மனிதனுக்கு இஸ்லாம் வழங்குகிறது. அல்லாஹ் குர்ஆனிலே கூறுகின்றான்.

وَقُلِ ٱلْحَقُّ مِن رَّبِّكُمْ ۖ فَمَن شَآءَ فَلْيُؤْمِن وَمَن شَآءَ فَلْيَكْفُرْ

*நபியே நீர் கூறுவீராக! உங்கள் இறைவனிடமிருந்து நான் கொண்டு வந்திருக்கும் இவ்வேதமானது சத்தியமானதாகும். ஆகவே எவர் நாடுகிறாரோ அவர் இதை விசுவாசித்துக் கொள்ளட்டும். எவர் விரும்புகிறாரோ அவர் இதை நிராகரித்து விடட்டும்.*

(அல்-குர்ஆன் 18:29)

இவ்வாறு தெரிவுச் சுதந்திரத்தை இஸ்லாம் வழங்கியிருக்கிறது. எனவேதான் மனிதர்கள் அனைவரும் இஸ்லாத்தில் நுழைய வேண்டுமென்று இஸ்லாம் என்றும் எதிர்பார்த்ததில்லை; கட்டாயப் படுத்தவில்லை. நபி (ஸல்) அவர்கள்கூட ஒரு பிரசாரகராகவே (தாயி) அனுப்பப்பட்டார்கள். எவரையும் நிர்ப்பந்தித்து பலவந்தமாக இணைக்கும் கடும்போக்காளராக அவர்கள் அனுப்பப் படவில்லை. இதனை அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

وَلَوْ شَآءَ رَبُّكَ لَءَامَنَ مَن فِى ٱلْأَرْضِ كُلُّهُمْ جَمِيعًا ۚ أَفَأَنتَ تُكْرِهُ ٱلنَّاسَ حَتَّىٰ يَكُونُوا۟ مُؤْمِنِينَ

*உமதிரட்சகன் நாடியிருந்தால் பூமியிலுள்ள அனைவருமே முற்றிலும் விசுவாசிகளாயிருப்பார்கள். எனவே மனிதர்களை அவர்கள் அனைவருமே விசுவாசியாகிவிட வேண்டுமென்று நீர் நிர்ப்பந்திக்கின்றீரா?* (அல்-குர்ஆன் 10:99)

எனவே, பல சமயங்கள் இறைவனின் நியதியாகும். உலகில் பல மொழிகள், பல நிறத்தவர்கள், பல்லினத்தோர் வாழ்வது போல் பல சமயங்களையும் சேர்ந்தவர்களைக் கொண்ட ஒரு கூட்டமே இவ்வுலகமாகும்.

இதில் சிலர் சிலரை தமது சமயத்துக்குள் எடுப்பதற்கு எடுக்கும் முயற்சி அர்த்தமற்றது. அல்லாஹ்வின் நாட்டம் இதற்கு மிக முக்கியமானதாகும்.

وَمَا كَانَ لِنَفْسٍ أَن تُؤْمِنَ إِلَّا بِإِذْنِ ٱللَّهِ ۚ وَيَجْعَلُ ٱلرِّجْسَ عَلَى ٱلَّذِينَ لَا يَعْقِلُونَ

*எந்த ஆத்மாவும் அல்லாஹ்வின் அனுமதியின்றி விசுவாசம் கொள்வதற்கில்லை. இதை விளங்கிக் கொள்ளாதவர்களின் மீது அல்லாஹ் தண்டனையை ஆக்குகிறான்.* (அல்-குர்ஆன் 10:100)

எனவேதான் இஸ்லாம் கட்டாய மதமாற்றத்தை முற்று முழுதாக நிராகரிக்கிறது. இந்த இடத்தில் ஒரு சிறு சம்பவத்தைக் குறித்துக் காட்ட விரும்புகிறேன். கலீபா உமர் (ரலி) அவர்கள் ஆட்சித் தலைவராக இருந்தபோது, அவரிடம் ஒரு தேவையைப் பெற்றுக் கொள்வதற்காக கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஒரு மூதாட்டி அவரைச் சந்தித்தார். அவரின் தேவையை நிறைவேற்றியபின் அவருக்கு இஸ்லாத்தைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். அம்மூதாட்டி மறுத்துவிடவே தான் தவறுசெய்து விட்டதாக உணர்ந்த கலீபா அவர்கள் "இறைவா! நான் அப்பெண்ணை வற்புறுத்தவில்லை. இஸ்லாத்தில் நிர்ப்பந்தம் கூடாது" என்று கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுநிலைச் சமுதாயம்

முஸ்லிங்கள் என்றும் எப்போதும் ஒரு நடுநிலையான சமுதாய மாகவே இருக்கவெண்டுமென்று இஸ்லாம் வேண்டுகிறது. அல்லாஹ் கூறுகிறான்,

وَكَذَٰلِكَ جَعَلْنَٰكُمْ أُمَّةً وَسَطًا لِّتَكُونُوا۟ شُهَدَآءَ عَلَى ٱلنَّاسِ وَيَكُونَ ٱلرَّسُولُ عَلَيْكُمْ شَهِيدًا

*அவ்வாறே நாம் உங்களை நடுநிலையான சமூகத்தினராக ஆக்கினோம். நீங்கள் மற்ற மனிதர்கட்கு சாட்சிகளாக இருங்கள். நமது தூதர் உங்களுக்கு சாட்சியாக இருப்பார்.* (அல்-குர்ஆன் 2.143)

முஸ்லிம்கள் மட்டுமல்ல; மனித சமுதாயமே இந்த வழி முறையைப் பின்பற்ற வேண்டும். நிதானம் இழந்து தங்களை வானளவில் உயர்த்தி வாழ்ந்துவிடக் கூடாது. நிதானம், பொறுமை, சகிப்புத்தன்மை, பிறர் உரிமையை மதித்தல் போன்ற விடயங் களில் பக்குவமாகச் செயற்படவேண்டும். எப்போதும் எவ்விடயத் திலும் எல்லை கடந்துவிடக்கூடாது.

அல்லாஹ்கூறுகிறான்;

يَٰٓأَهْلَ ٱلْكِتَٰبِ لَا تَغْلُوا۟ فِى دِينِكُمْ

*வேதக்காரர்களே! உங்கள் மார்க்கத்தில் நீங்கள் அளவு கடந்து விடாதீர்கள்.* (அல்-குர்ஆன் 5.77)

பொதுவாக மார்க்கங்களில் உண்மைக்குப் புறம்பான வகையில் எல்லைகடந்து தங்கள் மார்க்கங்களைப் புகழ்ந்து பிற மதங்களை இகழ்ந்து கொண்டு திரிவதை இஸ்லாம் கண்டிக்கிறது. இதுபற்றி அல்-குர்ஆன் பல்வேறு இடங்களில் கண்டிக்கிறது. நபி (ஸல்) அவர்களும் "என்னை நீங்கள் வேதத்தையுடையவர்கள் ஈஸாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்திப் புகழ்ந்ததுபோல் புகழாதீர்கள்" என எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

அளவு கடந்து மார்க்க வழிபாடுகளில் ஈடுபடுவதையும் இஸ்லாம் ஏற்றுக்கொள்ளவில்லை. நபி தூதரின் மனைவி ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்;

சில சஹாபாத்தோழர்கள் நபிதூதரின் மனைவிமார்களிடம் அவர்களது இரகசிய வணக்கம் பற்றிக் கேட்டுவிட்டு சிலர் நான் இனி இறைச்சியை உண்ணமாட்டேன், மற்றும் சிலர் மனைவி மாருடன் சேரமாட்டேன், இன்னும் சிலர் படுக்கைக்குப் போக மாட்டேன் என்றனர். (முழுமையாக இரவில் வணங்கவும் பகலில் நோன்பு பிடிக்கவும் முடிவு செய்தனர்) இதனைக் கேள்வியுற்ற நபி (ஸல்) அவர்கள் சில மனிதர்கள் இவ்வாறு, இவ்வாறெல்லாம் கூறுகின்றனராம். நானோ நோன்பு பிடிக்கிறேன், நோன்பு இல்லாமலும் இருக்கிறேன். தூங்குகிறேன் விழித்தும் இருக்கிறேன். இறைச்சியும் சாப்பிடுகிறேன். பெண்களைத் திருமணமும் செய்துள்ளேன். எனது வழிமுறையை யார் புறக்கணிக்கின்றனரோ அவர் என்னைச் சார்ந்தவரல்ல'' என்றார்கள்.

(புகாரி, முஸ்லிம்)

வணக்கம் என்பது தலைக்கேறி முழுமையாக வணக்க வழிபாடுகளிலேயே ஈடுபட்டுக் கொண்டிருப்பதை மேற்கூறிய ஹதீஸ் மூலம் நபி (ஸல்) அவர்கள் கண்டித்திருப்பதை நாம் அவதானிக்க லாம். அவர்கள் கூறினார்கள். உனது உடம்புக்கும் உன்மீது கடமையுள்ளது. எனவே தூங்கும் நேரத்தில் தூங்கி எழும்ப வேண்டியதும் போஷாக்கான உணவை உடம்புக்கு வழங்க வேண்டியதும் கடமை என்பதை நபி அவர்கள் வலியுறுத்தி னார்கள். வயிற்றைப் பட்டினி போட்டு உடம்புக்கு ஓய்வின்றி தூக்கமின்றி வழிபாடுகளில் ஈடுபடுவதை இஸ்லாம் ஒரு போதும் ஏற்காது. மேலும் அது குறைவானதாயினும் நிரந்தரமான வணக்க முறையையே ஆதரிக்கிறது. "குறைவாயினும் நிரந்தரமாகச் செய்யும் அமலே சிறந்தது" என்பது ஹதீஸாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம் என்றும் ஒரு நடுநிலைப் போக்கையே ஆதரிப்பதை இதன் மூலம் நாம் காணலாம். நபி (ஸல்) அவர்களிடம் கஷ்டம், இலகு இரண்டுக்குமிடையே தெரிவுசெய்யுமாறு கேட்கப்பட்டால் அவர்கள் அவற்றில் இலகுவானவற்றையே தெரிவு செய்வார்கள். "இலகுபடுத்துங்கள் நீங்கள் கஷ்டப்படுத்தாதீர்கள்" என்பதும் அவர்களின் போதனைகளில் ஒன்று.

நடுநிலை சமுதாயமான முஸ்லிம்கள் எதிலும் நிதானமானவர் களாக இருக்க வேண்டும். அவசரம், ஆத்திரம் காரணமாக தீவிர முடிவுகளுக்கு அவர்கள் வரக்கூடாது. எதையும் நிதானமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்;

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ إِن جَآءَكُمْ فَاسِقٌۢ بِنَبَإٍ فَتَبَيَّنُوٓا۟ أَن تُصِيبُوا۟
قَوْمًۢا بِجَهَـٰلَةٍ فَتُصْبِحُوا۟ عَلَىٰ مَا فَعَلْتُمْ نَـٰدِمِينَ

*விசுவாசிகளே! தீயவன் எவனும் உங்களிடம் யாதொரு செய்தியைக் கொண்டுவந்தால் (அதன் உண்மையை அறியும் பொருட்டு) தீர விசாரணை செய்து கொள்ளுங்கள். (இன்றேல் அவனது சொல்லை நம்பிய உங்கள்) அறியாமையால் ஜனங்களுக்கு நீங்கள் தீங்கிழைத்து விட்டு பின்னர் நீங்கள் செய்தவைகளைப் பற்றி நீங்களே துக்கித்துக் கவலைப்பட நேரிடும்.*

(அல்-குர்ஆன் 49:6)

மேற்கூறிய விடயங்கள் அனைத்தும் இஸ்லாம் ஒரு நடுநிலையான, நிதானமான, நீதியான சமுதாயத்தை உருவாக்கவே விரும்புகிறது என்பதையும் வீண் பிரச்சினைகள் குழப்பங்களை ஏற்படுத்தி அதற்கு சமயச் சாயத்தைப் பூசும் மார்க்கம் அதுவல்ல என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதியாக

இஸ்லாம் அதன் பெயரைப்போன்றே உள்ளடக்கமும் சமாதானம் தான். மனித நேயத்தை வளர்ப்பதில் அது பெரும் பங்காற்றுகிறது. மனித இனத்தை ஒருதாய் பெற்ற பிள்ளைகள்போல் அது பார்க்கிறது. பல்வேறு இனங்களாக மக்கள் வாழ்வது பிரிவினைக்கு வழியாக அல்ல. அது அறிமுகத்துக்கு ஒரு வழி என்றும் கூறுகிறது. மனித இனத்திற்கு எதிரான அனைத்து செயல்களையும் படைத்தவனுக்கு எதிரான செயலாகவும், மனித சமூகத்துக்குச் செய்யும் சேவைகளை இறைவனுக்குச் செய்யும் சேவையாகவும் அது பார்க்கிறது. எனவேதான் ஒரு மனிதன் மற்ற மனிதனுக்கு எதிரான செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டுமென அது வேண்டுகிறது.

இவ்வாறு மனித நேயத்தை வளர்க்கின்ற இஸ்லாத்தை இன்று பயங்கரவாத மதமாகக் காட்டுவதில் மேற்கத்தியவாதிகள், அவர்களின் ஊடகங்கள் செயற்படுவது கவனிக்கத்தக்கதாகும். ஒரு முஸ்லிம் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும்போது அதற்கு இஸ்லாமிய பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தத்தேவையில்லை. அது சரியானதுமல்ல. ஒவ்வொரு மனிதனின் செயல்களுக்கும் அவர்களே பொறுப்பாளிகள்! அதற்காக ஒரு சமயத்தைக் குற்றம் சுமத்துவது பொறுப்பான செயலல்ல. அமெரிக்காவிலும் - பிரித்தானியாவிலும் ஒரு சிலர் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகின்றார்களென்றால் அதற்கு கிறிஸ்தவப் பயங்கரவாதம் என்று பெயர் சூட்டலாமா? அண்மையில் ஈராக்கில் பயங்கர ஆயுதம் இருக்கின்றதெனக் கூறி அதற்கான யுத்தத்தில் அமெரிக்காவும், பிரித்தானியாவும் இறங்கி அழித்த வீடுகள், கொலை செய்த மக்கள், சிறுவர்கள், விதவையாகிய பெண்கள், அங்கம் இழந்த சிறுவர்கள் எத்தனை! எத்தனை! மனித இனமே வெட்கப்படக்கூடிய இந்த வேலையை அந்த நாடுகள் செய்தன. அதற்காக கிறிஸ்தவர்கள் முஸ்லிம் ஈராக்கைத் தாக்கி அழித்தார்கள் என்று கூறலாமா? கூறுவோமா? இஸ்ரவேல் இன்று எவ்வளவு அட்டூழியங்களை பலஸ்தீன மண்ணில் புரிந்து கொண்டிருக்கிறது? சில வாலிபர்கள் கல்லெறிந்தால் அப்பகுதியிலுள்ள வீடுகளையே தகர்த்து தரைமட்டமாக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறார்கள். வகை தொகையற்ற முறையில் சிறுவர்களைக் கொன்று குவிக்கிறார்கள். இதனை உலகம் யூதப்பயங்கரவாதம் என்றா அழைக்கின்றது?

எனவேதான் உலகில் நடக்கும் ஒருசில பயங்கரவாதச் செயல்களை வைத்துக்கொண்டு இஸ்லாத்தைப் பயங்கரவாத மதமாகக் காட்டமுற்படுவது விசனிக்கத்தக்கதாகும். இஸ்லாத்தைப் பற்றிய அறிவின்மையே இவ்வாறான குற்றச் சாட்டுகளுக்குக் காரணமாகும்.

எந்தச் சட்டத்திலும் இல்லாதவாறு பயங்கரவாதச் செயல்களுக்கு இஸ்லாம் அளித்துள்ள தண்டனைகள் குறிப்பிடத்தக்கதாகும். இந்த உலகிலிருந்து பயங்கரவாதத்தைத் துடைத்தெறிய அது சட்டம் வகுத்துள்ளது. அரக்கர்களின் துன்பங்களினால் உரிமை மறுக்கப்பட்டு, உடமை இழக்கப்பட்டு உயிர்கள் பறிக்கப்பட்டு வாழும் மக்கள் பழிக்குப்பழி வாங்க முற்படுவதை பயங்கரவாதச் செயலாக நாம் கருத முடியாது.

நீதி உலகெங்கும் நிலைநிறுத்தப்பட வேண்டும். அநீதி அட்டூழியம் அழிக்கப்பட வேண்டும். சகல மதங்களையும் சமத்துவமாக, அனைத்து மானுடர்களையும் சகோதரர்களாக ஏற்கும் - நேசிக்கும் மனப்பாங்கு வளர்க்கப்படல் வேண்டும். அப்போதுதான் சாந்தி, சமாதானம் நிலைக்கும்.

இப்பூவுலகை சமாதான பூமியாகக் காண எம்மால் இயன்ற பங்களிப்பை நல்க முயலுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை நின்றவை

| ஆசிரியர் | நூல் | வெளியீடு |
| --- | --- | --- |
| இமாம் இப்னு கதீர் | தப்ஸீறுல் குர்ஆனில் கரீம் | தாறுஸ் – ஸலாம், றியாத் |
| இமாம் நவவி | றியாழுஸ் – ஸாலிஹீன் | றிஸாலா நிறுவனம் |
| இமாம் இப்னு தைமியா | அஸ் – ஸியாஸதுஷ் – ஷரஇய்யா இஸ்லாஹிர்ராயி – வர்ரமிய்யா | தாறுல் கிதாபில் அறபி, எகிப்து |
| ஷேக் கஸ்ஸாலி | ஹூலுகுல் முஸ்லிம் | முஸ்லிம் மாணவர் சம்மேளனம் |
| செய்யித் சாபிக் | பிக்ஹுஸ் – ஸுன்னா | இஹ்யாஉத்துறாதில் இஸ்லாமி கத்ர் |
| முஹம்மது குதுப் | மன்ஹஜுத்தர்பியதில் இஸ்லாமிய்யா | தாறுஸ் – ஸறூக் |
| மஹ்மூத் முஹம்மத் பாபிலவி | மஆனில் உஹுவ்வா பில் இஸ்லாம் | றாபிதா – மக்கா |
| முஹம்மத் ஹம்து ஹிள்று | அல் – இஸ்லாம் வஹுகூகுல் இன்சான் | மக்தபதுல் ஹயாத், லெபனான் |
| முஹம்மது றஜா ஹனபீ | மபாதிஉல் இஜ்திமாயிய்யா பில் இஸ்லாம் | றாபிதா – மக்கா |
| தல்அத் மஹ்மூத் சுகைரிக் | அல் – இஸ்லாம் வமகாரிமுல் அக்லாக் | குல்லியதுத் தஃவா, திரிப்போலி |
| சாலிஹ் பின ஹுசைன் ஆயித் | ஹுகூகு ஐரில் முஸ்லிமீன் பி பிலாதில் இஸ்லாம் | தாறுஇஸ்பீலியா |

### தமிழில்

| ஆசிரியர் | நூல் | வெளியீடு |
| --- | --- | --- |
| முஹம்மது பிக்தால் | இஸ்லாமிய கலைப்பண்பு | சன்மார்க்கத் தொண்டர் சபை, கூநல்லூர் |
| எம்.ஏ.எம். சுக்ரி கலாநிதி | இஸ்லாமும் மனித உரிமைகளும் | நளீமிய்யா |
| ஏ.ஆர்.எம். றூஹுல் ஹக் | இஸ்லாம் தந்த மனித உரிமைகள் | வக்பு அமைச்சு, சவூதி அரேபியா |
| எஸ். எச். ஆதம்பாவா | மதீனாவின் மாண்புகள் | வல் கலமி பப்ளிகேஷன் |
| எஸ்.எச். ஆதம்பாவா | இஸ்லாமிய வரலாறு | காஷிபுல் உலூம் மாணவர் மன்றம் |

### சஞ்சிகைகள்

| சஞ்சிகை | இதழ் | காலம் |
| --- | --- | --- |
| அல் – வஃயுல் இஸ்லாமி | இதழ் 191 | செப்டம்பர் 1980 |
| றாபிதத்துல் ஆலமில் இஸ்லாமி | விஷேட இதழ் | டிசம்பர் 1979 |
| றாபிதத்துல் ஆலமில் இஸ்லாமி | இதழ் 301 | மார்ச் 1990 |
| றாபிதத்துல் ஆலமில் இஸ்லாமி | இதழ் 318 | ஆகஸ்ட் 1991 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *About the Author*

*Al-Haj. Moulavi S. H. Athambawa (Madani) is an Honours Graduate from the University of Peradeniya and University of Madheena, Saudi Arabia. Thereafter, he pursued his higher studies at the Peradeniya University and obtained his Master's degree (M.A.) in Islamic Civilization.*

*At present he is the principal of Kalmunai Al- Hamiya Arabic College and serves as a visiting lecturer at the South Eastern University in Arabic Literature. He holds the post of President of the Jameyyathul Ulama of Ampara District, and the Jameyyathul Ulama Eastern Province, besides his being the Deputy President of the All Ceylon Jameyyathul Ulama (Council of Muslim Theologians). Also he is a member of the Waqf Board of Sri Lanka.*

*He is a well versed writer and has made his worthy contributions to the dailies and periodicals since 1969. Out of the four publications he has already published "Madeen-avin Manpuhal" won the Shahithya award. The forth publication "Islamiya Varalaru" (History of Islam) is an extract of a series of his talks broadcasted over the Radio.*

*Travelled widely to the countries as Germany, Swiss, U.K., Saudi Arabia, Bahrain, Qatar, Pakistan, India etc. and gained much knowledge.*

*He is the son of Mr. & Mrs. Al-Haj. Shahul Hameed of Sainthamaruthu, born on 01. 02. 1952. Married to Ummul, Varitha and is blessed with five children.*

STAR OFFSET PRINTERS - SAINTHAMARUTHU Tel/Fax 067 2229414 E-mail : staroffsetp@yahoo.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org